

புரட்சிப்

பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.org

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | டிச.1, 2011 | புரட்சி 10 | முழக்கம் 46 | விலை: ரூ.2.50


## கூடங்குளம் எதிர்ப்பில் அன்னிய சக்திகளா?

# இயற்பியல் விஞ்ஞானிகள் மறுக்கிறார்கள்

***அணுமின் திட்டங்களை உருவாக்குவதில் தான்சர்வதேச சக்திகளின் பின்னணி இருக்கிறதே தவிர, அத் திட்டத்துக்கான எதிர்ப்பில் இல்லை. அணுசக்தி பிரச்சினையில் அமெரிக்காவுக்கு பின்னால் ஓடுவது இந்தியா தான் என்று இயற்பியல் விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். 'இந்து' நாளேட்டில் (நவ.6) வெளிவந்த இயற்பியல் விஞ்ஞானிகளின் கருத்துகளின் சுருக்கம்:***

கூடன்குளம் அணுஉலை தொடங்கக் கூடாது; மூடவேண்டும் என்ற மக்கள் போராட்டம் தீவிர மடைந்துள்ள நிலையில், அணுமின் நிலைய நிர்வாகத்தினரால் வெளியிடப்பட்டுள்ள செய்தி அறிக்கை பிரச்சினைக்குரிய நிலையை ஏற்படுத்தி யுள்ளது. இந்திய அணுசக்தி வாரியத்தின் தலைமை நிர்வாகி கூடன்குளத்தில் நடைபெறுகின்ற போராட்டங்களின் பின்னணியில் வெளிநாட்டுச் சக்தி இருக்கின்றது என்று தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜெ. அப்துல்கலாம், அணு உலைகள் "100 சதவீதம் பாதுகாப்பானது" என்று தெரிவித்ததோடு, 'இந்து' ஆங்கிலப் பத்திரிகையில் நவம்பர் 6 ஆம் தேதி எழுதிய கட்டுரையில் அணுசக்தி நமக்குத் தேவை; அதுவே நம்முடைய நாடு வளர்ச்சியடைவதற்கும், வளமாவதற்கும் வழி வகுக்கும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதுபோன்ற கருத்துகள் நம்மை வரலாற்றின் பக்கங்களைப் பின்னோக்கிப் பார்க்கச் செய்கின்றது. உதாரணத்திற்கு ஜவகர்லால் நேரு அணுசக்தி புரட்சியைத் தொழிற் புரட்சியோடு ஒப்பிட்டார். நீங்கள் அந்த வளர்ச்சியோடு செல்லாவிடில் மற்றவர்கள் உங்களை முந்திச் செல்ல நேரிடும். நீங்கள் பின் தொடர்ந்து செல்ல நேரிடும் என்றார். ஆனால், கடந்த அரை நூற்றாண்டில் அவர் கணித்தபடி அணுசக்தி எதிர்பார்த்த முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை. பொருளாதார ரீதியான வளர்ச்சி, எதிர்பார்த்த நாட்டின் வளர்ச்சி தவறான கருத்தாகவும் வரலாற்றுப் பிழையாகவும் அமைந்து விட்டது.

அணுசக்தி உற்பத்திக்கான வாய்ப்பு தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் அணுசக்தித் துறை ஏராளமான அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது. அணுசக்தியில் வல்லமை பெறுவதைக் குறித்துச் சொல்லப்பட்ட தொலைநோக்குத் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஏனென்றால் அந்தத் திட்டங்கள் வாயிலாக நாம் எதிர்பார்த்த பலனை அடையவில்லை. உதாரணத்திற்கு 1970-களின் தொடக்கத்தில் அணுசக்தி மூலமாக 43,500 மெகா வாட் மின்சாரம் வரை உற்பத்தி செய்ய 2000 ஆம் ஆண்டு வரை இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், உற்பத்தி செய்ய முடிந்த மின்சார அளவு வெறும் 2,720 மெகா வாட் மட்டும்தான்.

கடந்த ஆண்டு அணுமின் நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தில் 2.8 சதவீதம் மட்டுமே. குறைந்த அளவே மின்சாரம் அணு உலைகளின் மூலமாக உற்பத்தி செய்யப் பட்டாலும் மற்றவைகளோடு ஒப்பிடும்போது உற்பத்திச் செலவு அதிகமே. தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் அணுசக்தித் திட்டத்திற்குப் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த போதிலும் அணு சக்தித் திட்டங்கள் தோல்வியைத்தான் சந்தித் துள்ளன. எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை.

சில வருடங்களாக அணுசக்தித் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் எதிர்காலக் கனவிற்கு ஓர் உந்துதல். அது இந்தியா - அமெரிக்கா அணுசக்தி உடன்பாட்டின் மூலம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் மன்மோகன் சிங் அரசின் வெளிநாட்டுக் கொள்கை மேற்கத்திய நாடுகளுடனான உறவை மேம்படுத்த அவர்கள் பக்கம் சாய்வதற்கு ஏதுவாக அமைந்தது. அமெரிக்க நாட்டைப் பொறுத்தவரை ஜார்ஜ் புஷ்ஷுக்கு ஆலோசகராக இருந்த ஆஸ்லி டெல்லிஸ் அவர்களின் கூற்றுப்படி இந்தோ-அமெரிக்க ஒப்பந்தம் முழுமையான உற்பத்தியோடு கூடிய ஓர் ஒப்பந்தம் என்று வர்ணித்தார். ஆனால், இந்த உறவு சம பலம் பொருந்தியவர்களுக்கிடையே ஏற்பட்டது அல்ல.

இதன் மூலம் இந்தியா அமெரிக்காவின் திட்டமிட்ட வியூகத்தைப் பின்பற்றக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, பன்னாட்டு அணுமின் முகாமத்தில் ஈரான் சம்பந்தமான பிரச்சினை எழுந்தபோது, அமெரிக்க நிலையை ஏற்றுக் கொண்டு இரண்டு முறை ஈரானுக்கு எதிராக வாக்களித்தது. அதன் மூலம் நிறைவேற்றப்பட இருந்த ஈரான்-பாகிஸ்தான்-இந்தியா இடையேயான குழாய் மூலம் கொண்டு வர இருந்த எரிவாயுத் திட்டம் நிறுத்தப்பட்டது. நமது எரிசக்தியைப் பலப்படுத்து வதற்கான வாய்ப்பு நழுவி விட்டது.

> **செர்னோஃபில்லில் நடந்த விபத்தில் 57 பேர்தான் உயிரிழக்க நேரிட்டது. 9000 பேர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்தார்கள்.**

மன்மோகன் சிங் அரசு இந்தோ-அமெரிக்க ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதற்காக இன்னும் அதிக விலையைக் கொடுக்கத் தயாராக உள்ளது. முன்னாள் அணுமின் சக்தித் துறையின் தலைவராக இருந்த அனில் காக்கோடடர் மராத்தி நாளிதழ் ஒன்றில் எழுதிய கட்டுரையில் இந்தியா பல கோடி பில்லியன் டாலர் செலவு செய்து அணு உலைகளை இறக்குமதி செய்து மேலை நாடுகளை யும் அங்குள்ள கம்பெனிகளின் வர்த்தகத்தையும் மேம்படுத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது என்று தெரிவித்துள்ளார். இதுபோன்ற இறக்குமதி களும் அதற்கு வழிவகுத்த வெளியுறவுக் கொள்கை யும் மீண்டும் ஒரு புதிய காலனி ஆதிக்கத்தை நினைவூட்டுகிறது.

எனவே, "வெளிநாட்டுச் சக்திகள்" அணுஉலை களின் விரிவாக்கத்தில்தான் உள்ளது. ஆங்காங்கே அமைய உள்ள அணுமின் நிலையத்திற்கு எதிராக நடைபெறுகின்ற போராட்டத்தில் அந்நிய சக்திகள் இல்லை. அந்நிய சக்திகளின் சதி என்ற கருத்து அணுமின் நிலைய கழகத்தால் ஆங்காங்கே பரப்பப்படுவது மக்களின் நியாயமான கவலையை முறியடிப்பதற்கான முயற்சியே.

கூடன்குளத்தில் கிராம மக்கள் எழுப்பிய எதிர்ப்புக் குரல் ஆரம்பத்தில் இருந்து புறக்கணிக்கப் பட்டு எள்ளி நகையாடப்பட்டது. விரக்தியின் உச்சத்திற்குப் போன மக்கள் போராட்டத்தை மேலும் வலுவாக்கினார்கள். கூடன்குளம் அணுஉலைக்காக செலவிடப்பட்ட மக்கள் பணம் விரயமாவதற்கும் மக்களின் பிடிவாதம் காரணமல்ல. ஆரம்பம் முதல் அந்த மக்கள் எழுப்பிய அச்சத்தைப் போக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததுதான் இந்த நிலைக்குக் காரணம்.

அப்பகுதியில் வாழும் மக்களுக்குத் தங்கள் கவலையைச் சொல்ல, அச்சத்தை வெளிப்படுத்த உரிமை உள்ளது. அணு உலை விபத்துகள் பேரழிவை ஏற்படுத்தி மக்களின் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடியன. புகுசிமா அணு உலையால் ஏற்பட்ட ஆபத்தை உணர்ந்து கொள்ள நீண்ட நாளானது. ஆனால், முடிவு மரண ஓலம்தான்.

செர்னோஃபில்லில் நடந்த விபத்தில் 57 பேர்தான் நேரிடையாக உயிரிழக்க நேரிட்டது என்று அணுஉலை ஆதரவாளர்கள் தெரிவித்தாலும் உலக நலக் கழகம் 9000 பேர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்தார்கள் என்று தெரிவித்தது. அமெரிக்கா விலுள்ள புற்றுநோய் மையம் நடத்திய ஆய்வில் செர்னோஃ பில்லில் இருந்து வெளியான அயோடின்-131 அணுக் கசிவால் பாதிப்புக்குள்ளான குழந்தைகள் இன்றும் தைராய்டு புற்றுநோய்க்கு ஆளாகின்றனர். சமூகத்தில் பரவுகின்ற நோய்க் கிருமிகள் குறித்து ஆய்வு செய்பவர்கள் செர்னோஃபில் விபத்தால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த அவர்களுடைய மதிப்பீடு அதிக அளவில் உள்ளது. இன்றும் செர்னோஃபில் அணு விபத்தால் பாதிக்கப்பட்ட 10000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கடுமையான ஆய்வுக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளது. ஏனெனில் அந்தப் பகுதியானது சீசியம்-137 என்ற கதிர்வீச்சை வெளிப்படுத்துகிறது. தாக்கம் 30 ஆண்டு காலத்திற்கு வீரியமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

விண்வெளி விஞ்ஞானிகள் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் நடத்திய ஆய்வில், புகுசிமா அணுஉலையில் ஏற்பட்ட விபத்தில் சீசியம்-137, அதாவது, செர்னோஃபில்லில் ஏற்பட்ட விபத்தில் 40 சதவீதம் அளவுக்கு அணுக்கசிவு ஏற்பட்டுள்ளது கணடறியப்பட்டுள்ளது. புகுசிமா விபத்தின்போது காற்றின் வீச்சு பசிபிக் பெருங்கடலை நோக்கிக் குறிப்பிட்ட அளவுக்கு இருந்ததால் அங்கும் கதிர்வீச்சின் தாக்கம் உள்ளது. செர்னோஃபில் விபத்தில் பாதிக்கப்பட்ட இடத்தில் 10 சதவீத பகுதி பாதிப்புக்கு ஆளாகியுள்ளது. காற்றின் திசை என்றும் நமக்குச் சாதகமாக இருக்காது. இந்தப் புள்ளி விவரங்களை இந்தியா கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தியாவில் பெரும்பாலான மக்கள் நிலத்தையும் கடலையும் நம்பியே வாழ்கின்றனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

விஞ்ஞான ரீதியாக தற்போதைய அணு உலைகள் மற்றும் கூடன்குளத்தில் இருக்கக்கூடிய வி.வி.இ.ஆர். அணு உலைகள் அனைத்தும் 100 சதவீதம் பாதுகாப்பானது என்று சொல்லப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. எல்லா அணுஉலைகளும் ஓரளவுக்குக் குறைந்த வாய்ப்புடைய பாதிப்பை ஏற்படுத்தவல்லது. ஆரம்பத்தில் வி.வி.இ.ஆர். அணு உலைகளின் கட்டுப்படுத்தப்பட்ட உலோக இயக்கத்தில் பிழை இருந்தது. மார்ச் 1, 2006 ஆம் ஆண்டு பல்கேரியாவில் உள்ள கொழுடி அணு உலையின் 4 ஆவது பிரிவில் மோட்டார் சாதனத்தில் ஏற்பட்ட தடை, மின் உற்பத்தி 67 சதவீதமாக குறைந்தபோது கட்டுப்படுத்தப்பட்ட உலோக இயக்கம் பாதிக்கப்பட்டது. அதாவது 61 இல் 22 உலோகங்கள் இயங்கவில்லை. மேற்சொன்ன குறைபாடு அணு உலைப் பாதுகாப்பில் விபத்தை ஏற்படுத்த வல்லது.

சாதாரண மறைமுக சோதனை மூலமாகவே வல்லுநரல்லாத ஒருவரே அணுஉலைப் பாதுகாப்பை மதிப்பீடு செய்ய முடியும். அணு உலைகளினால்

4 ஆம் பக்கம்

# பன்னாட்டு நிறுவனங்களுக்காகவே அணுமின் நிலையம்; மக்களுக்கல்ல

*அணுமின் சக்தி உற்பத்தி – பன்னாட்டு நிறுவனங்களின் தேவைக்கே தவிர, மக்களுக்கல்ல; பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டலுக்காக, மக்களுக்கு ஆபத்தான திட்டங்கள் தேவையா, என்று கேட்கிறார் கட்டுரையாளர். இவர் ஒரு மின் பொறியாளர்.*

மனித இனத்தின் வளர்ச்சிக்கு சோசலிச சிந்தனையின் வழிபட்ட அரசும், மின் சக்தியும் அவசியம் என்று மாமேதை லெனின் சோவியத் விடுதலையின்போது குறிப்பிட்டார். அணுமின் சக்தி பேரழிவை உள்ளடக்கியது என்பதை அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

அணுமின் சக்தியின் தேவை குறித்து பேசுவோர் இதனை குறைத்து மதிப்பிடுவது கவலையளிக்கிறது. அணுமின் சக்தியை எதிர்ப்பவர்கள் அறிவியல் பார்வையற்றவர்கள் எனவும் பொது மக்களின் அச்சங்களை அரசு போக்க வேண்டும் எனவும் அவர்கள் பேசுகின்றனர்.

இந்நாட்டில் உற்பத்தியாகும் மின்சக்தி நம் மக்களின் தேவைகளுக்கு, வேலை வாய்ப்பிற்கு, உள்நாட்டு நுகர்வுக்கான உற்பத்திக்கு என முன்னுரிமை கொடுத்து திட்டமிடுவதை விடுத்து, “ஏற்றுமதிக்கான பொருளாதார நோக்கில் செலவிடப்படுகிறது என்பதை உணர மறுப்பது, உலகமயமாக்கல் கருத்தியலின் வெற்றியாகும். எடுத்துக்காட்டாக, சென்னை துறைமுகத்திலிருந்து தினமும் 300 மகிழுந்துகள் ஏற்றுமதியாகின்றன. இது 16 இலட்சம் யூனிட் செலவில் உருவானது!

இது போலவே மென் பொருள் நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள் (பி.பி.ஓ.), பன்னாட்டு நிறுவனங்கள், மல்டிபிளக்ஸ் திரை அரங்குகள், மால்ஸ் எனும் பேரரங்குகள், கேளிக்கை-விற்பனை அரங்குகள் என சென்னை பகுதியில் அமைந்துள்ள 1000க்கும் மேற்பட்ட குளிரூட்டப்பட்ட கட்டடங்கள் நாளொன்றுக்கு பல லட்சம் யூனிட்டுகள் மின் சக்தியை நுகர்கின்றன.

இந்தியாவில் தனி மனித ஆண்டு மின் நுகர்வு 704 யூனிட்டுகள். மக்கள் தொகையில் 33% பேர் மின் இணைப்பற்றவர்கள். இந்த நுகர்வு ஐரோப்பியர்களின் நுகர்வில் 11% மட்டுமே. எனவே இந்திய ஆட்சியாளர்கள் உரத்து கூச்சலிடும் மின் சக்தி தேவை என்பது யாருடைய நலன்களுக்காக என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

நம் நாட்டில் 65%, மக்கள் வேளாண் துறையை சார்ந்துள்ளனர். அவர்களது உற்பத்தி திறனையும் உற்பத்தியையும் பெருக்கவும், நெசவாளர்களுக்கு உதவவும் செலவாகும் மின்சக்தி மிகக் குறைவு என்பது திட்டமிடலின் குறைபாடு. இது பெருவாரியான மக்களுக்கெதிரான செயல் என்பது தெளிவாகும்.

இந்தியா உலக மக்கள் தொகையில் 17%, எரி சக்தி பயன்பாடு 4%, அமெரிக்கா உலக மக்கள் தொகையில் 5% மட்டுமே. ஆனால் எரி சக்தி பயன்பாடோ 24%. உலகின் மிக பணக்கார நாடான, தொழில் நுட்பத் திறனில் முன்னோடியான, அமெரிக்கா தனது தேவையில் 10% க்கும் குறைாகவே அணுமின் சக்தியை உற்பத்தி செய்கிறது.

கடந்த 30 ஆண்டுகளாக ஒரு அணு மின் நிலையத்தைக்கூட கட்டவில்லை. படிப்பறிவால் உலகின் முன்னோடியாக உள்ள அந்நாட்டு மக்களின் அச்சத்தைப் போக்க அமெரிக்க அரசினால் இயலவில்லை. வேண்டுமானால் நமது பிரதமர் மன்மோகன்சிங் தனது குழுவை அனுப்பி அச்சம் தவிர்க்க அமெரிக்காவுக்கு உதவலாம். அதன் மூலம் அன்னிய செலாவணியை ஈட்டலாம்.

இந்தியாவில் தற்போது அணுமின் சக்தி 2.70% மட்டுமே. மின் சக்தியை கடத்துவதிலும், விநியோகிப்பதிலும் ஏற்படும் இழப்பு 25% (உலகத் திறன் 9% மட்டுமே). இதை மேம்படுத்துவதின் மூலம் 16% இழப்பை மிச்சப்படுத்தலாம். இதுபோல மின் திறன் மேம்பாடுகளின் மூலம் குறைந்தது 15% மிச்சப்படுத்தலாம்.

நீர் மின் நிலையங்கள் 90,780 மெகாவாட் நிறுவ வாய்ப்புள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன. குஜராத், ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பாலைவனப் பகுதி 2 லட்சம் சதுர கிலோ மீட்டர். இங்கு சூரிய மின் சக்தி நிலையங்கள் அமைக்கலாம்.

மன்மோகன் சிங், சோனியா காந்தி வழிகாட்டுதலின்படி, உலக மயமாக்கல் போர்வையில் இந்தியாவை மேலைநாடுகளின் சந்தைக்காடாக மாற்றி வருகிறார். இதை பா.ஜ. கட்சியும் ஆதரிக்கிறது என்பதை விக்கி லீக்ஸ் பலமுறை அம்பலப்படுத்தியிருக்கிறது. வரும் 20 ஆண்டுகளில், 40 ஆயிரம் மெகாவாட் அணுமின் நிலையங்களை, 6.4 லட்சம் கோடி ரூபாயில் அமைக்க இந்தியா திட்டமிட்டிருக்கிறது. இது வெளிநாட்டு நிறுவனங்களின், மக்களின் நன்மைக்கே உதவும் என்பது தெளிவு.

அணுமின் நிலைய விபத்துக்களில் சில:

1. 4 மே 1987 இல் கல்பாக்கம் அணுமின்நிலையத்தில் ஒரு விபத்து ஏற்பட்டது (Core rupture). 2 ஆண்டுகள் மூடப்பட்டது. செலவு 300 மில்லியன் டாலர்.
2. 10 செப்டம்பர் 1989 - தாராப்பூர் ஐயோடின் கசிவு - கதிர்வீச்சு பாதுகாப்பு அளவைவிட 700 மடங்கு அதிகம். செலவு 78 மில்லியன் டாலர்.
3. 3 பிப்ரவரி 1995 - கோட்டா ராஜஸ்தான் - ஹீலியம்/கனநீர் கசிவு. 2 ஆண்டுகள் மூடல் - செலவு 280 மில்லியன் டாலர்.
4. 22 அக். 2002 - கல்பாக்கம் - 100 கிலோ - சோடியம் (கதிர் வீச்சு) கசிவு - செலவு 30 மில்லியன் டாலர்.

எல்லா உற்பத்தி நிகழ்வுகளிலும் விபத்துகள் என்ற தாங்கக்கூடிய அழிவு என்பதை உள்ளடக்கியதாக உள்ளது உண்மைதான். ஆனால், அணுமின் நிலையங்களில் பேரழிவு நிகழ வாய்ப்புள்ளது.

இது இயற்கை சீற்றங்களினால் மேலும் உயரும் என்பது உண்மை. இம் மின் நிலையங்களில் பெறப்படும் கழிவுப் பொருட்களின் பாதியை சரிசெய்யவே 25000 ஆண்டுகளாகும். இது பாதுகாப்பா? வருங்கால சமுதாயத்திற்கு நாம் விட்டுச் செல்லும் பேராபத்தா?

அணுமின் நிலையத்தில் உற்பத்தி இலக்கை அடைய பல மணி நேர இயக்கத்திற்கு பின்னரே இயலும். இதை கிரிட்டிக்கல் என குறிப்பர். இதன் இயக்கத்தை நிறுத்தவும் பல மணி நேரமாகும். எனவேதான் இந்நிலையத்தை Base load station என்று அழைப்பர். சுனாமியின்போது ‘ரியாக்டரை’ குளிர்விப்பது என்பது மிகவும் சிக்கலானது என்பதை ஜப்பானில் புகுசிமா அணுமின்நிலைய விபத்தின் போது அறிய முடிந்தது.

இதன் கதிர்வீச்சு 200-300 கி.மீ. அளவுக்கு போனது. இது கல்பாக்கம் / கூடங்குளத்துக்கும் பொருந்தும். எனவே உலக மயமாக்கல், ஏற்றுமதி பொருளாதாரம் என்ற மாயையிலிருந்து விலகி நமது மண்ணுக்கேற்ற பொருளாதாரம், பெருவாரியான மக்களின் உழைப்பு சார்ந்த உற்பத்தி முறைக்கு முன்னுரிமை என்று திட்டமிட்டால், அணுமின்சக்தி இல்லாமலேயே நாம் சிறப்பாக வாழ முடியும்.

**– பொன் . ஏழுமலை**

# இந்தியாவில் நடந்த அணுமின் விபத்துகள்

*அணுமின் நிலையங்களில் நேர்ந்த விபத்துகளைப் பட்டியலிட்டு ‘தினமணி’ நாளேட்டில் ஆர்.எஸ். நாராயணன் எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி:*

இந்திய அணுமின் நிலையத் தலைவர் எஸ்.கே.ஜெயின் கூறும்போது, “எங்களிடம் அணுஉலைகள் பற்றிய அறிவு முழுமையாக உள்ளது. இந்தியாவில் நிறுவப்பட்ட அணு உலைகள் அனைத்தும் எப்படிப்பட்ட பூகம்பத்தையும் எப்படிப்பட்ட சுனாமியையும் தாங்கும் சக்தி படைத்தது” என்று கூறியுள்ளார்.

இந்தியாவில் எப்படி அணு உலைகள் பத்திரமாக இயங்கி வரும் இலட்சணத்தை அறிவது நன்று. மொத்த மின்சார உற்பத்தியில் 3 சதவீதம் மட்டுமே வழங்கும் அணுசக்தித் துறை விஞ்ஞானிகளின் அலட்டலுக்கு ஒரு குறையுமில்லை. தாராப்பூரில் மட்டும் 1980 களில் தொடங்கி இன்று வரை சுமார் 400 தொழிலாளர்கள் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தில்லியிலிருந்து 200 கி.மீ. தூரத்திலுள்ள நாரோராவில் தீ விபத்து ஏற்பட்டு அணு உலை கட்டடம் வரை தீ பரவியது. அப்போது அமைக்கப்பட்டிருந்த அவசரநிலை ஏற்பாடுகள் எதுவும் வேலை செய்யவில்லை. நல்லவேயைாக தீ தானாகவே அணைந்துவிட்டதால் மாபெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. கைகாவில் சோதனையின்போது தவறான வடிவமைப்பால், கட்டுமானம் சரிந்தது. நல்லவேளையாக அப்போது அணுஉலை வேலை செய்யாததால் மாபெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

ராஜஸ்தான் அணுமின் நிலையத்தின் கதிர்வீச்சுக் கழிவுகள் 1995 இல் ஏரியில் விடப்பட்டதை மூன்று மாதம் கடந்து கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. 2003 இல் கல்பாக்கத்தில் ஆறு தொழிலாளர்கள் கூடுதல் கதிர்வீச்சுக்கு ஆளாகி மடிந்துள்ளனர். இந்திய அணுசக்தி வரலாற்றில் பணியாளர்கள் நேரிடையான கதிர்வீச்சுக்கு ஆளானது அனுமதிக்கப்படும் அளவுக்கு மேல் தாக்கப்பட்டதில் மோசமான ஒன்று.

கைகா அணுமின் நிலையத்தில் தொழிலாளர்களின் சிறுநீர்ப் பரிசோதனையின் போது கூடுதல் அளவில் ட்ரைட்டியம் இருப்பது புலனானதைத் தொடர்ந்து 2009 இல் தொழிலாளர் போராட்டம் வெடித்தது. விசாரணையின்போது தெரியவந்த விவரம் குடிதண்ணீர்த் தொட்டியில் ட்ரைட்டியம் கலந்துள்ளதும் புலனாயிற்று. ட்ரைட்டியம் குருதியில் கலந்தால் புற்றுநோய் ஏற்படும்.

1962 இல் இயற்றப்பட்ட அணு மின்சாரச் சட்டம், அணுசக்தித் துறைக்கு அவர்கள் விரும்பாத விஷயங்களைத் தெரியப்படுத்த வேண்டாம் என்ற சுதந்திரத்தை வழங்கியுள்ளது. உண்மையை மறைக்கும் அதிகாரம் - “நமது அணுசக்தி பலம் பாகிஸ்தானுக்கோ - சீனாவுக்கோ தெரிய வேண்டாம்” என்பது சரி. ஆனால், இயந்திரக் கோளாறு - அவசரகால பாதுகாப்பு கோளாறு - கட்டுப்படுததப்படாத கதிர்வீச்சுக் கழிவு.... பற்றிய செய்திகளை எப்படி மூடி மறைக்க முடியும்? எப்படியோ 2 ஜி ஊழல்போல் கசிந்து விடுகிறது.

யுரேனியம் தோண்டி எடுப்பதிலிருந்து அணுஉலை செயல்படும் வரை நிகழ்த்தப்படும் அணு எரிசுழற்சியில் - ஒவ்வொரு கட்டத்திலும் கதிர்வீச்சுக் கழிவு ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. மண்ணில் சேரும் இக்கழிவின் கதிர்வீச்சு சக்தியின் ஆபத்து ஆயிரம் ஆண்டுகள் நீடிக்கும். அணுமின் கழிவு பற்றிய ஆபத்தைப் பற்றி அணுமின் துறை ஒப்புக் கொள்ளவே மறுக்கிறது.

வங்காள விரிகுடாவில் எந்தவிதமான சுனாமியும் ஏற்படாது என்றோ - கடல் நீர் பெருக்கெடுத்து கடற்கரை நகரை அழிக்காது என்றோ என்ன உத்தரவாதம் உள்ளது? பாண்டியர் துறைமுகம் கொற்கை அழிந்தது. சோழர் துறைமுகம் பூம்புகார் அழிந்தது. பல்லவர் துறைமுகம் மாமல்லபுரமும் அழிந்தது. அப்படி இருக்கும்போது, கல்பாக்கமும், கூடங்குளமும் அழிக்க முடியாத ஆயிரங்காலத்துப் பயிரா என்ன? ஒருக்கால் அப்படி அழியுமானால்... மக்களோ, மரமோ, பயிரோ எஞ்சினால் நமது வாய்ப்பு தான்! இவ்வளவு மக்கள் எதிர்ப்புகளைப் புறந்தள்ளிக் கூடங்குளம் அணுமின் உலைகள் நிறுவப்படுமானால் வரலாறு நம்மை ஒருபோதும் மன்னிக்கப் போவதில்லை.

## நெய்வேலி மின்சாரம் தமிழகத்துக்கு மட்டும் கிடைத்தாலே போதும்: கூடங்குளம் தேவை இல்லை

*கூடங்குளம் அணுமின் திட்டத்தை ஆதரித்து, முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் கூறியுள்ள கருத்துகளை முழுமையாக மறுத்து பழ.நெடுமாறன், அப்துல்கலாமுக்கு திறந்த மடல் ஒன்றை 'தினமணி' நாளேட்டில் எழுதியுள்ளார். அதில் தமிழகத்தின் மக்கள் தேவைக்கு தமிழகத்தில் உற்பத்தியாகும் மின்சாரமே போதுமானது என்றும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் மாநிலங்களுக்கும் மின்சாரம் வழங்கப் படுவதால் தான் இந்த நெருக்கடி என்றும் விளக்கியுள்ளார். பழ. நெடுமாறன் கட்டுரை யிலிருந்து ஒரு பகுதி:*

*தமிழகம் வளர்ச்சிப் பாதையில் செல்ல வேண்டுமானால் அதற்கு அவசியமான கட்டமைப்பு மின்சாரம் ஆகும். இந்தியாவிலேயே ஒரே இடத்தில் 2000 மெகாவாட் மின் உற்பத்தி, இன்னும் சில ஆண்டுகளில் 4000 மெகாவாட் மின் உற்பத்தி அணு மின்சாரம் மூலம் நடைபெற இருக்கிறது என்பது தமிழகத்துக்கு மிகப் பெரிய செய்தியாகும்.*

*கிட்டத்தட்ட 20 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு திருநெல்வேலி மாவட்டத்துக்கு வர வாய்ப்புள்ளது. இந்த மின்சார உற்பத்தியில் கிட்டத்தட்ட 50 சதவீத மின்சாரம் தமிழகத்துக்குக் கிடைக்க இருக்கிறது எனவும் தமிழக மக்கள் நாவில் தேனைத் தடவ முயற்சி நீங்கள் செய்திருக் கிறீர்கள்.*

*உச்சநீதிமன்றம், நடுவர் மன்றம் ஆகியவை அளித்த தீர்ப்புகளுக்குப் பின்னாலும் காவிரி நீரைத் தமிழகத்துக்குத் தர மறுக்கும் கர்நாடகத்துக்கும், முல்லைப் பெரியாறு அணையை இடிக்கத் துடிக்கும் கேரளத்துக்கும், பாலாற்றை வழிமறிக்கும் ஆந்திரத்துக்கும் கூடங்குளம் மின்சாரத்தில் பாதி அளிக்கப்பட இருக்கிறது.*

*கூடங்குளம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியாகப் போகும் மின்சாரத்தில் 50 சதவீதம் மட்டுமே தமிழகத்துக்கு அளிக்கப்படும் என்பதை பெரிய வாய்ப்புப்போல கூறியிருக்கிறீர்கள். மீதமுள்ள மின்சாரம் பிற தென்மாநிலங்களுக்கு வழங்கப்பட இருக்கிறது. ஆனால், அணு உலையில் விபத்து ஏற்பட்டால் அதன் விளைவாக உருவாகும் அபாயம் தமிழ்நாட்டுக்கு மட்டுமே. இது என்ன நியாயம்?*

*ஏற்கனவே நெய்வேலியில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் இந்த மூன்று அண்டை மாநிலங் களுக்கும் சேர்த்து நாள் ஒன்றுக்கு 26 கோடி யூனிட் மின்சாரம் சென்று கொண்டிருக்கிறது. ஆனால், தமிழகத்தின் மின்சாரப் பற்றாக்குறை நாள் ஒன்றுக்கு 22 கோடி யூனிட்தான் ஆகும் என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமா? நெய் வேலியில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுமையும் தமிழகத்துக்குக் கொடுத்தால் கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு அவசியம் இருக்காதே.*

*தமிழ்நாட்டின் மின் பற்றாக்குறையைப் போக்க பன்னாட்டு நிறுவனங்கள், பெரும் தொழில் நிறுவனங்கள் ஆகியவை தாங்களே மின்நிலையங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என தமிழக அரசு வகுத்துள்ள திட்டத்தின்படி 3000 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட 5 அனல்மின் நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரித்தால் மின்பற்றாக்குறையைச் சமாளிக்க முடியும்.*

*தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின் பற்றாக் குறைக்கு பன்னாட்டு நிறுவனங்களுக்கு சில ஆண்டுகளுக்கு இலவசமாகவும், பிறகு குறைந்த கட்டணத்திலும் மின்சாரம் வழங்கப்படுவதும்தான் காரணமாகும். பன்னாட்டு நிறுவனங்கள் சொந்த மாகவே அனல் மற்றும் காற்று மின்உற்பத்தியைச் செய்து கொள்ள வேண்டும் என வற்புறுத்தப்பட வேண்டும். அரசு உற்பத்தி செய்யும் மின்சாரம் மக்கள் பயன்பாட்டுக்கும் சிறு மற்றும் குறுந் தொழில்களுக்கு மட்டுமே அளிக்கப்பட வேண்டும் – என்று பழ.நெடுமாறன் எழுதியுள்ளார்.*

# அணுகுண்டு தயாரிப்பதே, நோக்கம்!

கூடங்குளம் அணுமின்திட்டம் தொடங்கிய வரலாற்றையும், அதற்கு எதிராக அப்போதே நடந்த போராட்டங்களை திசை திருப்ப நடந்த முயற்சிகளையும், மின்சாரம் தயாரிப்பதைவிட அணுகுண்டுக்கான மூலப் பொருளைத் தயாரிப்பதே இதன் நோக்கம் என்றும் விரிவாக விளக்குகிறது, இக்கட்டுரை. 'தீரா நதி' நவம்பர் மாத இதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம்:

1977 இல் மொரார்ஜி தேசாய் இந்தியப் பிரத மராய் இருந்தபோதே புதிய அணுமின் நிலையம் அமைப்பது பற்றி பேசப்பட்டது. பின்பு பல வருடங்கள் சென்று 26.11.1988 இல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், அன்றைய சோவியத் ரஷ்யாவின் ஜனாதிபதி கோர்பசேவும் சேர்ந்து கூடங்குளம் அணுஉலை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

கூடங்குளம் அணுஉலை ஒப்பந்தம் கையெழுத்தான காலத்திலிருந்தே இதனை எதிர்க்கும் போராட்டங்கள் தொடங்கின.

1990களில் சோவியத் ரஷ்யா உடைந்தது அல்லது உடைக்கப்பட்டது. அதோடு பல வருடங்களாக சர்ச்சைக்குள்ளான கூடங்குளம் அணுஉலை பற்றிய பேச்சு முடங்கி முடமானது. எனவே இதை எதிர்த்துப் போராடியவர்கள் அணு வுலை கைவிடப்பட்டது என எண்ணி ஓய்ந்தனர்.

ஆனால், 25.03.1997 இல் அன்றைய ரஷ்ய அதிபர் போரிஸ் எல்ட்சினும், இந்தியப் பிரதமர் தேவ கவுடாவும், 1988 ஒப்பந்தத்தை தூசி தட்டி எடுத்துப் புதுப்பித்தனர். 7.10.2001 இல் கூடங்குளத்தில் அணு உலைக்கு அடிக்கல் நாட்டப் பட்டது. 6.1.2001 இல் அன்றைய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் ரஷ்யா சென்றார். அப்போது மாஸ் கோவில் இந்திய அணுசக்தி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், வி.கே.சதுர்வேதியும், ரஷ்ய ஆட்டம்ஸ்ராய் எக்ஸ்போர்ட் பொது இயக்குநர் விக்டர் கோஸ்லாவ்வும் புது ஒப்பந்தத்தில் 2 அணு உலைகளின் கட்டுமானப் பணிகள் தொடங்கி முடுக்கி விடப்பட்டன.

> **வறுமை நிறைந்த இந்தியா, சீனாவைப் பின்தள்ளி வட்டார வல்லரசாக, கூடங்குளம் அணுஉலையைப் பயன்படுத்த நினைக்கிறது என்பதே உண்மை.**

அப்போது மீண்டுமாய் ஆங்காங்கு எதிர்ப்புக் குரல்களும், போராட்டங்களும் எழுந்தன.

அணுஉலை கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டபோது, கூடங்குளத்தில் வாழும் பெரு வாரியான நாடார் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒப்பந்த வேலைகளும் வேலை வாய்ப்புகளும் கிட்டின. எனவே கடலோரங்களிலுள்ள மீனவர்கள் பொறாமையால் அணு உலையை எதிர்க்கின்றனர் என்ற கருத்து சாமானிய மக்கள் மேல் திணிக்கப்பட்டது. இவ்வாறு சாதி ரீதியாக மக்கள் திட்டமிட்டு பிரித்தாளப்பட்டனர்.

அடுத்து நாத்திக ரஷ்யாவிலிருந்து இந்த அணுவுலைகளுக்கு தொழில்நுட்பமும் வருகின்றன. எனவே ஆத்திக கிறித்துவர்கள் இந்த அணுஉலையை எதிர்க்கின்றனர் என்ற கருத்து உண்மைக்குப் புறம்பாக திட்டமிட்டுப் பரப்பப்பட்டது. இவ்வாறு சாமானிய மக்கள் சாதியாலும் சமயத்தாலும் ஆதிக்க சக்திகளாலும் அணுஉலைப் பணிகளால் பயனடைந்தவர்களாலும் பிரித்தாளப்பட்டனர். எனவே, போராட்டங்கள் வலுவாக எழவில்லை.

தமிழகத்தில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கட்சிகள் இந்த அணு உலையை எதிர்க்கவில்லை. எதிர்ப்பாளர்களுடைய எதிர்ப்பை பொருட்படுத்தவுமில்லை. இந்த இரு கட்சிகளுக்கும் அணு உலை இங்கு கால்பதிக்க காரணமானவர் களுக்கும் இடையில் திரை மறைவில் என்ன நடந்தது என்பது இன்னும் இருளிலே கிடக்கிறது. இல்லை யெனில் கோவா, குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் மக்கள் எதிர்ப்பால் கால்பதிக்க இயலாத இந்த அணுவுலை தமிழகத்தில் எப்படி கால்பதிக்க முடிந்தது? இடதுசாரி கட்சிகள் அமெரிக்காவுடன் இந்தியா செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்தைதான் எதிர்க்கிறார்கள். அணுமின் உலைகளை எதிர்க்கவில்லை. ஆனால் மார்க்சிஸ்ட் லெனின் குழுவினர் அணுமின் உலைக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். தொடர்ந்து தெரிவிக்கின்றனர்.

1990-களில் ஒரு பக்கம் சோவியத் ஐக்கிய நாடுகள் உடைந்ததன் மறுபக்கம் உலகமயமாக்கல் என்ற போக்கு வலுவாகக் காலூன்றியது. இவ்விரு நிகழ்வு களும் மக்களுடைய கருத்தையும் கவனத்தையும் அதிகம் ஈர்த்தன. இவை பற்றியே அதிகம் பேசப்பட்டன. இப்பின்புலத்தில், அணுமின் உலை எதிர்ப்பு பின்னுக்கு தள்ளப்பட்டன.

ஆகஸ்ட், 1988 களிலிருந்தே கூடங்குளம் அணுமின் உலைக்கு மக்களிடமிருந்து எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்தே வந்திருக்கின்றன. பல பிரித்தாளும் சூழ்ச்சிகளாலும்கூட இப்போராட் டங்களை முற்றிலும் முறியடிக்க முடியவில்லை. எனவே, இப்போதுதான் காலம் கடந்து போராட்டம் நடக்கிறது என்பது உண்மை வரலாற்றுக்குப் புறம்பானது.

இந்த அணுமின் நிலையத்திற்காக இதுவரை செலவான 21 ஆயிரம் கோடி ரூபாய் பெரிதா? இந்த நிலையத்தைச் சுற்றி 30 கிலோ மீட்டர் சுற்றளவில் வாழும் 30 லட்சம் சாமானிய மக்களின் வாழ்வு முக்கியமா? பணமா? மக்களா? என்ற விழுமிய மோதலில் மக்களைப் பலியாக்கலாமா? 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் மட்டுமே ஒரு இலட்சத்து எண்பதாயிரம் கோடியை விழுங்கியதே!

மின்சார பற்றாக்குறை என்பது உண்மைதான். இதை யாரும் மறுப்பதற்கில்லை. தற்போது இந்தியாவில் செயல்படும் 20 அணுமின் உலைகளிலிருந்து நாம் பெறும் மின்சாரம் 3 விழுக்காடே மற்ற 97 விழுக்காடு மாற்று வழிகளிலிருந்து பெறுகிறோம். அபாயங்கள் நிறைந்த அணுமின் உலைகளுக்குப் பதிலாக மாற்று வழிகளை காற்று, தண்ணீர், சூரிய ஒளி, குப்பைகள போன்றவற்றி லிருந்து பெற நாம் முயற்சிக்கலாம்.

அரசு விழாக்கள் மற்றும் சமய விழாக்களுக்கு மிகப் பெரிய அளவில் செலவிடப் படும் மின்சாரத்தைக் குறைத்து சிக்கனமாக்கலாம். சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெற மக்களுக்கு மானியம் வழங்கலாம். மின் திருட்டை கெடுபிடியாகக் கட்டுப்படுத்தலாம். இவை போன்ற மாற்று வழிகளையும், மின்சாரத்தைச் சிக்கனமாய்ப் பயன்படுத்துவதையும் செயல்படுத்தலாம்.

ஆபத்து மிகவே குறைவான அணுஉலை அமைக்க யுரேனியம் அல்லது புளூட்டோனி யத்திற்குப் பதிலாக தோரியத்தை உபயோகிக்கலாம் என்பது 2005 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதைக் கண்டுபிடித்தவர்களில் ஒருவர் வி.ஜகந் நாதன். இவர் தமிழர் என்பது பெருமை நமக்கு உண்டு. பிரிட்டன், அமெரிக்கா, நார்வே போன்ற நாடுகள் தோரியம் பயன்படுத்தும் முடிவுக்கு வந்துள்ளன. ஏன் இந்தியா இதைப் பயன்படுத்தக் கூடாது?

3 விழுக்காடு மிகக் குறைந்த மின்சாரம் தயாரிக்க அதிக ஆபத்துடைய யுரேனியம், புளூட்டோனியம் தான் பயன்படுத்துவோம் என்று இந்தியா அடம்பிடித்தால், அதற்கு ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்று சந்தேகப்பட இடம் உண்டு. தோரியக் கழிவிலிருந்து அணுகுண்டு, அணு ஆயுதம் தயாரிக்க முடியாது. ஆனால் புளூட்டோனிய, யுரேனியக் கழிவுகளிலிருந்து இவைகளைத் தயாரிக்க முடியும். ஆக, கூடங்குளம் அணுஉலை யிலிருந்து மின்சாரம் பெறுவது இந்தியாவின் முதல் நோககமல்ல. அணுகுண்டும், அணு ஆயுதமும் செய்வதுதான் உள்நோக்கம். முதல் நோக்கம் என்பது வெளிச்சத்திற்கு வருகிறது. மின்சாரத்தால் ஆசிய அரங்கில் இந்திய வல்லரசு நாடாக ஆக முடியாது. அணு ஆயுதங்களாலும் அணு குண்டாலுமே அது சாத்தியமாகும்.

வறுமை நிறைந்த இந்தியா, சீனாவைப் பின்தள்ளி வட்டார வல்லரசாக, கூடங்குளம் அணுஉலையைப் பயன்படுத்த நினைக்கிறது என்பதே உண்மை. மாலத் தீவுகளிலும், இலங்கையிலும் நங்கூரமிட்டுக்

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ஈழத்தில் ராஜீவ் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் (7)

*இலண்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வரும் 'ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்' என்ற சர்வதேச மனித உரிமை அமைப்பு, இலங்கையில் தமிழ் பகுதிக்கு ராஜீவ் காந்தி, 'இந்திய அமைதிப் படை' என்ற பெயரில் அனுப்பி வைத்த ராணுவம் நடத்திய அத்துமீறல்கள், போர்க் குற்றங்களை நேரில் சென்று ஆய்வு நடத்தி, 1989 ஆம் ஆண்டு மே மாதம் அறிக்கையாக வெளியிட்டது. அந்த அறிக்கையிலிருந்து சில பகுதிகள்:*

இந்திய அமைதிப்படை, காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை அடிப்பதாகவும் அவர்களுக்கு மின் அதிர்ச்சி ஊட்டுவதாகவும் பல தகவல்கள் அம்னஸ்டி இன்டர்நேஷனலுக்குக் கிடைத்துள்ளன. சித்திரவதை காரணமாகப் பலர் இறந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

இந்திய அமைதிப்படை ரோந்து வரும்போது தாக்குதல் நிகழ்த்தப்பட்டால், அதற்குப் பழிவாங்க, அவர்கள் பொது மக்களை அடிப்பது சகஜமான ஒன்று. 1989 ஜனவரி 19 அன்று காலை 10 மணி அளவில் பொலிகண்டி இந்திய அமைதிப்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் வல்வெட்டித்துறை அருகே தாக்கப்பட்டனர். அதில் இருவர் காயமடைந்தனர். இது நிகழ்ந்தவுடனேயே பொலிகண்டி மற்றும் வல்வெட்டித் துறையிலிருந்து வெளிவந்த இந்திய அமைதிப் படையினர் அப்பகுதியில் உள்ள வீடுகளில் நுழைந்து பொது மக்கள் பலரை அடித்தனர். வீடுகளுக்கும், பல சொத்துகளுக்கும் தீ வைத்தனர்.

பொது மக்கள் அவர்கள் வீட்டிலிருந்து வெளியே இழுக்கப்பட்டு சிப்பாய்களால் கம்புகளினாலும், சைக்கிள் செயினாலும், உலக்கையினாலும், செருப்புகளினாலும் தாக்கப்பட்ட தாகக் கூறப்படுகிறது. மூன்று மணி நேரம் நடந்த இந்தத் தாக்குதலில் சுமார் ஐந்து சதுர கிலோ மீட்டர் பகுதியில் வசித்து வந்த மக்கள் பாதிக்கப்பட்டனர். சிப்பாய்கள் வல்வெட்டித்துறை மருத்துவமனையில் நுழைந்து ஒன்பது மருத்துவமனை ஊழியர்களைத் தாக்கினர். அன்றைய ஒரு தினம் மட்டும் 112 பேர் வல்வெட்டித் துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

திருகோணமலையிலுள்ள பன்குளம் என்ற இடத்தில் எல்.டி.டி.ஈ. இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரின் தந்தையான நாற்பத்தியேழு வயது மனிதருக்கு பன்குளம் இந்திய அமைதிப் படை முகாம்களில் ஏற்பட்ட சித்திரவதைகளைப் பற்றிப் பார்ப்போம்.

"1988 ஜூலை 28 அன்று நான்கு இந்தியச் சிப்பாய்கள் என் வீட்டிற்கு வந்து பன்குளம் யூனிட் ஒன்றில் அமைந்திருக்கும் இந்திய இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்றனர். யூனிட் ஒன்றைச் சேர்ந்த வேறு ஏழு பேரும் அப்போது முகாமில் இருந்தனர். ஒரு சிப்பாய் எல்.டி.டி.ஈ.யில் சேர்ந்துவிட்ட என் மகனைப் பற்றி விசாரித்தார். அவன் எல்.டி.டி.ஈ.யில் சேர்ந்த பிறகு என்னைப் பார்க்கவில்லை என்று கூறினேன். என்னிடம் இருக்கும் ஆயுதங்களை ஒப்படைக்கும்படி கூறினார். என்னிடம் ஏதும் இல்லை என்று கூறினேன். நான் கூறியதை செவிமடுக்காத அவர் நான் பொய் கூறுவதாகச் சொல்லி அடுத்த இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் நான் உண்மையைக் கூறாவிட்டால் நாங்கள் அனைவரும் கடுமையாகத் தண்டிக்கப்படுவோம் என்று கூறினார். காலை ஆறு முதல் மாலை ஆறு மணி வரை இந்த இந்திய சிப்பாய் அதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டார். எங்களிடம் எந்த ஆயுதமும் இல்லை என்று கூறினோம். மாலை சுமார் ஆறு மணிக்கு இருபது வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞரை எங்கள் கண்முன் அடிக்கத் துவங்கினர். அரைமணி நேரத் தாக்குதலுக்குப் பிறகு இளைஞர் மூர்ச்சையடைந்தார்.

பிறகு என்னை ஒரு மூலைக்கு அழைத்துச்சென்று கைகால்களைக் கட்டி செருப்புகளினாலும், கம்புகளினாலும் தாக்கினர். ஒரு தண்ணீர் டிரம்மில் பல முறை அமிழ்த்தி எடுத்தனர். அப்பொழுது அங்கு வந்த ஒரு இராணுவ அதிகாரி ஆயுதங்களைப் பற்றி என்னிடம் விசாரித்தார். என்னிடம் ஏதுமில்லை என்றவுடன் என்னுடைய மார்பிலும் கீழ் தாடையிலும் தாக்கினர். நான் ரத்த வாந்தி எடுத்து மயக்கமடைந்தேன். ஜூலை 30 ம் தேதியன்று பன்குளம் இராணுவ மருத்துவமனையில் சுயநினைவு பெற்றேன். எந்தப் பார்வையாளரும் என்னைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

ஐந்து நாட்கள் பொறுத்தே என் குடும்பத்தினர் என்னைப் பார்த்தனர். என்னால் வாயைக்கூடத் திறக்க முடியவில்லை. ஐந்து தினங்கள் கழித்தே என்னால் திரவப் பொருட்களை அருந்த முடிந்தது. இந்திய இராணுவ மருத்துவர்கள் எனக்குச் சிகிச்சை அளித்தனர்."

இவருக்கு எலும்பு முறிவுக்கான சிகிச்சை திருகோணமலை மருத்துவமனையில் தரப்பட்டது. பிப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல் பாரடைஸ் வளாகத்திற்குள் இருக்கும் இந்திய அமைதிப்படை முகாமில் வைக்கப்பட்ட ஒருவருக்கு மின் அதிர்ச்சி தரப்பட்டதாகத் தெரிகிறது.

"1988 பிப்ரவரி 18 அன்று இரவு சுமார் பத்து மணிக்கு என்னுடைய கைகள் கட்டப்பட்டன. என்னை ஜன்னல் கம்பியுடன் சேர்த்துக் கட்டினார்கள். என்னுடைய காலைப் பூட்ஸ் காலால் ஒரு இந்திய சிப்பாய் மிதிக்க, என்னுடைய உடலிலிருந்து ஆடைகள் நீக்கப்பட்டு என் உடலினுள் மின்சாரம் பாய்ச்சப்பட்டது. தொலைபேசி போல் இருந்த ஒரு கருவியை ஒருவர் தொடர்ந்து சுற்றிக் கொண்டிருந்ததால் மின்சாரம் உற்பத்தி ஆனது. அந்தக் கருவியிலிருந்து வெளிவந்த இரண்டு ஒயர்களில் ஒன்றை எனது தொப்புளிலும், மற்றொன்றை ஆண் குறியிலும் வைத்தனர். எப்பொழுதெல்லாம் மின்சாரம் பாய்ச்சப் படுகிறதோ அப்போதெல்லாம் வாயை மூடிவிட்டனர். அன்றிரவு மட்டும் மூன்று முறை மின்சாரம் பாய்ச்சினர். ஒவ்வொரு முறையும் என்னுடைய உடல் சுருட்டிக்கொள்ள ஆரம்பித்தது. என்னுடைய கால் என் தலையைத் தொட்டது. ஒவ்வொரு முறையும் நான் மூர்ச்சையானேன். என் சுயநினைவு திரும்புவதற்காக என்னை உதைத்தனர்."

தொடரும்

### நன்கொடை

திருப்பூர் தோழர் பேரிங் நாகராசு-சகுந்தலா இணையரின் மகள் ச.நா. இளவேனில் முதலாம் ஆண்டு பிறந்த நாள் சார்பாக ரூ.1000 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதிக்கு வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆ.ர்)

**அடுத்த இதழில்...**

**ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கே வெளிநாட்டுப் பணம்**

**– கூடங்குளத்துக்கு அல்ல...**

**– பார்ப்பன குருமூர்த்திக்கு.**

**ஆதாரங்களுடன் மறுப்பு**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

கொண்டிருக்கிற சீனர்களை, தமிழகத்தின் தென்கோடி முனையிலிருந்து உளவு பார்க்க ஏற்கனவே இப்பகுதியில் இந்தியா கடற்படைத் தளத்தை நிறுவி வருவதும் குறிப்பிடத்தக்கது.

கூடங்குளம் அணுமின் நிலையம் செயல்பாட்டுக்கு வந்தால்தான் தமிழ்நாட்டு தொழில் வளர்ச்சிக்கு 925 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று இந்தியப் பிரதமர் சொல்லியிருக்கிறார். தமிழர்கள் வாழ்வு வளர்ச்சியில் பிரதமர் காட்டும் அன்பு அக்கறைக்கு மிகவே நன்றி. ஆனால் ராமேஸ்வரம் மீனவர்கள் ஏறக்குறைய 600 பேர் சிங்கள ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பலர் காயம்பட்டு தொழிலுக்குப் போகாமல் முடங்கிக் கிடக்கிறார்கள். எத்தனையோ முறை மைய அரசிடம் இது குறித்து முறையிட்டும் பிரதமர் மன்மோகன்சிங் காதுகள் செவிடாய், இதயம் மலடாய், கைகள் முடமாய்க் கிடப்பதேன்?

இறுதியாக அணுஉலை அபாயத்தை உணர்ந்த ஜெர்மனி, இத்தாலி, ரஷ்யா, ஸ்விட்சர்லாந்து, மெக்சிக்கோ, ஜப்பான், ஆஸ்திரியா, அமெரிக்கா, நார்வே போன்ற நாடுகள் அணு உலைகளை மூட முடிவெடுக்கும்போது இந்தியா அணுஉலைகளைத் திறக்க துடிப்பதேன்?

உலகளவில் அறியப்பட்ட விஞ்ஞானி ஆல்பெர்ட் அயின்ஸ்டைன் "அணுமின் சக்தி பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் சக மனிதர்களுக்கு விளக்கும் விஞ்ஞானிகளாகிய எங்களுக்குத் தப்பிக்க முடியாத ஒரு சமூகப் பொறுப்பு உள்ளது. இதில்தான் நம்முடைய பாதுகாப்பும் நம்பிக்கையும் இருக்கிறது. அதாவது அறிவுடைய குடிமக்கள் வாழ்வுக்காக செயல்படுவோர்களேயொழிய சாவுக்காக அல்ல" என்று 64 ஆண்டுகளுக்கு முன்பு 1947லேயே கூறிச் சென்றார்.

சுவிட்சர்லாந்து எரிசக்தி அமைச்சர் டேரிலியூதார்டு என்பவர் பாராளுமன்றத்தில் "எமது குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி அணுஉலைகளை முற்றாக மூடுகின்ற முடிவுக்கு ஆதரவு வழங்க வேண்டும். அணுசக்தியின் பயன்பாட்டுத் தேவை உள்ளது என்பது மறுக்க முடியாதுள்ளபோதும், புதிய தொழில்நுட்ப வளர்ச்சி மூலமாக அணுசக்திக்கு மாற்றீடாக புதிய சக்தியினை கண்டுபிடிக்க இயலும்" என்று குறிப்பிடுகிறார். ஆம், நமது இன்றைய சுயநலத் தேவைகளில் மூழ்கி நமது வருங்காலத் தலைமுறைகள் மீது தாங்க முடியாத கதிர்வீச்சு நச்சை 25000 ஆண்டுகள் தூக்கிச் சுமக்க வைக்க நமக்கு எந்தத் தார்மீக உரிமையும்இல்லை. 30 ஆண்டுகள் பயன்பாட்டுக்குப் பிறகு அணுக்கழிவுகளை 25000 ஆண்டுகள் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். இப்படிப் பாதிப்பில்லாமல் அணுக் கழிவுகளைப் பாதுகாக்க விஞ்ஞானிகள் இதுவரை சீரிய வழி எதையும் இன்று வரை கண்டுபிடிக்கவில்லை.

முதல் பக்கத் தொடர்ச்சி


விபத்து ஏற்பட 0 சதவீத அளவுக்குக்கூட வாய்ப்பில்லை என்றால், அணுஉலையை விற்பவர்கள் விபத்துக்குப் பொறுப்பு ஏற்கின்றபோது - நஷ்டஈடு வழங்க மறுத்து தங்களைத் தற்காத்துக் கொள்ள முனைவது ஏன்? கூடன்குளம் அணுமின் நிலைய விற்பனையாளரான ஆட்டம் ஸ்டோரிக் ஸ்போர்ட் என்ற நிறுவனம் இந்திய அரசுடன் ஒரு சிறப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் அடிப்படையில் விபத்துக்கு ஆளானவர்கள் இந்த நிறுவனத்திடம் இழப்பீடு கேட்க முடியாது.

வெஸ்டிங் அவுஸ் என்ற நிறுவனம் அணு உலை விற்பனயை நிறுத்தியுள்ளது. ஏனென்றால் புதிய இழப்பீடு சட்டம் குறைந்த அளவு அவர்களைப் பொறுப்பாளியாக்குவதால் தயக்கம் காட்டுகின்றது. 100 சதவீதம் ஆபத்தில்லாதது என்று சொல்லப்படும்போது அணுமின் நிலைய விற்பனை நிறுவனங்கள் தங்களுக்குப் பொருளாதார இழப்பு நேர்ந்துவிடக் கூடாது என்று அதிக கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் ஏன் இருக்கின்றன? இங்குள்ள அரசாங்கம் கூடன் குளத்தில் வாழும் மக்களை உயிரைப் பணயம் வைக்கச் சொல்வது நியாயமா?

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 1st December 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | டிச.08, 2011 | புரட்சி 10 | முழக்கம் 47 | விலை: ரூ.2.50


# அமெரிக்கப் பணத்தில் கொழிக்கிறது, ஆர்.எஸ்.எஸ்.

இந்திய வளர்ச்சி மற்றும் புனர் வாழ்வு நிதியம் (India Development and Relief Fund - IDRF) என்ற ஒரு அமைப்பு அமெரிக்காவில் 1989 இல் பதிவு செய்யப்பட்டது. அந்நாட்டு வரிச் சலுகைக்கான சட்டம் 501(2) (3) பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்த நிறுவனத்தின் நோக்கமாக, இந்தியாவின் கிராம வளர்ச்சி, பழங்குடியினர் நலம் மற்றும் நகர்ப்புற ஏழைகள் நலன் என்பவை நிர்ணயிக்கப்பட்டன. 2000–த்தில் – இந்த நிறுவனம் திரட்டிய தொகை 3.8 மில்லியன் அமெரிக்க டாலர், வினியோகிக்கப் பட்டுள்ளது. ‘அவுட்லுக்’ வார இதழ் (ஜூலை 22, 2002) வெளியிட்ட ஒரு கட்டுரையில், இந்த நிறுவனத்துக்கும் சங் பரிவார் அமைப்புகளுக்கும் உள்ள தொடர்புகளை அம்பலமாக்கியிருந்தது. உடனே அய்.டி.ஆர்.எப்., இந்த செய்தியைத் திட்டவட்டமாக மறுத்தது. தங்களுக்கும் எந்த ‘இசத்துக்கும்’, தத்துவத்துக்கும், கட்சிகளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று அந்த மறுப்பு அறிக்கை கூறியது. ஆனால், ஆவணங்களைத் துல்லியமாக பரிசீலித்துப் பார்க்கும்போது, அய்.டி.டி.ஆர்.எப்.க்கும், சங்பரிவார்களுக்கும் உள்ள நெருக்கமான தொடர்புகள் திட்டவட்டமாகத் தெரிகின்றன. அதற்கான ஆதாரங்கள் கீழே தரப்படுகின்றன.

அய்.டி.ஆர்.எப். நிறுவனம் அமெரிக்காவின் பல்வேறு மாநில அரசுகளிடம், தங்களுக்கு, வரிச் சலுகைக்கான சான்றிதழ் கோரி மனுத் தாக்கல் செய்துள்ளது. அதற்கு ‘படிவம் 1023’ என்று பெயர். அதில், இந்தியாவில் கீழ்க்கண்ட 9 முக்கிய நிறுவனங்கள், இந்தியாவில் தங்களின் பிரதிநிதிகளாக செயல்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விகார் பாரதி (பீகார்)

சுவாமி விவேகானந்தா கிராம வளர்ச்சிக் கழகம் (தமிழ்நாடு)

சேவா பாரதி (டெல்லி)

ஜனசேவா வித்யா கேந்திரா (கருநாடகம்)

வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (ம.பி.)

வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (குஜராத்)

வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (நாகர் ஹவேலி)

கிரிவாரி வனவாசி சேவா டிரஸ்ட் (உ.பி.)

ஜி. தேஷ்பாண்டே வனவாசி வஸ்திகிரா (மகாராஷ்டிரா)

- மேற்குறிப்பிட்ட 9 நிறுவனங்களுமே சங் பரிவார் அமைப்புகள்தான். இதை ஆர்.எஸ்.எஸ். நடத்தும் இணையத்தளங்களிலே காண முடியும். உதாரணமாக விகாஸ் பாரதி, சங் நீரூற்றிலிருந்து கிளம்பிய நீரோட்டம் என்றும், விவேகானந்தா கிராம வளர்ச்சிக் கழகம், தமிழ்நாட்டில் விசுவ இந்து பரிஷத்தின் தோழமை அமைப்பு என்றும், ஆர்.எஸ்.எஸ். இணைய தளங்களில் விவரிக்கப் பட்டுள்ளது.

இந்த அமைப்புகளின் கீழ் - 67 துணை அமைப்புகள் இந்தியாவில் செயல்படுவதாகவும், அய்.டி.ஆர்.எப்., அறிவித்திருக்கிறது. ஆக மொத்த முள்ள 75 நிறுவனங்களில், 60 நிறுவனங்கள் சங் பரிவார்களோடு தொடர்புள்ள நிறுவனங் களாகும்.

அந்த நிறுவனங்களில் பதிவாகியுள்ள அய்.டி.ஆர்.எப். நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் பலரும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. ஆர்.எஸ்.எஸ்.சுக்கு நிகராக இந்து சேவக் சங் (எச்.எஸ்.எஸ்.) என்ற அமைப்பை அமெரிக்காவில் நடத்தி வருகிறார்கள். பீஷ்ம அக்னி ஹோத்ரி, ஜெதீந்தர் குமார், ராம்ஜெஹானி, வினோத் பிரகாஷ் ஆகிய ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள்தான் அமெரிக்கா வில் நடத்தி வருகிறார்கள். பீஷ்ம அக்னி ஹோத்ரி, ஜெதீந்தர் குமார், ராம்ஜெஹானி, வினோத் பிரகாஷ் ஆகிய ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள்தான் அமெரிக்காவில் அய்.டி.ஆர்.எப். நிறுவனர்கள். இவர்கள் அமெரிக்காவின் ஆர்.எஸ்.எஸ்.சான எச்.எஸ்.எஸ். பொறுப்பாளர்களாகவும் செயல்படு கிறார்கள். அய்.டி.ஆர்.எப்.பின் பொதுச் செயலாளராக இருக்கம் ஷியாம் கோகல் காந்தி என்பவர் சான்பிரான்சிஸ்கோவில் - எச்.எஸ்.எஸ். பொறுப்பாளர். அய்.டி.ஆர்.எப்.பின் ஆலோசகராக இந்தியாவில் செயல்படுபவர் ஷியாம் பாரன்டே எனும் பார்ப்பனர். இவர்தான், வெளிநாடுகளில் சங் பரிவார் நடவடிக்கைகளுக்கான அமைப்பாளர் ஆர்.எஸ்.எஸ்.சின் ‘அப்சர்வர்’ பத்திரிகையில் இது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க வாழ் பார்ப்பனர்கள் 1980களிலிருந்து - ‘இந்துத்துவா’வைத் தீவிரப்படுத்தும் முயற்சிகளில் இறங்கினர். இந்தியாவிலிருந்து 1990களில் - அமெரிக்காவுக்கு குடியேறிய ஏராளமான பார்ப்பனர்கள், இதில் தீவிரம் காட்டினர். குறிப்பாக,

**கூடங்குளம் திட்டத்தை எதிர்ப்போருக்கு வெளிநாட்டுப் பணம் வருவதாக ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர் குருமூர்த்தி ‘தினமணி’ நாளேட்டில் கட்டுரை எழுதியுள்ளார். பார்ப்பனர்கள் கட்டுப்பாடாக கூடங்குளம் திட்டத்தை வலிந்து ஆதரித்து வருகிறார்கள். குருமூர்த்தியின் ஆர்.எஸ்.எஸ். அமைப்புதான் அமெரிக்காவிலிருந்து பணம் பெற்று வருகிறது என்பதை ஆதாரங்களுடன் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ அம்பலப்படுத்துகிறது**

அமெரிக்காவின் மேற்கு கடற்கரை, வடக்கு-கிழக்கு பகுதிகளிலும், தெற்குப் பகுதி மாநிலங்களான புளோரிடா, டெக்சாஸ் மாநிலங்களிலும், இந்துத்துவா அமைப்புகள் வலிமையாக கால் பதித்தன. இந்த இந்துத்துவா அமைப்புகள், இந்தியாவில் சங் பரிவார்களுக்குத் துணை நிற்பதோடு அய்.டி.ஆர்.எப். வழியாக, பெருமளவு நன்கொடைகளைத் திரட்டித் தந்து வருகின்றன.

மத வேறுபாடு இல்லாமல் இந்தியர்களின் வளர்ச்சிக்கு உதவக் கூடிய இந்திய வளர்ச்சி (எய்டு) அமைப்பு, குழந்தைகள் மறுவாழ்வு (கிரஸ்), இந்திய வளர்ச்சிக் கழகம் (அய்.டி.எல்.) போன்ற பல பொதுவான தொண்டு நிறுவனங்கள் அமெரிக்காவில் செயல்பட்டாலும், அய்.டி.ஆர்.எப்., இவைகளை அங்கீகரிப்பது இல்லை. சங் பரிவார் களுடன் தொடர்புடைய அமைப்புகளை மட்டுமே சேவை நிறுவனங்களாக அது அங்கீகரிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய தீவிரவாதத்தைத் தடுக்கவும், இந்திய முஸ்லிம்கள், சர்வதேச முஸ்லிம் பயங்கரவாதி களுடன் தொடர்பு கொண்டிப்பதாகவும், குறும் படங்களைத் தயாரித்து, திரையிட்டு நிதி திரட்டும் வேலைகளை அமெரிக்க ஆர்.எஸ்.எஸ்.சான எச்.எஸ்.எஸ்.சும், அய்.டி.ஆர்.எப்.பும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

## நிதி ஒதுக்கீடு : எதற்கு?

‘வளர்ச்சி’, ‘புனர்வாழ்வு’ என்ற பெயரில் இந்தியாவுக்கு அய்.டி.ஆர்.எப். அனுப்பிய தொகையில் பெரும் பகுதி, சங் பரிவார்களின் திட்டங்களை அமல்படுத்துவதற்கும் - மதப் பகைமையை வளர்ப்பதற்குமே பயன்பட்டிருக்கிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

1994 முதல் 2000 வரை அய்.டி.ஆர்.எப். இந்தியாவுக்கு அனுப்பிய தொகையில் 75 சதவீதம் (3.2 மில்லியன் டாலர்), ஆர்.எஸ்.எஸ். ஆதரவு அமைப்பு களுக்கே அனுப்பப்பட்டுள்ளது. எந்த ஒரு மைனாரிட்டி அமைப்புகளுக்கும் உதவிடவில்லை. அனுப்பிய தொகையில் 70 சதவீதம் - ஆதிவாசிகளை, இந்து மதத்துக்கு மாற்றவும், அதற்குத் தயார் செய்வதற்கான கல்வி, விடுதிகளை நடத்தவுமே செலவிடப்பட்டு இருக்கிறது. 8 சதவீதம் மருத்து வத்துக்கும், 15 சதவீதம் புனர்வாழ்வு திட்டங் களுக்கும், 4 சதவீதம் கிராம வளர்ச்சிக்கும் செல விடப்பட்டு இருக்கிறது. (ஆதாரம்: அய்.டி.ஆர்.எப்.- ஆண்டறிக்கை - இணையதளத்திலிருந்து) ‘புனர் வாழ்வுப்பணி’ என்ற பெயரில் செலவிடப்பட்ட தொகைக்கூட - மத அடிப்படையிலேயே செலவிடப் பட்டிருக்கிறது. குஜராத் பூகம்பத்தின்போது - புனர் வாழ்வு நிதியிலிருந்து செலவிட்ட தொகையை, பாதிக்கப்பட்ட இந்துக்களுக்கு மட்டுமே ஒதுக்கினார்கள். இதேபோல் மதக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட வங்க தேச இந்துக்கள், ராணுவம் மற்றும் போராளிகள் தாக்குதலுக் குள்ளான காஷ்மீர் இந்துக்கள் என்று இந்துக்களுக்கு மட்டுமே, இந்நிறுவனம் உதவிகளைச் செய்துள்ளது. இவைகளில் பாதிக்கப்பட்டவர்கள் கிறித்தவர், முஸ்லிம்கள் இருந்தாலும்கூட ‘நிவாரண உதவிகள்’ மதத்தின் அடிப்படையிலேயே செய்யப்பட்டன.

குஜராத் பூகம்பத்தின்போது ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் அமைப்புகள், பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் பகுதியைப் புறக்கணித்தன என்று குல்தீப் நய்யார் எழுதினார். (பைனான்சியல் எக்ஸ்பிரஸ், பிப்.21, 2001) இந்து அல்லாத தொண்டு நிறுவனங்கள், நிவாரணப் பணியில் ஈடுபட வந்தபோது, சங் பரிவார் அமைப்புகள் அவைகளைத் தடுத்து நிறுத்திவிட்டன. (கிறிஸ்டியன் சயின்ஸ் மானிட்டர், ஜன.31, 2001)

## ஆதிவாசிகள் – மதமாற்றம்

இந்தியாவின் பழங்குடி மக்களை ஆதிவாசிகள் என்ற பெயரில் தான் அழைப்பது வழக்கம்; ஆனால், இந்தியாவின் பூர்வீகக் குடிகள் ஆரியர்கள்தான் என்று வரலாற்றைப் புரட்ட விரும்பும் ‘சங் பரிவாரங்கள்’ இவர்களை ஆதிவாசிகள் அதாவது பூர்வீகக் குடிகள் என்று அழைப்பதில்லை. மாறாக ‘வனவாசிகள்’ என்று அழைக்கிறார்கள். பழங்குடியினரான ஆதிவாசிகள், இயற்கையை வழிபடக் கூடியவர்கள். அவர்கள் இந்துக்கள் அல்ல. இந்து சாதி அமைப்பால் கடந்த நூற்றாண்டில் பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் மீது மதங்கள் திணிக்கப்பட்டன. பலர் கிறிஸ்தவர்களானார்கள். அண்மைக்காலமாக, இந்த மக்களை ‘இந்துக்களாக’ மாற்றும் முயற்சிகளில் சங் பரிவார் தீவிரம் காட்டி செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாக பழங்குடியினருக்கான கல்வித் திட்டங்களையும், நல்

2 ஆம் பக்கம்

# தமிழகத்தில் அமெரிக்கப் பணம் வரும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள்

*முதல் பக்கத் தொடர்ச்சி*

வாழ்வுத் திட்டங்களையும் அமல்படுத்தி வருகிறது. இதற்கான பெரும் நிதி அய்.டி.ஆர்.எப். போன்ற அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகிறது.

பழங்குடியினரை இந்து மதமாற்றம் செய்வதற்கே - அமெரிக்காவின் பணம் அய்.டி.ஆர்.எப். வழியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதற்கு ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன.

'வனவாசி கல்யாண் ஆஸ்ரமம்' என்ற அமைப்புக்கு நிதி உதவி செய்து வருவதாக அய்.டி.ஆர்.எப். ஒப்புக் கொண்டுள்ளதை ஏற்கனவே சுட்டிக் காட்டினோம்.

"கிறிஸ்தவர்களாக்கப்பட்ட - வனவாசிகளை இந்த மதத்துக்கு மாற்றுவதற்காகவே வனவாசி கல்யாண் ஆஸ்ரமம் 1950களில் தோற்றுவிக்கப் பட்டது. அந்த வழியில் பழங்குடியினரின் கிறிஸ்தவ மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தி, அவர்களை இந்துக்களாக மாற்றுவதில், எங்கள் அமைப்பு வெற்றிகளைக் குவித்து வருகிறது" - என்று ஆர்.எஸ்.எஸ். வெளியீடே எழுதியிருக்கிறது. பழங்குடியினரை இந்துக்களாக மாற்றி, தேசிய நீரோட்டத்துக்குக் கொண்டு வந்து, சமூக விரோத, தேச விரோதிகளிடமிருந்து, அவர்களைக் காப்பாற்றி யுள்ளதாக, 'வனவாசி கல்யாண் ஆஸ்ரமத்துக்கு' - அய்.டி.ஆர்.எப். நிறுவனமே, தனது ஆவணங்களில் புகழாரம் சூட்டி மகிழ்கிறது.

மத பழங்குடியினரை மதம் மாற்றுவதோடு மட்டுமல்ல; அவர்களை 'இந்துராஷ்டிரம்' அமை வதற்கான போராளிகளாகப் பயிற்சி தரும் நட வடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள்; அதற்கும் அமெரிக்காவின் பணம் வருகிறது; அமெரிக்காவின் 'அய்.டி.ஆர்.எப்.' பிடமிருந்து நிதி உதவி பெறும் 'சேவா பாரதி' - தனது அறிக்கை ஒன்றில் - இதை உறுதிப்படுத்துகிறது. பழங்குடி யினரில் சில ஆண்களையும், பெண்களையும் தேர்வுசெய்து அயோத்தியில் உள்ள 'ஸ்ரீராமகதா பிராவச்சான்' என்ற ராமாயணப் பயிற்சி மய்யத்துக்கு அனுப்பி சாமியார்களைக் கொண்டு 8 மாத பயிற்சி தந்து, பிறகு அவர்களைக் கிராமங்களுக்கு அனுப்பி பிரச்சாரகர் களாகப் பயன்படுத்துவதாக சேவா பாரதி கூறுகிறது.

இது மட்டுமல்ல, ஆதிவாசிகளை, இந்துக்களாக மதம் மாற்றும் நிகழ்ச்சி, பா.ஜ.க.வின் தேர்தல் வெற்றிக்கும் பயன்படுகிறது என்று, சங் பரிவார் தலைவர்களே கூறுகிறார்கள். பழங்குடியினர் வாழும் பகுதிகளில் - "ஏகல் வித்யாலயா" என்ற பள்ளிகள், அமெரிக்க நிதி உதவியோடு நடத்தப்படுகின்றன. பழங்குடியினரை இந்துக்களாக மாற்றுவதில் - இந்தப் பள்ளிகள் பெரும் பங்காற்றுகின்றன. இத்தகைய பள்ளிகளைத் தொடங்கியதன் மூலமே, பீகாருக்குள் தாங்கள் வலிமை பெற முடிந்தது என்றும், பீகாரில் தாங்கள் மேற்கொண்ட இந்த முயற்சி தேர்தலில் பா.ஜ.க.வுக்கு பெரிய வாய்ப்பை உருவாக்கியது என்றும், குஜராத்திலும் அதே சோதனைகளைத் துவங்கி - காங்கிரஸ் கோட்டைகளைத் தகர்ப்போம் என்றும் ஜார்கண்ட் பகுதியைச் சார்ந்த விசுவ இந்து பரிஷத் தலைவர் கவுஷிக் பட்டேல் கூறியிருக்கிறார். (ஆதாரம்: 'தி டெலிகிராப்' நாளேடு, ஜூலை 4, 2000)

- ஆக, அமெரிக்கப் பணம், மதமாற்றத்துக்கு மட்டுமல்லாமல், பா.ஜ.க.வை ஆட்சியில் அமர்த்து வதற்கும் பயன்படுத்தப்படுகிறது என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

**மதக் கலவரங்களை உருவாக்கவும்....**

அமெரிக்காவிலிருந்து சங் பரிவார்களுக்கு வரும் பணம், இந்தியாவில் மதக் கலவரங்களை நடத்துவதற்கும் பயன்படுகிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. சுருக்கம் கருதி, அமெரிக்க நிதி உதவியோடு செயல்படும் அமைப்புகள் தந்துள்ள ஒரு சில ஒப்புதல் வாக்கு மூலங்களை மட்டும் சுட்டிக்காட்டலாம். மேற்கு குஜராத்தில் வாகை எனுமிடத்தில் அமெரிக்க உதவியோடு 'வனவாசி கல்யாண் ஆஸ்ரமம்' நடத்தும் பள்ளியில் சிவாஜியின் படத்துக்குக் கீழே, "சிவாஜி மட்டும் இல்லாவிட்டால் நாம் அனைவரும் 'சுன்னத்' செய்யப்பட்டிருப்போம். சிவாஜி தான், நம்மைக் கட்டாய மதமாற்றத்திலிருந்து காப்பாற்றினார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ மதத்தின் முதல் தலைமுறையினரான அந்த மாணவர்கள் இப்போது 'இந்து'க்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

ஒரு இளம் ஆர்.எஸ்.எஸ்.காரர் அந்தப் பள்ளியை நடத்துகிறார். கலவரத்துக்கான வெறியை இதன் மூலம் தூண்டிவிடுகிறார்கள் என்று, பள்ளியை நேரில் பார்வையிட்டுத் திரும்பிய வரலாற்று ஆய்வாளர் அஜய்சிங் எழுதியிருக்கிறார். (ஆசியா வீக், மார்ச் 26, 1999)

அமெரிக்க உதவி பெறும் வனவாசி கல்யாண் பரிஷத்தை நடத்தும் சுவாமி அசீமானந்த் என்பவர் - ஒரு ஆதிவாசிக்கூட கிறிஸ்தவராக இருக்கக் கூடாது என்று கூறி, அனைவரையும் இந்துக்களாக்கும் தீவிர வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் என்பதை, 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டின் - செய்தியாளர் அருண் வர்கீஸ் அம்பலப்படுத்தினார். ('டைம்ஸ் ஆப் இந்தியா' பிப். 11, 1999)

மத்தியப் பிரதேச மாநிலம் ஜாஷ்பூரில் உள்ள வனவாசி கல்யாண் நிறுவனத்தினரால், கிறிஸ்தவ ஆதிவாசிகள் தாக்கப்படுவதையும், மன உளைச்ச லுக்கு உள்ளாக்கப்பட்டதையும், பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் கண்டன ஊர்வலம் நடத்தியதையும் ஒரு டாக்குமென்டரி படமே அம்பலப்படுத்தியது. (Fishers of Men, Decementary by Ranjankanth and Padmavathy Rao, 1997)

அமெரிக்க வாழ் இந்தியரின் உதவியோடு, இந்தியாவில் கலவரங்களும் வெறுப்புகளும் தூண்டிவிடப்பட்டதற்கு இவை சில உதாரணங்கள். அவர்களின் உதவியோடு நடத்தப்படும் நிறுவனமான வித்யாபாரதி நடத்தும் பள்ளிகளின் பாடத் திட்டங்களில் வரலாறுகள் திருத்தப்பட்டு, இந்து மதவாத உணர்வுகள் தூண்டி விடப்படுவதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

**நிதி பெறும் நிறுவனங்கள்**

அய்.டி.ஆர்.எப். எனும் அமெரிக்கா வாழ் பார்ப்பனர்கள் நடத்தும் நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெறும் நிறுவனங்களின் எண்ணிக்கை 184, மாநில வாரியாக நிதி பெறும் நிறுவனங்களின் பெயர்களையும் - நிதியையும், அதன் இணையத் தளங்களில் காண முடிகிறது. இதில் தமிழ்நாட்டில் நிதி உதவி பெறும் நிறுவனங்களையும் பெற்றுள்ள தொகையையும் மட்டும் கீழே தருகிறோம்:

*பாரத் கல்சுரல் டிரஸ்ட் - திருச்சி (45,980 டாலர் - மதத்துக்காக)*

*கிராமகோயில் பூசாரிகள் பேரவை - சென்னை (2,250 டாலர் - மதத்துக்காக)*

*நவஜோதி சாரிட்டி டிரஸ்ட் - சென்னை (2,250 டாலர் - மதத்துக்காக)*

*சிவாலயா - சென்னை (6,650 டாலர் - மதம்-கல்வி)*

*ஸ்ரீராம தனுஷ்கோடி அபய ஆஞ்சநேயர் சேவா டிரஸ்ட் (9,500 டாலர் - மதத்துக்காக)*

*சாமி விவேகானந்தா ரூரல் டெவலப்மென்ட் சொசைட்டி (82,290 டாலர் - மதம்-கல்விக்காக)*

*ஆயுர்வேதிக் டிரஸ்ட் (கோவை) - (2,410 டாலர் - மதம்-சமூக நலனுக்காக)*

*யுனிக் பவுண்டேஷன் டிரஸ்ட் (திருவண்ணாமலை) - (9,035 டாலர் - மதம்-சமூக நலனுக்காக)*

*வெர்சல் சாரிட்டபிள் டிரஸ்ட் (சென்னை) - (17,500 டாலர்)*

*விவேகானந்தா கேந்திரா ராக் மெமோரியல் (கன்னியாகுமரி) - (74,885 டாலர் - மதம் - சமூக கல்விக்காக)*

*ஆரோவில் - ஆரோவில் லேண்ட் பன்ட் - 301,420 டாலர்*

*அர்பிந்தோ ஆக்ஷன் - 4,750 டாலர்*

*ஆர்டார்தோ ஆஸ்ரமம் - 2,500 டாலர்*

*அமெரிக்காவின் அய்.டி.ஆர்.எப். வழங்கியுள்ள மொத்த நிதியில்*

*82.4 சதவீதம் (2,684,915 டாலர்) சங் பரிவார் அமைப்புகளுக்கும்,*

*8.1.சதவீதம் (2,64,660 டாலர்) மத நடவடிக்கை களுக்கும்,*

*2.2 சதவீதம் (70,620 டாலர்) மதச்சார்பற்ற நடவடிக்கைகளுக்கும்,*

*7.4 (2,49,785 டாலர்) சதவீதம் 'தெரியாத நடவடிக்கைகளுக்காகவும்' ஒதுக்கப்பட்டுள்ளது.*

மதநடவடிக்கைகள், கல்விப் பணிகள், நிவாரணப் பணிகள் என்றபெயரில் வாங்கப்பட்ட நிதியும், சங் பரிவாரங்களின் வளர்ச்சிக்கே பயன்படுத்தப்பட் டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

*(Sabarang Communication/SACW/தளத்திலிருந்து)*

*(விடுதலை இராசேந்திரன் எழுதிய 'சங் பரிவாரின் சதி வரலாறு' நூலிலிருந்து)*

## புதுப் பொலிவுடன் களமிறங்குகிறது, ஈரோடு மாவட்டக் கழகம்

ஈரோடு மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் 6.11.2011 அன்று கோபியில் உள்ள கண்ணப்பநாயனார் திமண மண்டபத்தில் தோழர் நாகப்பன் தலைமையில், மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் மற்றும் தலைமை ஆலோசனைக்குழு உறுப்பினர் இரத்தினசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழகத்தின் துரித வளர்ச்சிக்கும், மாவட்டம் முழுவதும் கழகத்தின் அடிப்படை கட்டமைப்பை பலப்படுத்தும் நோக்கில் அதிரடியாக மாற்றி அமைக்கப்பட்டது. மாவட்டத்திலுள்ள நகர, கிளைக் கழகங்கள் அனைத்தையும் கலைத்துவிட்டு புதிதாக அமைப்பு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மாவட்டத்திலுள்ள 14 ஒன்றியங்களில், 12 ஒன்றியங்கள் கழகம் ஏற்கனவே உள்ள நிலையில், அந்த 12 ஒன்றியங்களுக்கும் புதிய அமைப்பாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். மாவட்டத் தலைவர், மாவட்டச் செய லாளர், தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர், அதற்கு அடுத்தபடியாக 4 மாவட்ட அமைப்பாளர்கள், 12 ஒன்றிய அமைப்பாளர்கள் என கட்டமைக்கப்பட் டுள்ளது. 4 மாவட்ட அமைப்பாளர்களுக்கும் தலா 3 ஒன்றியங்கள் என பிரிக்கப்பட்டு அந்தந்த அமைப் பாளர்கள் அந்தந்த ஒன்றியங்களை கவனிக்கும் பொறுப்பையும், ஒவ்வொரு ஒன்றிய அமைப் பாளர்களும் அந்தந்த ஒன்றியங்களில் பரவலாக இயக்கத்தின் கிளைகளை புதிதாக ஏற்படுத்தவும், ஏற்கனவே உள்ள கிளைகளை நன்கு பலப்படுத்தவும் வசதியாக இந்த புதிய ஏற்பாட்டை மாவட்ட கழகம் உருவாக்கியுள்ளது. புதிய பொறுப்பாளர்களாக கீழ்க்கண்ட தோழர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட தலைவர் - நாத்திக சோதி; மாவட்ட செயலாளர் - இராம. இளங்கோவன்; தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் - ப. இரத்தினசாமி; ஒன்றிய அமைப்பாளர்கள் - சசிக்குமார் (ஈரோடு ஒன்றியம்), பாண்டியன் (கொடுமுடி ஒன்றியம்), ஈஸ்வர மூர்த்தி (பவானி ஒன்றியம்), வேல்முருகன் (அம்மா பேட்டை ஒன்றியம்), வீரகுமார் (அந்தியூர் ஒன்றியம்), வி.சு.விசு (பெருந்துறை ஒன்றியம்), விசயசங்கர் (கோபி ஒன்றியம்), இரமேசு (நம்பியூர் ஒன்றியம்), ரா.சுப்ர மணியம் (டி.என்.பாளையம் ஒன்றியம்), இறையிலன் மூர்த்தி (சத்தி ஒன்றியம்), இராசேந்திரன் (பவானிசாகர் ஒன்றியம்), செல்வராஜ் (சென்னிமலை ஒன்றியம்).

இதில் மாவட்ட அமைப்பாளர் அர்ச்சுனன் பொறுப்பில் - பெருந்துறை ஒன்றியம், கொடுமுடி ஒன்றியம், சென்னிமலை ஒன்றியம்.

மாவட்ட அமைப்பாளர் ம.நிவாசு பொறுப்பில் - கோபி ஒன்றியம், ஈரோடு ஒன்றியம், பவானி ஒன்றியம்.

மாவட்ட அமைப்பாளர் கா.சு. வேலுச்சாமி பொறுப்பில் - டி.என்.பாளையம் ஒன்றியம், அந்தியூர் ஒன்றியம், அம்மாபேட்டை ஒன்றியம்.

மாவட்ட அமைப்பாளர் எலத்தூர் செல்வக்குமார் பொறுப்பில் - நம்பியூர் ஒன்றியம், பவானிசாகர் ஒன்றியம், சத்தி ஒன்றியம்.

மேற்கண்ட நிலையில் இனி வரும் காலங்களில் இரண்டு ஆண்டுகளுக்குள் ஒவ்வொரு ஒன்றியங்களிலும் 100 புதிய தோழர்களை உருவாக்குவது என முடிவெடுக் கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளில் மாவட்டம் முழுவதும் 1200 புதிய தோழர்களை உருவாக்குவது எனவும், அதன் பின்னர் ஒவ்வொரு பகுதியிலும் கிளைக் கழக, நகரக் கழக, ஒன்றியக் கழகத்திற்கு பொறுப் பாளர்கள் நியமிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய பொறுப்பாளர்களுக்கு கழகத் தலைவரை வைத்து பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி வகுப்பில் புதிய பொறுப்பாளர்களுக்கு கழகத்தை கட்டமைப்பது குறித்தும், தோழர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் எனவும், புதிய தோழர்களை உருவாக்குவது குறித்தும், பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இயக்கத்தை மாவட்டம் முழுவதும் விரிவுபடுத்தவும், கொள்கைகளை பரப்புவது குறித்தும், வரும் காலத்தில் இயக்கத்தை பலம் வாய்ந்த அமைப்பாக மாற்றவும் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

# ஈழத்தில் ராஜீவ் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் (8)

*இலண்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வரும் 'ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்' என்ற சர்வதேச மனித உரிமை அமைப்பு, இலங்கையில் தமிழ் பகுதிக்கு ராஜீவ் காந்தி, 'இந்திய அமைதிப் படை' என்ற பெயரில் அனுப்பி வைத்த ராணுவம் நடத்திய அத்துமீறல்கள், போர்க் குற்றங்களை நேரில் சென்று ஆய்வு நடத்தி, 1989 ஆம் ஆண்டு மே மாதம் அறிக்கையாக வெளியிட்டது. அந்த அறிக்கையிலிருந்து சில பகுதிகள்:*

விசாரணைக்காக இந்திய அமைதிப்படையினர் மேற்கொண்ட சித்திரவதை நடவடிக்கைகளில் பலர் இறந்திருக்கின்றனர். யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த குலசேகரம் சுந்தரேசன் என்ற இருபது வயது எஸ்டேட் சூபர்வைசர் 1987 டிசம்பர் 22 ஆம் தேதியன்று மாலை சுமார் 5 மணிக்கு இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்டார். அதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்னால்தான் இந்திய அமைதிப் படை வாகனம் ஒன்று கண்ணி வெடிக்குப் பலியானது. மறுநாள் முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் எந்த விசாரணையும் மேற்கொள்ளப்பட வில்லை. 22-ந் தேதியன்று அந்தப் பகுதியின் முக்கிய பிரமுகர் ஒருவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்திருக்கும் இந்திய அமைதிப்படை முகாமில் விசாரித்தார். அவரிடம் வெகு விரைவில் சுந்தரேசனை விடுதலை செய்வதாகக் கூறப்பட்டது. 25 ஆம் தேதியன்று உறவினர்கள் சென்று விசாரித்தபோது அன்று காலையே குலசேகரன் சுந்தரேசனை விடுதலை செய்துவிட்டதாகக் கூறினர். சுந்தரேசன் வீட்டுக்கு வராத காரணத்தினால் நாவற்குழி, பலாலி, மட்டுவில் ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களிலும் தேடினர். கடைசியில் சனவரி ஐந்து 1988 அன்று இந்திய இராணுவத்தினர் கண்ணப்பிட்டி கல்லறைக்கு அவரது உறவினரை அழைத்துச் சென்று குலசேகரன் சுந்தரேசனின் பிணத்தை அடையாளம் காட்டும்படி கூறினர். வயிற்றில் இரண்டு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும், இடது காலில் தீக்காயங்களும், முகத்தின் வலப் பக்கத்தில் பெரிய வீக்கமும் இருந்ததை உறவினர் கவனித்தார். அவர் விளக்கம் கேட்டபோது யாரோ ஒருவர் குலசேகரனின் வாயில் சைனைட் போட்டு விட்டதால் உடனடி மரணம் சம்பவித்துவிட்டது என்று அந்த அதிகாரி கூறினார். சடலத்தை அவர்களிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டு அந்த இடத்திலேயே ஈமச் சடங்கை நடத்தும்படி கூறினார். மட்டுவில் இந்திய அமைதிப்படை முகாம் கமாண்டர் மறுநாள், குலசேகரம் சுந்தரேசனுக்கு உண்மையில் என்ன நடந்தது என்று தமக்குத் தெரியாது என்றும் அவரது இறப்புக்குக் காரணமானவர்களுக்குத் தண்டனை கிடைக்கும்படி பிரார்த்திக்குமாறு உறவினர்களைக் கேட்டுக் கொண்டதாகத் தெரிகிறது.

ஜூன் 11, 1988 அன்று மல்லாகத்தில் இந்திய அமைதிப்படை காவலில் சுப்பன் நடராஜா இறந்து போனார். இந்திய அமைதிப் படை வெளியிட்ட ஒரு அறிக்கையின்படி அவர் மாரடைப்பினால் இறந்து போனார். ஆனால் அம்னஸ்டி இன்டர்நேஷனலுக்குக் கிடைத்த தகவல்களின்படி அவர் சித்திரவதை காரணமாக இறந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. சுப்பன் நடராசன் தெல்லிப்பளையில் வசிக்கும் கள் இறக்கும் தொழில் செய்யும் 38 வயதான இளைஞன். 1988 ஜூன் 11 அன்று கைதான ஒரு உறவினரை விசாரிக்க மல்லாகம் இந்தியப்படை முகாமிற்கு அவர் சென்றார். அங்கு அவரே கைது செய்யப்பட்டார். அன்றிரவு சுமார் 8 மணிக்கு இந்திய அமைதிப்படையினர் சுப்பன் நடராஜன் மரணத்தைப் பற்றி அவரது உறவினருக்குத் தெரியப்படுத்தினர். மறுநாள் அவரது சடலம் வீட்டுக்கு எடுத்து வரப்பட்டது. அவர் மாரடைப் பினால்தான் இறந்தார் என்று தமிழிலும் ஆங்கிலத் திலும் அச்சடிக்கப்பட்டிருந்த ஒரு படிவத்தில் கையொப்பமிடும்படி ஒரு உறவினர் நிர்பந்திக்கப் பட்டார். அவர் மறுத்தபோது சடலத்தை அப்புறப் படுத்தி விடுவதாக மிரட்டினர். அன்றே சடலத்தை அடக்கம் செய்யும்படி நிர்பந்திக்கப்பட்டனர். வீட்டில் சடலம் இருந்தவரையிலும் பின்னர் இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் இந்திய அமைதிப் படையினர் கூடவே இருந்தனர்.

சுப்பன் நடராஜாவின் உடலில் கீழ்க்கண்ட அடையாளங்களும் காயங்களும் இருந்ததாக ஒரு சத்திய வாக்குமூலம் கூறுகிறது.

- இரண்டு கைகளிலும் கறுப்புக் கோடுகள்

- இடது கையில் தீக்காயங்கள்.

- இரண்டு தொடைகளிலும் தீக்காயங்கள்.

- முதுகில் ஆறு அங்குல நீளத்திற்கு ஒரு பெரிய தழும்பு.

அம்னஸ்டி இன்டர்நேஷனல் அறிந்தவரையில், சுப்பன் நடராஜாவின் மரணத்திற்குப் பிறகு விசாரணையோ பிரேத பரிசோதனையோ நடத்தப் படவில்லை. ஆனால், வேறு பல இந்திய அமைதிப் படை காவலில் ஏற்பட்ட மரணங்களுக்குப் பிரேத பரிசோதனை நடத்த இராணுவத்தினர் அனுமதி வழங்கி இருக்கின்றனர்.

1988 ஜூன் 12 அன்று திருகோணமலைக்கருகில் உள்ள சம்பூரில் ராயப்பா யேசுராஜா என்பவர் கைது செய்யப்பட்டார். ஜூலை 18 ஆம் தேதியன்று அவர் இறந்துவிட்டதாக இந்திய அமைதிப் படையினர் கூறினர். அவரது உடலை மூதூர் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுவிட்டதாகக் கூறினர். கட்டை பறிச்சான் மற்றும் சம்பூரில் இருக்கும் இராணுவ முகாமில் யேசுராஜாவைப் பார்க்க வேண்டும் என்று கேட்டபோதெல்லாம் அனுமதி மறுக்கப்பட்டது. அந்தப் பகுதி நீதிபதி ஒருவரும், மருத்துவர் ஒருவர் மூதூர் மருத்துவமனை சவக்கிடங்கிற்கு வந்து பிரேதப் பரிசோதனையை நடத்தினர். அவர்களது அறிக்கையின்படி ஜூலை பதினாறாம் தேதியன்று யேசுராஜா தனக்குச் சுரம் இருப்பதாகக் கூறியவுடன், வாந்தி எடுக்கவும் செய்தார்; இருண்ட நிறத்தில் சிறுநீரும் வெளியேறியது. அவருக்குச் சிகிச்சை அளித்த இந்திய அமைதிப்படை அதிகாரி அவருக்கு மஞ்சள் காமாலை இருப்பதாகவும், திருகோண மலை மருத்துவமனைக்கு மாற்றப்படவேண்டும் என்றும் கூறினார். பிரேதப் பரிசோதனை அறிக்கை, போக்குவரத்துச் சிக்கலினால் அவரை அங்கு கொண்டு செல்வது தாமதப்பட்டது என்று கூறுகிறது. ஜூலை 18 அன்று யேசுராஜா இறந்தார். மருத்துவர் மேலும் கூறுகிறார்:

"உடல் முழுதும் பல சிராய்ப்புகளும், வீக்கங் களும் இருந்தன. தரையில் இழுத்துச் செல்லப்பட்ட காரணத்தினால் உடலின் பின்புறத்தில் சிராய்ப்பு களும் காயங்களும் இருந்தன. உடல் முழுவதும் மஞ்சள் நிறம் விரவிக் கிடந்தது. கல்லீரலுக்கருகில் நான்கு அங்குல நீளம் மூன்று அங்குல அகலத்திற்கு வீக்கம் காணப்பட்டது. இந்த வீக்கமே மஞ்சள் காமாலை வருவதற்கு ஒரு காரணம்."

மரணத்தைப் பற்றி நீதிபதி விசாரணை நடத்திய போது இந்திய அமைதிப்படை அதிகாரியும் மருத்துவரும் வாக்குமூலம் தர மறுத்துவிட்டு வெளிநடப்புச் செய்தனர். நீதிபதி போலீஸ் விசாரணைக்கு உத்தரவிட்டார். மேற்கொண்டு என்ன நடந்தது என்று அம்னஸ்டிக்குத் தகவல் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாண தேவாலயத்தைச் சேர்ந்த ஜுட் அக்காரியா சந்திரகுமார் என்ற பியானோ வாசிப் பவரும் இந்திய அமைதிப்படைக் காவலில் இறந்துள்ளார். 1988 நவம்பர் 26 அன்று தேவால யத்தின் வளாகத்திற்குள் நடந்த ஒரு துப்பாக்கிச் சூட்டின்போது அவர் கைது செய்யப்பட்டார். துப்பாக்கிச் சூடு நடைபெற்றபோது அவர் தேவாலயத்தில் மறைந்திருந்தார். அங்கு வந்த இந்திய அமைதிப் படையினர் யாழ்ப்பாண ரயில் நிலையத்திலுள்ள முகாமிற்கு அவரை அழைத்துச் சென்றனர். மாலை சுமார் ஆறு மணி அளவில் சில சாட்சிகள் அவரை முகாமிற்குள் இருந்த இரயில்வே பிளாட்பாரத்தில் அவர் கிடத்தப்பட்டிருந்ததைப் பார்த்தனர். சந்திரகுமாரைப் பார்க்க வேண்டும் என்று உறவினர்கள் கேட்டபோது மறுநாள் வரும்படி உறவினர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டனர். ஆனால் மறுநாள் அதிகாலை துப்பாக்கிச் சூடுகளுடன் அவரது பிணம் அவர் வீட்டருகே கண்டுபிடிக்கப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கையின்படி துப்பாக்கிச் சூட்டில் மூளையில் ஏற்படுத்தப்பட்ட காயத்தினாலும், தீக்காயங்கள் அளித்த அதிர்ச்சியினாலும் அவர் இறந்திருக்கிறார். பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவரின் கூற்றின்படி:

"நான் இறந்தவரின் உடலின் பரிசோதனை செய்த போது பல வெளிக் காயங்களைக் கவனித்தேன். மார்பில் இரண்டு காயங்கள், வயிற்றுப் பகுதியில் மூன்று காயங்கள், முகத்தின் இடது பகுதியில் இரண்டு காயங்கள், தலையில் ஒரு காயம், இடது தொடையில் ஒரு காயம் மற்றும் கைகால்களில் வீக்கம் காணப்பட்டன."

இந்திய அமைதிப் படையின் காவலில் வைக்கப்பட்டவர்களைக் கொல்வதற்கு "மூன்று நட்சத்திரம்" இயக்கத்தைச் (இது இந்திய ராணுவம் உருவாக்கிய அமைப்பு-ஆர்) சார்ந்தவர்களின் உதவியும் கிடைத்ததாகத் தெரிகிறது. உதாரணமாகக் காங்கேசன் சிமெண்ட் தொழிற்சாலையில் உள்ள வைத்தி டேனியல் என்பவரின் மரணத்தில் மூன்று நட்சத்திரத்தினரின் பங்கு அதிகமாக இருந்ததாகத் தெரிகிறது. தெல்லிப்பளை இந்திய அமைதிப்படை முகாமைச் சார்ந்த சிப்பாய்கள் அவரைக் கைது செய்தனர். இதற்கு பல சாட்சிகள் இருக்கின்றன. மறுநாள் அவரது உடல் விளக்குக் கம்பத்தில் கட்டப்பட்டிருந்தது.

ஒரு உறவினர் இந்திய அமைதிப்படை முகாமிற்குச் சென்று வைத்தி டேனியல் கைது பற்றி விசாரித்தார்.

"நான் தெல்லிப்பளை இந்திய அமைதிப்படை முகாமிற்குச் சென்று ஒரு அதிகாரியைப் பார்த்தேன். அவர் டேனியலை விசாரணை முடிந்தவுடன் மறுநாள் விடுதலை செய்வதாகக் கூறினார். ஆனால் என்னை டேனியலைச் சந்திக்க அனுமதிக்கவில்லை. இதற்குள் மாலை 6.45 மணி ஆகிவிட்டதால், இரவு 7 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமலுக்கு வருவதற்குமுன் நான் அவசரமாக வீட்டிற்குத் திரும்பினேன்."

மறுநாள் வைத்தி டேனியல் உடல் விளக்குக் கம்பத்தில் கட்டப்பட்டு இருப்பதாகச் செய்தி வந்தது. அந்த இடத்தில் இருந்த ஒரு டாக்டர், கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

"அவருடைய தலையில் தோட்டா பாய்ந்த அடையாளம் இருந்தது. விளக்குக் கம்பத்தில் மூளையின் பகுதிகள் படிந்திருந்தன. உடையிலோ, அல்லது தரையிலோ ரத்தத் துளிகள் காணப்பட வில்லை. அங்கு உள்ள மக்களிடத்தில் இதைப் பற்றி விசாரித்தேன். ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்தபோதிலும், முந்திய இரவு சுமார் 9.30 மணி அளவில் ஒரு மோட்டார் வண்டி வந்து கம்பத்திற்கு அருகே வந்து நின்ற சப்தத்தைக் கேட்டதாகக் கூறினர். உடனடியாக ஒரு துப்பாக்கி வெடிக்கும் சப்தம் கேட்டதாகவும் அதைத் தொடர்ந்து, வண்டி கிளம்பிச் செல்லும் ஓசை கேட்டதாகவும் கூறினர்.

தலையில் தோட்டா பாய்ந்த காயத்தைத் தவிர, முதுகிலும், நெற்றியிலும், கழுத்தின் பின்புறத்திலும், உடைகளிலும் சிராய்ப்புகள் காணப்பட்டன...... வைத்தி டேனியல் வேறு எங்கோ இதற்கு முன்னால் கொல்லப்பட்டு, இந்த இடத்திற்கு அவரது உடலை எடுத்து வந்து சுட்டு இருக்க வேண்டும் என்று திடமாக நான் நம்புகிறேன். தோட்டா பாய்ந்த இடத்தில் ரத்தம் கசியாத காரணத்தினால், அவர் 9.30க்கு 5 மணி நேரம் முன்னாலேயே கொல்லப் பட்டிருக்க வேண்டும் என்பது என் கணிப்பு."

ஒரு உறவினர் விவரிக்கிறார்:

"இவளாலையில் உள்ள பெரியவிளான் இந்திய அமைதிப் படை முகாமிற்குச் சென்று சம்பவம் பற்றிக் கூறி, உடலை அப்புறப்படுத்த அனுமதி கேட்டேன். காமண்டன்ட் ஒரு மைல் தூரம் தள்ளி யிருக்கும் பண்டத்தரிப்பு இந்திய அமைதிப்படை முகாமிற்குச் சென்றிருப்பதாகக் கூறப்பட்டது. நான் காலை சுமார் 8 மணியளவிற்கு அந்த முகாமிற்குச் சென்றேன். வந்த காரணத்தைக் கூறியவுடன், ஒரு அதிகாரியைப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. வைத்தி டேனியல் இந்திய அமைதிப் படையால் முந்தைய தினம் கைது செய்யப்பட்டதையும், இன்று அவருடைய பிணம் விளக்குக் கம்பத்தில் கட்டப்பட்டிருப்பதையும் கூறிப் பிணத்தை அப்புறப்படுத்த எழுத்து மூலமான அனுமதியைக் கோரினேன். இந்திய அமைதிப்படை இதுபோன்ற ஒரு வேலையை செய்திருக்காது என்று கூறிய அந்த அதிகாரி, எழுத்து மூலமான அனுமதி தேவை யில்லை என்றும், தான் அனுமதி கொடுப்பதாகக் கூறினால் போதும் என்றும் கூறினர்.

1988 பிப்ரவரி 7 ஆம் தேதி அன்று காலை சுமார்

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# அதிகார அரசியலுக்கு 'ஆன்மீக'க் கவசம்!

ஆன்மீகத் தலைவர்களாக உலா வந்து கொண்டிருக்கும் சிலர், கோடிக் கணக்கான பணத்தில் கொழித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது அரசியலுக்குள்ளும் மூக்கை நீட்டத் துடிக்கிறார்கள். அண்ணாஅசாரே ஊழல் ஒழிப்பு இயக்கத்தில், ராம்தேவ், ஸ்ரீரவிசங்கர் போன்றவர்கள் தொடக்கத்தில் தலை காட்டினர். இப்போது காணவில்லை. முற்றம் துறந்தவர்களாக 'ஆன்மீக'த்துக்கு பாதை காட்டப் புறப்பட்ட இவர்கள், பல கோடி ரூபாய் முதலீட்டில் தொழில் நடத்துகிறார்கள். அறக்கட்டளை நடத்துகிறார்கள். பெரும் தொழிலதிபர்களைப்போல் விமானத்தில் பறக்கிறார்கள்.

இதேபோல் 1970 ஆம் ஆண்டுகளில் இந்திராகாந்தி குருவாக திரேந்திர பிரம்மச்சாரி என்ற 'யோகா' கற்றத் தருபவர் இருந்தார்; அரசியல் அதிகாரத்தில் கொடிகட்டிப் பறந்தார். இந்திரா குடும்பத்தில் மருமகள் மேனகாவோடு பிரச்சினை வந்த போது தலையிட்டு, 'சமாதானம்' பேசும் எல்லைக்கு அவரது செல்வாக்கு இருந்தது. அதேபோல், வங்காளத்தைச் சார்ந்த ஆனந்தமாயி என்பவரும் இந்திராவின் குரு. சந்திராசாமி, 1991களில் பிரதமராக இருந்த நரசிம்மராவின் குரு. நரசிம்மராவின் நம்பிக்கைக்குரிய சோதிடராகவும் அவர் விளங்கினார். டெல்லி ஜும்மா மஸ்ஜீத் தலைமை மத குருவான இமாம், இந்தியா முழுவதிலும் முஸ்லீம் வாக்காளர்களின் செல்வாக்குப் பெற்றிருந்தார். அவரது ஆதரவைத் தேடி அரசியல் தலைவர்கள் ஓடினார்கள். காஞ்சி சங்கராச்சாரியும் ஒரு காலத்தில் அரசியல் அதிகாரத்தோடு வலம் வந்தவர்தான். புட்டபர்த்தி சாய்பாபாவின் தலைமையகம் அரசியல் அதிகாரத்தின் மய்யமாக விளங்கியது. குடியரசு தலைவரிலிருந்து பிரதமர் வரை - புட்டபர்த்தி நோக்கி ஓடினார்கள்.

பழங்கால எகிப்து நாட்டின் அரசர்கள், கடவுளின் பிரதிநிதிகளாகவே கருதப்பட்டனர். 1945 வரை சீனாவின் அரசர்களை, கடவுளின் புத்திரர்களாக வழிபட்டனர். ஜப்பானிலும் இதே நிலை தான். அந்நாட்டு மன்னர்கள் பெண் தேவதையின் வழித் தோன்றல்களாக வணங்கப்பட்டனர். நேபாள அரசரும் விஷ்ணுவின் வாரிசாகவே கருதப்பட்டார்,. 2008 ஆம் ஆண்டில் தான், அங்கே மன்னராட்சி முடிவுக்கு வந்தது.

பிரான்ஸ் நாட்டை 72 ஆண்டு காலம் ஆட்சி செய்த 16 ஆம் லூயி மன்னர், தன்னை சூரியனின் புதல்வனாகக் கூறிக் கொண்டார். எனவே கடவுளின் ஆட்சியை எதிர்க்க எவருமே முன்வரவில்லை. ஆனால், கடவுளின் பெயரால் ஆட்சி நடத்தியவர்கள் அனைவருமே மக்களைச் சுரண்டினார்கள். கொடுங்கோல் ஆட்சி தான் நடத்தினார்கள். 1993 ஆம் ஆண்டு ஹார்வார்டு பல்கலைக் கழகத்தைச் சார்ந்த இரண்டு பொருளாதார நிபுணர்கள் (பிராட்டிலாங் மற்றும் ஆண்ட்ரி ஷீலிஃபர்) - இப்படி கடவுள் அவதாரங்களாக கூறிக் கொண்ட அரசர்கள் ஆட்சியில், மக்கள் வளர்ச்சிப் பெற்றார்களா என்ற ஆய்வை நடத்தினர். "வெற்றிகரமான இந்த மன்னர்கள் ஆட்சியில் மக்களின் பொருளாதாரம் கடுமையாக மோசமடைந்திருந்தது, இந்த ஆட்சிகள் கவலைக்குரியவைகளே தவிர, கொண்டாடக் கூடியவை அல்ல" என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர்.

அய்ரோப்பாவில் கடவுளின் பெயரால் ஆட்சி செய்ய வந்த அரசர்களுக்கு 1700 ஆம் ஆண்டுகளிலேயே எதிர்ப்புகள் வரத் தொடங்கிவிட்டன. மார்டின் லூதர் கிங், கிறிஸ்தவ பழமைவாதத்தை கேள்விக்குள்ளாக்கினார். நியூட்டனின் கண்டுபிடிப்புகள், உலகத் தோற்றம் பற்றிய மதவாதக் கருத்துகளை ஆட்டம் காண வைத்தன.

ஆனாலும், இந்தியாவில் பார்ப்பனர்கள் இன்னும் மதத்தின் ஆட்சிக் கனவில் மிதந்து கொண்டிருக்கிறார்கள். கடவுளின் நேரடி அவதாரங்களாக தங்களைக் கூறுவதற்கு, இவர்களுக்கு துணிவில்லை என்றாலும், 'ராமனை', 'விநாயகனை', 'கிருஷ்ணனை' வைத்து அரசியல் நடத்துகிறார்கள். பாபர் மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டு, தண்டனை எதுவும் பெறாமல், மீண்டும் ரதங்களில் ஏறி, 'யாத்திரை' வருகிறார்கள். உ.பி.யில் கோரக்பூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றிப் பெற்றுள்ள பா.ஜ.க.வைச் சார்ந்த யோகி ஆதித்தியநாத் என்பவர், தன்னை மதகுருவாகக் கூறிக் கொள்கிறார். தனது தந்தையிடமிருந்துதான் பெற்ற 'ஆன்மீக' பலத்தினால் தான் தனக்கு தேர்தலில் வெற்றி கிடைத்தது என்று கதை அளந்து கொண்டிருக்கிறார். 'இந்து யுவவாகினி' என்று தனியாக ஒரு ராணுவத்தையும் இவர் நடத்தி வருகிறாராம். கோரக்பூரில் மதக்கலவரத்தை உருவாக்கி, அதை 6 மாவட்டங்களில் பரவச் செய்த இந்த மத வன்முறையாளர், அதற்காக சிறைத் தண்டனையைப் பெற்றவர். பெண்களுக்கு 33 சதவீதம் நாடாளு மன்றத்தில் இடஒதுக்கீடு வழங்கக் கூடாது என்று வெளிப்படையாகப் பேசி வருகிறார். அதற்காக பா.ஜ.க. இவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இனப்படுகொலைகளை நடத்தி முடித்த குஜராத முதல்வர் மோடி, அடுத்து பிரதமர் பதவிக்கு காய் நகர்த்துகிறார். ரோம் பற்றி எறிந்த போது, நீரோ மன்னன் பிடில் வாசித்ததுபோல், குஜராத் பற்றி எரிந்தபோது வேடிக்கைப் பார்த்தவர் என்று உயர்நீதிமன்றத்தாலே குற்றம் சாட்டப்பட்டவர்தான் மோடி. கடவுள்களையும், கமண்டலங்களையும், ரதங்களையும், திரிசூலங்களையும் தூக்கிக் கொண்டு அரசியல் அதிகாரத்தைப் பிடிக்க ஓடிவரும் துணிச்சல் இந்த நவீன யுகத்திலும் இவர்களுக்கு எப்படி வருகிறது? பார்ப்பனிய சிந்தனைகள் சமூகத்தில் இருக்கும்வரை, தங்கள் சமூக ஒடுக்கு முறையைத் தடுத்துவிட முடியாது என்ற அசட்டுத் துணிச்சல்தானே!

- 'டைம்ஸ் ஆப் இந்தியா' (அக்.12) நாளேட்டில் அபிஷேக் பர்மன் எழுதிய கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

9 மணிக்கு, நான் வீட்டில் இல்லாதபோது, ஒரு செய்தி தெல்லிப்பளை இந்திய அமைதிப்படை முகாமிலிருந்து வந்தது. அதன்படி, நான் யாராவது ஒரு நண்பருடன் எப்பொழுது வேண்டுமானாலும் வந்து போகலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது."

உறவினர், ஒரு பாதிரியார் உட்பட நான்கு பேருடன், முகாமிற்கு சென்றேன். அங்கு:

"என்னுடன் பிப்ரவரி 5 அன்று பேசிய அதே அதிகாரி இருந்தார். அவர் வைத்தி டேனியலை 4 ஆம் தேதி மாலை 5 மணிக்கே விடுதலை செய்துவிட்டதாகக் கூறினார். நான் அன்று மாலை 6.45 வரையில் அவருடன் பேசிக் கொண்டு இருந்ததை நினைவுபடுத்தி, அவர் என்னை வைத்தி டேனியலைச் சந்திக்க அனுமதி தர மறுத்ததையும் எடுத்துக் கூறினேன். அவர் இரவு விசாரணை முடிந்தவுடன் மறுநாள் காலை வைத்தியை விடுதலை செய்வதாகக் கூறியதையும் எடுத்துக் கூறினேன். பொது மக்கள் இந்த சம்பவத்தைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று உங்களுக்கு தெரியுமா என்று அதிகாரியைப் பார்த்து பாதிரியார் கேட்டார். "உங்கள் முன்னிலையில் உங்களது நட்சத்திரக் கூட்டம், உங்கள் ஆதரவோடு இதைச் செய்துள்ளதாக பேசிக் கொள்கிறார்கள்" என்று அவர் கூறினார். அதற்கு அந்த அதிகாரி பதில் ஏதும் கூறவில்லை.

வைத்தி டேனியலின் முதலாளியிடம், இந்தச் சம்பவம் குறித்து இந்திய அமைதிப் படை விசாரணை ஒன்று நடத்தும் என்று கூறியுள்ளது. அதன் முடிவு, இந்த அறிக்கை எழுதப்படும்வரை தெரியவில்லை.

சிறீலங்காப் பெண்களை இந்திய அமைதிப் படையினர் பலாத்காரம் செய்துள்ளதாக நிறைய தகவல்கள் அம்னஸ்டி இன்டர்நேஷனலுக்குக் கிடைத்தள்ளது.1988 டிசம்பர் 18 ஆம் தேதியிட்ட 'சண்டே அப்சர்வர்' என்ற ஆங்கில நாளேட்டில் (பம்பாயிலிருந்து வருகிறது), பலாத்காரம் உட்பட பல குற்றங்களுக்காக, சிறீலங்காவில் இருக்கும் இந்திய அமைதிப்படையினர் சிலர் வேலை நீக்கம் செய்யப்பட்டதாகவும், சிலருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டதாகவும், ஒரு கட்டுரை வெளிவந்தது. இவ்வழக்குகள் உடனடித் தீர்ப்பு வழங்கும் இராணுவ நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டது. 14 சிப்பாய்கள் பாலுறவுக் குற்றங்கள் புரிந்துள்ளதாக அக்கட்டுரை குறிப்பிட்டிருந்தது.

**சட்டத்திற்குப் புறம்பான கொலைகள்**

வடகிழக்கு சிறீலங்காவில், இந்திய அமைதிப் படையினராலும், தெற்கு மாநிலங்களில் சிறீலங்கா இராணுவத்தினராலும் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அம்னஸ்டி இன்டர்நேஷனலுக்குப் புகார்கள் வந்துள்ளன. இக்கொலைகளுக்கு நேரடியான சாட்சிகள் இல்லாதபடியால், எத்தகைய சூழ்நிலையில் அவர்கள் கொல்லப்பட்டனர் என்பதைத் துல்லியமாக நிரூபிப்பது மிகவும் கடினம். மற்றவர்களைப் பொறுத்தவரை, குறிப்பாக வடக்கில், துப்பாக்கிச் சூடு நடக்கும்போது இடையில் மாட்டி பலியாகி விட்டனர் என்று இராணுவம் கூறுகிறது. தெற்கைப் பொறுத்தவரை, சந்தேகிக்கப்படும் எவரையும், அவரிடம் ஆயுதம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வேண்டுமென்றே கொல்வது, இராணுவத்தினரின் போக்காக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பரமக்குடி துப்பாக்கிச் சூடு: தேசிய ஆணையம் விளக்கம் கேட்கிறது

பரமக்குடியில் தலித் மக்கள் மீது தமிழக காவல்துறை நடத்திய துப்பாக்கிக் சூடு பற்றி தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் விரிவான அறிக்கை கேட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பி.அருண்ராய் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் எஸ்.மகேஷ்குமார் ஆணையத்தின் முன் நேரில் நடந்த சம்பவங்களைக் கூறி, துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தினர். இவர்களின் பதிலில் ஆணையம் திருப்தியடையவில்லை என்றும், கொல்லப்பட்டவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கை, ஆணையத்தின் முன் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், ஜான் பாண்டியனைக் கைது செய்யாமல் இருந்திருந்தால் இந்த நிலை உருவாகியிருக்காது என்றும், ஆணையத்தின் தலைவர் லதா பிரியகுமார் கூறியுள்ளார்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 8th December 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | டிச.15, 2011 | புரட்சி 10 | முழக்கம் 48 | விலை: ரூ.2.50

# முல்லைப் பெரியாறு: முதன்மை எதிரி இந்திய அரசே!

முல்லைப் பெரியாறு அணை மீண்டும் எரியத் தொடங்கியுள்ளது. கேரள அரசின் சண்டித்தனம் தமிழர்களை கொதித்தெழ வைத்துள்ளது.

- 1981லிருந்து 1994 வரை 3 முறை அணை பலப்படுத்தப்பட்ட பிறகும் -
- உச்சநீதிமன்றம் நியமித்த நிபுணர் குழு ஓராண்டு ஆய்வு நடத்தி அணை உறுதியாக உள்ளது என்று அறிவித்தப் பிறகும் -
- கேரள அரசின் வழக்கறிஞர் தண்டபாணியே நீதிமன்றத்தில் அணையின் உறுதியை ஒப்புக் கொண்டப் பிறகும் -

கேரள அரசு - அணை உடையப் போவதாக பீதி கிளப்பி, கேரள மக்களை உசுப்பிவிட்டதோடு, உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை காலில் போட்டு மிதித்து, அணையில் 120 அடி தண்ணீரை மட்டுமே தேக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் தீர்மானமும் நிறைவேற்றி விட்டது.

கேரள அரசின் சட்டவிரோதமான நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்க வேண்டிய இந்திய நடுவண் அரசு, ஏதோ, ஒரு வேறு நாட்டில் நடக்கும் நிகழ்வுகளைப்போல எந்தக் கருத்தும் தெரிவிக்காமல் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் செயலற்று நிற்கிறது.

கேரளாவின் சண்டித்தனத்துக்கு தமிழர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தாலும் அந்த உணர்வுகளை மதிக்க வேண்டும் என்றாலும் -

இந்தப் பிரச்சினையில் முதன்மையான எதிரி - இந்திய தேசிய ஆட்சி தான்!

இந்தியாவை அன்னிய சக்திகளிடமிருந்து காப்பாற்ற பல லட்சக் கோடி ரூபாயில் ராணுவ பலத்தை பலப்படுத்தி வரும் இந்திய அரசு -

தனது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் அடங்கியுள்ள மாநிலங்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளை - மோதலை முடிவுக்குக் கொண்டு வராமல் -

நீதியை சட்டத்தைக் காப்பாற்றும் கடமையைச் செய்யாமல் செயலற்றுப்போய் நின்று வேடிக்கை பார்ப்பது ஏன்?

இந்தியாவை ஒட்டு மொத்தமாகக் கட்டியாளும் திறனை செயலை இந்தியா இழந்து விட்டது என்பது தானே உண்மை!

செயலற்ற - நீதி வழங்காத - நியாயமான - சட்டபூர்வமான உரிமைகளைப் பெற்றுத்தரவியலாத இந்திய ஆட்சி - என்ற அமைப்பு தேவையா என்பதே இப்போது அர்த்தமுள்ள கேள்வியாகும்.

ஒன்றுபட்ட இந்தியா - தோல்வி அடைந்துவிட்டது. இந்தியாவில் வாழும் தேசிய இனங்களின் உரிமைகளுக்கு ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் தீர்வு கிடைக்காது என்ற நிலையில் -

தமிழர்களின் பிரதான எதிரியாக நிற்பது -

பார்ப்பன - பன்னாட்டு சுரண்டலுக்காக மட்டும் அதிகாரத்தைப் பயன்படுத்தும் இந்திய ஆட்சி தான்.

எனவே - தமிழர்கள் எதிர்ப்பு ‘இந்தியா’ என்ற பார்ப்பன பனியா வல்லாதிக்கத்தை நோக்கியே திருப்ப வேண்டும்.

இந்திய அரசே;

முல்லைப் பெரியாறு பிரச்சினையில் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

பாராமுகம் காட்டும் இந்தியாவிடம் - தமிழர்கள் தங்கள் இறையாண்மையை எப்படி இனியும் ஒப்படைக்க முடியும்?

தேசபக்த திலகங்களே!

ஒருமைப்பாடு விசுவாசிகளே!

அடக்குமுறை சட்டங்களை அவிழ்த்து விடுவோரே!

தமிழர்களின் நியாயமான இந்த கேள்விக்கு என்ன பதில்?

## சாதி ஒழிப்புக்கு சூளுரை



சாதியை ஒழிக்க அரசியல்சட்டம் கொளுத்தி சிறைச் சென்று மரணம் அடைந்த பட்டுக்கோட்டை ராமசாமி, மணல்மேடு வெள்ளைச்சாமி, போராளிகள் நினைவிடம் திருச்சி ஓயாமாரி இடுகாட்டில் உள்ளது. சட்ட எரிப்புப் போராட்ட நாளான நவம்பர் 26 அன்று திருச்சி மாவட்ட கழகத் தோழர்கள் சாதி ஒழிப்புப் போரில் சிறை சென்ற இலால்குடி முத்துசெழியன் தலைமையில் சாதி ஒழிப்பு சூளுரை ஏற்றனர்.

இதில் மாவட்டத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து, மாவட்ட அமைப்பாளர் ஆரோக்கியசாமி, மாவட்ட செயலாளர் கந்தவேல்குமார், மாவட்ட இணைச் செயலாளர் புதியவன், மாவட்ட பொருளாளர் மனோகரன், திருவரங்கம் நகரச் செயலாளர் அசோக், ஜெகநாதன், குணா, அபிமன்னன், சித்தார்த்தன், பொன்னுசாமி, ஆறுமுகம், போட்டோ ராமதாஸ், முருகானந்தம், ஏங்கல்ஸ், விஜி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சென்னையில் பரபரப்பு!

## கழக மேடையில் அய்யப்பன் வேடம் கலைத்த பக்தர்கள்

7.12.2011 அன்று வியாசர்பாடியில் உள்ள கன்னிகாபுரத்தில் புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. நா. தட்சிணாமூர்த்தி தலைமையேற்க, மாவட்ட அமைப்பாளர் வி.சனார்த்தனன் முன்னிலை வகிக்க, நா. பாஸ்கர் வரவேற்புரையாற்றினார்.

தென்சென்னை மாவட்ட துணைச் செயலாளர் ச. குமரன், வட சென்னை மாவட்ட கழகத் தலைவர் எ.கேசவன் உரையைத் தொடர்ந்து, வடசென்னை மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் சு. குமாரதேவன், கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அருள்தாஸ் இன எழுச்சிப் பாடல்களைப் பாட, சிற்பிராசன், மந்திரம் அல்ல தந்திரமே என்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினார்.

நிகழ்ச்சியில் அய்யப்ப சாமி பிறந்த கதையையும், இந்து மதத்திள்ள இழிவையும் விளக்கினார். கருத்துகளைக் கேட்ட இரண்டு அய்யப்ப பக்தர்கள் தங்கள் மாலையைக் கழற்றியதோடு, அய்யப்ப மாயையிலிருந்து தாங்கள் விடுபடுவதாக அறிவித்தனர்.

# பார்ப்பான் வீசிய எச்சில் இலை ‘புனிதமாம்’

பார்ப்பனர்கள் சாப்பிட்டுவிட்டு வீசி எறியும் எச்சில் இலைகள் மீது உருண்டு புரண்டால் தோல் நோய்கள் குணமாகும் என்ற நம்பிக்கையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பழங்குடி மக்கள் இதைச் செய்து வருகிறார்கள். கருநாடக மாநில அரசு கட்டுப்பாட்டிலுள்ள கோயிலில், அம்மாநில அறநிலையத் துறையே இந்த சடங்குகளை அனுமதித்து வருவதுதான் கொடுமை. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பார்ப்பான் எச்சில் இலையில் புரளும் இந்த மதச் சடங்கு மங்களூர் அருகே தட்சிண கன்னட மாவட்டத்திலுள்ள “குக்கே” சுப்பிரமணிய சாமி கோயிலில் மூன்று நாட்கள் நடக்கின்றன.

இந்த மூன்று நாட்களிலும் பார்ப்பனர்களுக்கு மட்டும் கோவில் செலவில் பெரும் விருந்து போடப்படுகிறது. ‘ஓசி’யில் மூன்று நாட்களும் தின்று கொழுக்கும் பார்ப்பனர்கள், ‘மிச்சம் மீதி’ களை எச்சில் இலையில் வைப்பார்கள்; அதற்காகவே காத்திருக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் கோயில் வளாகங்களில் இந்த எச்சில் இலைகளை அப்படியே எடுத்து வந்து அடுக்கி வைத்து, அதில் உருண்டு புரளுவதை பெரும் புண்ணியமாகக் கருதுகிறார்கள். இதனால் “தோல் வியாதிகள்” குணமாகிவிடும் என்றும், குழந்தை இல்லாத பெண்களுக்கு குழந்தை பெறும் வாய்ப்பு கிடைக்கும் என்றும் பார்ப்பனர்கள் நம்ப வைத்துள்ளனர்.

இந்த மடமை - பார்ப்பன சடங்குக்கு ‘மடே ஸ்நானா’ என்று பெயர் சூட்டப்பட்டு, 400 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறதாம். கடந்த ஆண்டு முதல் மனித மாண்புக்கே எதிரான இந்த காட்டுமிராண்டி சடங்குக்கு முற்போக்கு சிந்தனையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அரசு அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களிலேயே இதை அனுமதிக்கலாமா என்று கேள்வி எழுப்பி வருகின்றனர். உள்ளூர் நிர்வாகம் இதை நிறுத்திவிட முடிவு செய்தாலும், பார்ப்பனர்கள், அப்பாவி ஒடுக்கப்பட்ட மக்களைத் தூண்டிவிட்டு நிறுத்தக் கூடாது என்று எதிர்ப்புகளை தூண்டி விடுகின்றனர்.

தமிழ்நாட்டைப்போல இந்த அவலங்களைக் கண்டித்து மக்களை சிந்திக்க வைக்கும் பெரியார் இயக்கங்கள் கருநாடகத்தில் இல்லை என்பதால், ஒடுக்கப்பட்ட மக்களும் ‘விட்டில்பூச்சி’களாக பார்ப்பன சதியில் விழுந்து கிடக்கிறார்கள்.

இந்த மனிதவிரோத பார்ப்பனியத்தை தடை செய்யக்கோரி கருநாடகாவில் பிற்படுத்தப்பட்டோர் அமைப்பின் மாநிலத் தலைவர் கே.எஸ்.சிவராமு, கோயில் நிர்வாகத்திடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். மனுவை கொடுத்துவிட்டு வெளியே வந்து செய்தியாளர்களிடம் பேசுகையில், “கோயில் பார்ப்பனர்களுக்கு மட்டுமே விருந்து போடுவதை நிறுத்த வேண்டும் என்றும், மதம், நம்பிக்கை என்ற போர்வையில் இத்தகைய அறிவியலுக்கு எதிரான நிகழ்ச்சிகளை அனுமதிக்கக் கூடாது” என்றும் கூறினார்.

காவல்துறை பாதுகாப்பு இருந்தும், கும்பல் ஒன்று அவரைத் தாக்கத் தொடங்கியது. தப்பித்து ஓட முயன்ற அவரை வன்முறைக் கும்பல் துரத்திச் சென்று தாக்கியது. அதற்குப் பிறகே காவல்துறை தலையிட்டு, மருத்துவமனையில் அவரைச் சேர்த்தது. அறிக்கை ஒன்றை தயாரித்து, குடியரசுத் தலைவருக்கு அனுப்பி இருப்பதாகவும், உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர இருப்பதாகவும் சிவராமு தெரிவித்தார். தன் மீது தாக்குதல் நடத்திய பிற்படுத்தப் பட்ட மக்கள் அப்பாவிகள் என்றும், கோயில் அர்ச்சகப் பார்ப்பனரின் தூண்டுதலில் அடியாள் களாக மாறி தாக்கினர் என்றும் அவர் கூறியுள்ளார்.

கோயிலில் அமைந்துள்ள இந்தப் பகுதியில் ஆர்.எஸ்.எஸ். செல்வாக்கு அதிகம் என்று கூறப்படுகிறது. இதே மாவட்டத்திலிருந்து சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு கல்வித் துறை அமைச்சராக இருக்கும் வி.எஸ். ஆச்சாரி என்ற ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர், “இது மக்களின் நம்பிக்கை; அதில் தலையிட்டு தடை செய்தால், மக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்துவதாகும்” என்று கூறியுள்ளார். இத்தனைக்கும் இந்தப் பார்ப்பன அமைச்சர் ஒரு மருத்துவர்.




வழக்கறிஞரும், மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் முன்னாள் தலைவருமான டாக்டர் சி.எஸ். துவாரகாந்த் கூறுகையில், மீண்டும் பார்ப்பன மேலாதிக்கத்தை நிலைநிறுத்த விரும்பும் ஆர்.எஸ்.எஸ்.சின் செயல் திட்டங்களில் இதுவும் ஒன்று என்று கூறியுள்ளார். இப்படி மனித நாகரிகத்துக்கு எதிரான சடங்குகளை நடத்தும் இந்தக் கோயிலை நோக்கித்தான், பெரும் அரசியல் தலைவர்களும், சச்சின் டெண்டுல்கர் போன்ற கிரிக்கெட் “நட்சத்திரங்களும்”, ரவி சாஸ்திரி போன்ற பார்ப்பன கலைஞர்களும் அண்மைக்காலமாக வந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.

மதச்சார்பற்ற கட்சிகளாக கூறிக் கொள்ளும் காங்கிரஸ், ஜனதாதளம் (எஸ்) ஆகிய கட்சிகளும், பா.ஜ.க.வைப் போலவே தங்களது ஓட்டு வங்கியை மட்டுமே குறி வைத்து இந்த பார்ப்பனக் கொடுமையை எதிர்க்காமல் மறைமுகமாக ஆதரித்தே வருகிறார்கள். இடதுசாரி கட்சிகள் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இதேகோயிலில் ‘அஜலு’ என்ற பெயரில் ஒரு சடங்கு நடந்து வந்தது. பார்ப்பனர்கள் வயிறு புடைக்க சாப்பிட்டுவிட்டு எச்சில் இலையில் மிச்சமிருப்பதோடு, தங்கள் தலைமுடியையும் நகத்தையும் வெட்டிப் போட்டு பிச்சையாகக் கொடுப்பார்களாம். ‘கொரகா’ என்ற பழங்குடி மக்கள் அதைப் பிச்சையாகப் பெற்று பயபக்தியுடன் சாப்பிடுவார்களாம். இந்த பார்ப்பன சடங்கு சில ஆண்டுகளுக்கு முன்புதான் தடை செய்யப்பட்டது.

மாநில அறநிலையத் துறை அமைச்சராக உள்ள ஏ. நாராயணசாமி, தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர். இதைத் தடை செய்யவே தாம் விரும்புவதாக அவர் கூறியுள்ளார்.

2011 ஆம் ஆண்டிலும் பார்ப்பானின் எச்சில் இலையை புனிதமாகக் கருதும் சடங்குகள் மதம், கடவுள், பெயரால் தொடருவதும், அதை ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள், அமைச்சர்கள் நியாயப்படுத்துவதும், பார்ப்பன வல்லாதிக்கமே நாட்டை ஆள்கிறது என்பதை உறுதிப்படுத்தி வருகிறது.




## அறிவுத் துறையின் அஞ்சாமை பெரியார்; ஆயுத வழியின் கம்பீரம் பிரபாகரன்

தந்தை பெரியார் – தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், ஒத்த சிந்தனைகளைத் தொகுத்து ‘தந்தையும் தம்பியும்’ என்ற நூலை நாளந்தா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. நூலின் வெளியீட்டு விழா 2.12.2011 மாலை சர். பி.டி. தியாகராயர் அரங்கில் நடந்தது. பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் வை.கோ. நூலை வெளியிட்டார். முன்னாள் அமைச்சர் பரிதி இளம் வழுதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன் நூலைப் பெற்றுக் கொண்டு உரையாற்றினர். இயக்குநர் தமிரா அனைவரையும் வரவேற்றார். பதிப்பாசிரியர் பொ.தங்கபாண்டியன் நன்றி கூறினார். அவர் நூலின் அணிந்துரையில் எழுதியுள்ளதன் ஒரு பகுதி:

“சென்னை ராஜதானியின் முதலமைச்சராக நீங்கள்தான் அமர வேண்டும் என்று இரண்டு முறை பெரியாருக்கு ஆசை வார்த்தைக் காட்டினார் ராஜாஜி. “பார்ப்பானும் சூத்திரனும் இல்லாமல் ஒழிந்த காலத்தில் வேண்டுமானால் பதவியைப் பற்றி நாம் யோசிப்போம்” என்று மறுதலித்தார் பெரியார். டெல்லி அசோகா விடுதியின் தனி அறையில் பிரதமர் ராஜீவின் தூதுவர்களாக வந்தவர்கள். ‘வடகிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக உங்களை ஆக்குகிறோம். நீங்க இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுங்கள்’ என்று சொன்னபோது, “இந்த முதலமைச்சர் பதவிக்காக இத்தனை உயிர்களை நாங்கள் பலியிடவில்லை. தமிழரின் பூர்வீக தாயகத்தை தனி நாடாக ஆக்கினால் மட்டுமே ஏற்பேன்” என்று நிராகரித்தவர் பிரபாகரன். “எல்லாப் பதவிகளும் நாம் துப்பிப் போட்ட தாம்பூலங்கள்” என்றவர் பெரியார். “தமிழீழம் கிடைத்தால் அப்போது சமூக சேவகனாக குழந்தைகள் காப்பகத்தை நடத்திக் கொண்டிருப்பேன்” என்றவர் பிரபாகரன்! ‘தந்தையும் தம்பியும்’ என்ற புத்தகத்தை உருவாக்க இதைவிட என்ன பொருத்தம் வேண்டும்?

“ஜனநாயக” நாட்டில் பெரியார். ஜனநாயகம் முழுமையாக செத்துப் போன நாட்டில் பிரபாகரன். இரண்டு பேருமே வீட்டைவிட்டு ஓடிப் போனவர்கள். சொந்த நாட்டு அரசாங்கத்தால் உதாசீனப்படுத்தப்பட்டவர்கள். பெரியாரை, எடுத்ததற்கெல்லாம் கைது செய்தது இங்குள்ள அரசு. பிரபாகரனை அந்த நாட்டு அரசு பிடிக்கவே முடியவில்லை. ‘நான்சென்ஸ்’ என்று பெரியாரை விமர்சித்தார் பிரதமர் நேரு. ‘டெரரிஸ்ட்’ என்று பிரபாகரனை உருவகப்படுத்தினார் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா. எல்லாவிதமான போராட்டங்களையும் நடத்தினார் பெரியார். எல்லா விதமான படைகளையும் வைத்திருந்தார்பிரபாகரன். யாராலும் இவர்கள் இருவரையும் வீழ்த்த முடியவில்லை. இருவருமே கட்சியை, அமைப்பை நடத்துவதில் ‘சர்வாதிகாரிகள்’ என்று சொல்லப்பட்டனர். ஆனால், கறார் மனிதர்களாக மட்டுமே இருந்தனர். பொது வாழ்க்கையில் நாணயக் குறைவாக மட்டுமல்ல சொந்த வாழ்க்கையிலும் அப்பழுக்கற்ற மனிதனாக வலம் வந்தார் பெரியார். பிரபாகரனுக்கு ஆன்டன் பாலசிங்கத்தின் மனைவி கொடுத்த சான்றிதழ் ஒன்று போதும். அது இந்தப் புத்தகத்தில் இருக்கிறது!

உலகத்தின் அத்தனை சீர்திருத்தவாதிகளும், “நான் சொல்வதுதான் சரியானது” என்றே சொல்லி இருக்கிறார்கள். ஆனால், பெரியார் மட்டும்தான், “நான் சொல்வது என் அறிவுக்கு மட்டுமே சரியானது. தவறாக இருந்தால் என்னிடம் வாதம் செய்யுங்கள். தவறு என்றால் என்னிடம் எதிர்த்து நில்லுங்கள்” என்று சொன்ன வார்த்தைப் புரட்சிக்காரன்! உலகத்தின் எத்தனையோ போராளித் தலைவர்கள், “என்னுடைய லட்சியத்தில் இறுதி வரை உறுதியாக இருப்பேன். மரணத்தைக்கூட வெல்வேன்” என்றே சொல்லி இருக்கிறார்கள். ஆனால், பிரபாகரன் மட்டும் தான், “தமிழீழ லட்சியத்தில் இருந்து நான் விலகினால் என்னுடைய பாதுகாவலரே என்னைச் சுட்டுக் கொல்லலாம்” என்று தீர்ப்பளிக்கும் உரிமையை தனக்குப் பக்கத்தில் இருப்பவனிடமே கொடுத்த மாவீரன்!

அறிவுத் துறையின் அஞ்சாமை பெரியார் என்றால், ஆயுத வழியின் கம்பீரம் பிரபாகரன். இரண்டையும் இணைக்கும் அறிவாயுதமே இந்தப் புத்தகம்! காலம் தனக்குத் தேவையானதை இதில் இருந்து தேர்வு செய்யட்டும்! – என்று அணிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கடும் அடக்குமுறை சட்டங்களின் கீழ் தமிழ்நாடு மாணவர் கழகத்தினர் கைது

தமிழர்களைத் தாக்கிய மலையாளிகளுக்கு எதிராக போராட்டம் நடத்திய தமிழ்நாடு மாணவர் கழகத்தைச் சார்ந்த 18 தோழர்கள் உட்பட 27 பேர் மீது கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டு, பிணையில் வர முடியாமல் கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் இத்தகைய கடுமையான பிரிவுகளின் கீழ் கோவையைத் தவிர வேறு எந்த ஊரிலும் காவல்துறை வழக்குப் பதிவு செய்யவில்லை. இதற்குக் காரணம், கோவை மேற்கு மண்டலத்தில் காவல்துறை அதிகாரிகளாக இருப்போர், மலையாளிகள் என்பதுதான். கோவை காவல்துறை தனது போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் காவல்துறையை எதிர்த்தே போராட்டங்கள் வெடிக்கும் என்று மாவட்டக் கழகம் எச்சரித்துள்ளது. சிறையில் உள்ள தோழர்களை கழகத் தலைவர் கொளத்தூர்மணி, பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் சிறையில் சந்தித்தனர்.

## விடுதலைப் புலிகள் மீது தடை நீடிக்க காவல்துறை புனையும் பொய் வழக்குகள்

9.8.2011 அன்று சேசு ராசா மற்றும் கணேசன் ஆகியோரை கியூ பிரிவு காவல் துறையினர் மற்றும் சங்கர் நகர் காவல் துறையினர் கைது செய்து விழுப்புரம் தண்டவாளத்தில் குண்டு வைத்ததாக ஒத்துக் கொள்ளச் சொல்லி அடித்து துன்புறுத்தியுள்ளனர். பின் தமிழ்த் தேசிய இயக்கங்களின் கூட்டங்களுக்கு போகக் கூடாது, தமிழ் மொழி, தமிழ் இனம் என பேசக் கூடாது என மிரட்டியுள்ளனர்.

பின்னர், 14.8.2011 அன்று அவர்கள் இருவரும் வெடிப் பொருள்கள் வைத்திருந்ததாக கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டதோடு தேசிய பாதுகாப்புச் சட்டத்திலும் அடைத்துள்ளனர். விடுதலைப் புலிகள் மீதான தடை இன்னும் 6 மாதத்தில் முடிவடைய உள்ள நிலையில் தடையை நீட்டிப்பதற்காக இந்த பொய் வழக்கை தமிழ் உணர்வாளர்கள் மீது போட்டுள்ளனர்.

காவல் துறையின் பொய் வழக்கைக் கண்டித்து மனித உரிமை ஆர்வலர்கள், தமிழ் உணர்வாளர்கள் 28.11.2011 மாலை சென்னை மெமோரியல் அரங்கம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமிழக மக்கள் உரிமைக கழக தலைவர் பா. புகழேந்தி தலைமையில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தியாகு (தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்), பாவேந்தன் (தமிழ்த் தேசிய முன்னணி), பேராசிரியர் கல்விமணி (மக்கள் உரிமைக் கூட்டமைப்பு), தமிழ்நேயன் (த.ஒ.வி.இ.), வேலுமணி (தமிழர் எழுச்சி இயக்கம்), தமிழர் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த தமிழ் வேங்கை, முத்தமிழ் மணி, கரிகாலன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். கண்ணன் நன்றி கூறினார்.

## பரமக்குடி துப்பாக்கிச் சூடு பொது விசாரணை அறிக்கை

பரமக்குடி, மதுரை, இளையாங்குடியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான துப்பாக்கிச் சூடு பற்றி நடத்தப்பட்ட பொது விசாரணை அறிக்கை வெளியீட்டு நிகழ்வு டிசம்பர் 3 ஆம் தேதி மதியம் 3 மணியளவில் சென்னை லயோலா கல்லூரியில் பூ. சந்திரபோசு தலைமையில் நடந்தது. பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வைகோ, ஜி. இராமகிருட்டிணன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி), நல்லக்கண்ணு (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), பேராசிரியர் ஜவஹிருல்லாஹ் (மனித நேய மக்கள் கட்சி), பழ. நெடுமாறன், மருத்துவர் ராமதாசு, பெ. மணியரசன், பேராசிரியர் தீரன் (நாம் தமிழர்) உள்ளிட்ட பலரும் உரையாற்றினர்.

## கழகத் தோழர் அசுவத்தாமன் இல்லத் திறப்பு

திருப்பெரும்புதூர் கழகத் தோழர் செ. அசுவத்தாமன், எம்.ஏ., எம்.பில். அவர்களின் ‘பெரியார் எழில் மாளிகை’யை திருப்பெரும்புதூர் நெமிலி சாலையில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி 2.12.2011 காலை திறந்து வைத்தார். இல்லத் திறப்பு விழாவையொட்டி கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கப்பட்டது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

### தமிழீழ விடுதலைக்கு வாக்கெடுப்பு நடத்துக:

# உலகத் தமிழர் செயல் திட்டத்துக்கான பிரகடனம்

ஈழத் தமிழர்களின் தேசிய இனச் சிக்கலுக்கு நீதி கோரும் திட்டம் ஒன்றை உலகம் தழுவிய அறிவிப்பாக தமிழ்நாடு மற்றும் சர்வதேசங்களில் வாழும் சமூக செயற்பாட்டாளர்கள் பிரகடனமாக முன் வைத்துள்ளனர். தமிழீழ விடுதலையை சர்வதேசங்களின் ஊடாக முன் நகர்த்த வேண்டிய இச் சூழலில் இந்த நீதி கோரும் பிரகடனம் மிகச் சிறந்த செயல் திட்டமாக கருதப்படுகிறது. ஈழத் தமிழர்கள் பிரச்சினைக்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காணும் எந்த முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்று இந்த பிரகடனம் வற்புறுத்துகிறது. தமிழீழம் என்ற சுதந்திரமான அரசை உருவாக்குவதில் முதன்மையாக வாக்கெடுப்பு ஒன்றை ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதியில் வாழும் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மற்றும் இந்தியா உள்ளிட்ட உலகின் பிற பகுதிகளில் வாழும் தமிழர்களிடையே நடத்த வேண்டும் என்றும், இந்தப் பொது வாக்கெடுப்பை கண்காணிக்கவும் சரியான முறையில் நடத்தவும், உலகம் தழுவிய முடிவு ஒன்றை உருவாக்க வேண்டும் என்றும் இந்த பிரகடனம் கோருகிறது. இப் பிரகடனத்தின் அடிநாதமாக மூன்று கோட்பாடுகள் முன் வைக்கப்படுகின்றன.

தமிழர்களுக்கென்று தனித் தாயகம் இருந்தது என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள், இலங்கை அரசிடம் தமிழர்கள் தங்கள் தனித் தாயக உரிமையை பறி கொடுத்தப் பிறகு, ஒன்று சேர்ந்து வாழ முடியாத நிலையில் தனித் தமிழீழம் என்ற கோரிக்கையை முன் நிறுத்தி அதற்கு ஆதரவாக மக்கள் வாக்கெடுப்பைப் பெற்றது - முதல் வரலாற்றுச் சான்று.

பிறகு - அரசின் ஒடுக்குமுறையை எதிர்த்து 30 ஆண்டுகாலம் ஆயுதப் போராட்டம் நடத்தி தமிழர் பகுதிகளை மீட்டு, தமிழர்களின் தனி ஆட்சி ஒன்றை நடைமுறையாக நிறுவப்பட்டது. அந்த பிரதேசங்களுக்கு போர் நிறுத்த ஒப்பந்தத்தின் வழியாக கிடைத்த ஆவணம், மீட்கப்பட்ட தமிழர் தேசத்துக்கான இரண்டாவது சான்று.

தமிழர்கள் நடத்தி வந்த நிழல் ஆட்சியை ஆயுதமுனையில் இலங்கை பறித்தெடுக்க பல லட்சம் மக்களை இனப் படுகொலை செய்தது. வரலாற்று ரீதியாகவும், பிறகு மீட்கப்பட்ட நிலையிலும் தனித்துவமாக விளங்கிய தமிழீழ பிரதேசத்தை இனப் படுகொலைக்குப் பிறகு சிங்களர்குடியேற்றம் சிங்களர் கலாச்சாரத் திணிப்பு மற்றும் ராணுவ ஆட்சி மூலம் பறித்து வருவதிலிருந்து மீட்டு, அழிவிலிருந்து தமிழர்களை மீட்டு, தனியாட்சியை உறுதி செய்யக்கோருவது மூன்றாவது கோரிக்கை.

‘அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான தமிழீழ அரசு’ (Remedial Soverignity) என்ற உலக நாடுகளின் முன்பாக வைக்கப்படும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி செயல்படுவதற்கும் இதற்கு சர்வதேச சமூகம், கடந்த கால தவறுகளை உணர்ந்து தங்களைத் திருத்திக் கொள்வதற்கும் பிரகாசமான வாய்ப்புகள் இந்த மூன்றாவது கோரிக்கையில் தங்கியிருப்பதாக சர்வதேச சட்ட நிபுணர்களும், சமூக செயற்பாட்டாளரும் கருதுகிறார்கள். சுவிட்சர்லாந்து சுந்தரலிங்கம், அமெரிக்கா ராஜிவ் சிறீதரன், கனடா கிருட்டின சரவணமுத்து, இந்தியா-தமிழ்நாடு பூங்குழலி ஆகியோரது பெயர்களோடு ‘தமிழ்நெட்’ இணையதளம் இந்த பிரகடனத்தை வெளியிட்டுள்ளது.

முள்ளி வாய்க்கால் படுகொலைக்குப் பிறகு தமிழ் ஈழ விடுதலை, சர்வதேச அரசியல் தளத்துக்கு நகர்ந்துள்ள நிலையில் அதை முன்னெடுக்கும் செயல் திட்டமாக இப்பிரகடனம் அமைந்துள்ளதால் அதன் ஆங்கில வாசகத்தின் முழுமையான தமிழ் வடிவத்தை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வெளியிடுகிறது.

தமிழ்நாடு, கனடா, அமெரிக்கா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய இடங்களில் வசிக்கும் சமூக செயற் பாட்டாளர்களாகிய நாங்கள், இலங்கைத் தீவிலும், தமிழ்நாட்டிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் வாழும் ஒத்த சிந்தனையுடைய பலருடன், குறிப்பாக இளைய தலைமுறையினருடன் பரவலாக உரையாடி விவாதித்தப் பின்னர், இப்பிரகடனத்தை வெளியிடுகிறோம். தமிழ்மக்கள் மீது அவர்களின் தாய் நிலமான இலங்கைத் தீவின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில், உலக வல்லாதிக்க நாடுகளின் ஆதரவுடன் இலங்கை அரசு, இனப் படுகொலை மற்றும் இன கட்டமைப்புப் படுகொலை ஆகியவற்றைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. இது தென்னாசியாவின் அமைதி மற்றும் நிலைத் தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாகவும், ஒட்டுமொத்த உலகிற்கும் ஓர் அபாயகரமான முன்னோடியாகவும் இருக்கிறது. இந்நிலையில் இலங்கைத் தீவின் ஈழத் தமிழர்களின் நிரந்தர தேசிய சிக்கல் உரிய முறையில் அணுகப்படுவதற்கான வழி காண்பதே இப் பிரகடனத்தின் நோக்கம்.

தமிழீழம் எனும் சுதந்திரமான இறைமையுள்ள ஓர் அரசை உருவாக்குவதில் முடிவெடுக்க, இலங்கைத் தீவின் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மக்கள், புலம் பெயர்ந்த தமிழர்கள் மற்றும் இந்தியா மற்றும் உலகின் பிற நாடுகளில் அகதிகளாக அடைக்கலம் புகுந்துள்ள தமிழ் மக்கள் ஆகியோரிடையே ஒரு பொது வாக்கெடுப்பை நடத்தவும் சரியான முறையில் அதனை கண்காணிக்கவும் ஓர் உலககளாவிய முடிவு எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் பிரகடனம் செய்கின்றோம்.

இப்பிரகடமானது, ஈழத் தமிழர்களின் வரலாற்று வழி வந்த தனித் தேசம் மற்றும் அவர்கள் போராடிப் பெற்ற தனித் தேசம் ஆகியவற்றுடன், அவர்களை அழிவிலிருந்து காக்க வழங்கப்பட வேண்டிய தனித் தேசம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

**வரலாற்று வழிவந்த தனித்தேசம்:** இதுவரை கிடைத்துள்ள மிகப் பழமையான ஆவணச் சான்றுகளின் காலத்திலிருந்து ஈழத் தமிழர்கள் இலங்கைத் தீவில் ஒரு தேசமாக இருக்கின்றனர். வரலாற்று வழியாகவும், புவியியல் அடிப்படையிலும் வரையறுக்கப்பட்ட தாய்நிலம், தனித்துவமான மொழி, பண்பாடு மற்றும் கூட்டுணர்வு ஆகியவற்றை கொண்டுள்ளனர். போர்ச்சுகீசியர்களின் காலனிய ஆதிக்கத்திடம் தங்கள் அரசை இழந்த வரலாறு அவர்களுக்கு உள்ளது. அதனைத் தொடர்ந்து டச்சுக்காரர்களிடமும், பிரிட்டிசாரிடமும் இழந்த அவர்கள், அய்ரோப்பிய காலனி ஆதிக்கம் முடிவுற்ற காலத்தில் அதனை திரும்பப் பெறாதவர்களாகவும் உள்ளனர். சிலோனின் விடுதலை தொடங்கி 30 ஆண்டு காலம், சிங்கள தேசியத்துடன் நாட்டுரிமையை பகிர்ந்து கொள்ள ஜனநாயக வழியில் போராடி வந்த தொடர்ச்சியான வரலாறு அவர்களுக்கு உண்டு. ஜனநாயக வழியில் போராடி தோற்றதன் விளைவே, 1976 இல் அவர்களின் வரலாற்று சிறப்பு மிக்க (வட்டுக் கோட்டை) சுதந்திர பிரகடனம் ஆகும். 1977 தேர்தலில் வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த மக்கள் தங்கள் வாக்குகளின் மூலம் இப் பிரகடனத்தை அங்கீகரித்தனர்.

**போராடிப் பெற்ற தனித் தேசம்:** ஜனநாயக வழிமுறைகள் தோல்வியுற்ற நிலையில், அரசின் ஒடுக்குமுறையின் தூண்டுதலால் மற்றுமொரு 30 ஆண்டுகள் இராணுவப் போராட்டத்தினை அவர்கள் நடத்தினர். இப்போராட்டத்தின் விளைவாக, நடைமுறை அரசு ஒன்று நிறுவப் பட்டது. அதன் மூலம் ஈழத் தமிழர்கள் தங்கள் நாட்டை போராடிப் பெற்றனர். 2002 இல் பன்னாட்டுத் துணையுடன் நடந்த அமைதி பேச்சு வார்த்தைகள் இந்த போராடி மீட்ட நாட்டுக்கு மறைமுகமாக அளிக்கப்பட்ட அங்கீகாரமாகும். 2004 இல் நடைபெற்ற தேர்தலில், அந்த நடைமுறை அரசு அடையாளம் காட்டப்பட்ட தமிழ் அரசியல் அமைப்பை வெற்றிப் பெறச் செய்ததன் மூலம் ஈழத் தமிழர்கள், போராடிப் பெற்ற இறைமையின் மூலம்

4 ஆம் பக்கம்

# சென்னையில் கழகம் நடத்திய சட்ட எரிப்பு நாள்




28.11.2011 அன்று மாலை 6 மணிக்கு திருவல்லிக்கேணி பகுதியில் கழக சார்பில் நவம்பர் 26, சட்ட எரிப்பு நாள் மற்றும் பரமக்குடி துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் தலித் சுப்பையாவின் இசைப் போர் நிகழ்ச்சி எழுச்சியுடன் நடைபெற்றது. ம. தம்பித் துரை தலைமை வகித்தார். வ. இரவி வரவேற்புரையாற்றினார். கே. தமிழரசு, இரா. அருண்குமார், மா.விஜி முன்னிலை வகித்தனர். தோழர்கள் அன்பு. தனசேகரன், குமரன் உரையைத் தொடாந்து 'இமானுவேல் சேகரன் படுகொலை முதல் பரமக்குடி துப்பாக்கிச் சூடு வரை' என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'பெரியாரும் சட்ட எரிப்புப் போராட்டமும்' என்ற தலைப்பில் வே. ஆனைமுத்து (பொதுச் செயலாளர் மா.பெ.பொ.கட்சி), 'அணுமின் உலையின் ஆபத்தும் கூடங்குளம் போராட்டமும்' என்ற தலைப்பில் எழுத்தாளர் முத்துக்கிருட்டிணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கு. சரவணன் நன்றியுரையாற்றினார்.

## முடிவெய்தினார்

ஒரத்தநாடு வட்டம் வடசேரி கிராமத்தைச் சேர்ந்த கழகத் தோழர் கா.மா. கார்த்திகேயன் தந்தையார் மாணிக்கம், டிசம்பர் 5 ஆம் தேதி முடிவெய்தினார். இறுதி ஊர்வலத்தில் கழகத்தினர் உட்பட பல்வேறு அமைப்பினரும் பங்கேற்றனர்.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

அமைக்கப்பட்ட நடைமுறை அரசை அங்கீகரித்தனர்.

**அழிவிலிருந்து காக்க வழங்கப்பட வேண்டிய தனித் தேசம்:** நடைமுறை அரசுக்கு எதிராக, இரு தரப்பினருக்கும் இடையிலானசமநிலை குலைக்கப்பட்டமையும், அது இனப்படுகொலையில் முடிந்ததையும் அய்.நா. வல்லுநர் குழு அறிக்கையும் அமைதி நடவடிக்கைகள் குறித்த நார்வேயின் மதிப்பீட்டு அறிக்கையும், இனப் படுகொலை என்றச் சொல்லை பயன்படுத்தாத போதிலும் உறுதி செய்துள்ளன. இலங்கை அரசுடைய சிங்கள இன இராணுவத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் ஆட்சி, மக்கள் தொகை விகிதாசாரத்தை மாற்றுவதற்கான சிங்கள குடியேற்றங்கள் மற்றும் தமிழர் தேர்தல் தொகுதிகளின் எல்லை மாற்றங்கள், பல்வேறு அரசு அமைப்புகள் மற்றும் நிறுவனங்களால் தமிழர் தாய் நிலத்தில் நிகழ்த்தப்படும் சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டு ஒடுக்குமுறைகள் ஆகியவற்றின் மூலம் தமிழர்களின் தாய் நிலமான வடக்கும், கிழக்கும், வெளிப்படையான, தீவிரமான, திட்டமிடப்பட்ட மற்றும் அதிவிரைவான இனக் கட்டமைப்பு அழிப்புக்கு ஆளாகியுள்ளன. இது, ஈழத் தமிழ் தேசத்தை அழித்தொழிப்பிலிருந்து பாதுகாக்கும் உரிமையை எழுப்புவதோடு அந்த உரிமையை தவிர்க்க இயலாத ஒன்றாக ஆக்குகின்றது. இனப் படுகொலை மற்றும் இனக் கட்டமைப்பு அழிப்பிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கென சுதந்திரம் கோரும் ஈழத் தமிழர்களுக்கு, அழிவிலிருந்து காக்க வழங்கப்பட வேண்டிய தேசம் என்ற கோட்பாடு பொருந்துகிறது. ஒருங்கிணைந்த இலங்கைக்குள் மட்டுமே தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்துவதை அனைத்து வெளிநாட்டு சக்திகளும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என நாங்கள் பிரகடனம் செய்கின்றோம்.

இலங்கைத் தீவின் சிக்கலுக்கு நீடித்த அமைதியும் நீதியும் கொண்டு வரவும், சிக்கலில் உள்ள இரு தேசங்களும் தத்தமது இறைமைக்குள் முழுமையான கட்டுப்பாட்டுடன் அமைதியாக இயைந்து வாழவும், பன்னாட்டுப் பங்கேற்பாளர்கள் உள்நாட்டுத் தீர்வுகள் குறித்த ஏமாற்றுத் திட்டங்களை கைவிட்டு, இலங்கை - தமிழீழ சிங்களை இரு தேசங்களுக்கு இடையிலான சிக்கலாக அணுகக் கூடிய வெளிப்படையான பன்னாட்டு செயற்திட்டம் ஒன்றில் முனைப்புடன் ஈடுபட வேண்டிய தருணம் வந்து விட்டது என்று நாங்கள் பிரகடனம் செய்கின்றோம். ஈழத் தமிழர்களின் தேசியப் போராட் டத்தின் குறியீடுகளும் வெளிப்பாடுகளும் சிறுமைப்படுத்தப்படக் கூடாது என்றும் உயர்த்திப் பிடிக்கப்பட வேண்டும் என்றும், ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தங்கள் உயிரை அளித்த அனைவரும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும், ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஓர் அரசியல் தீர்வை எட்டக் கூடிய ஒருங்கிணைந்த உலகளாவிய செயற்பாடுகளுக்கு உலகின் அனைத்து ஜனநாயக சக்திகளும் பங்களிக்க வேண்டும் என்றும் நாங்கள் பிரகடனம் செய்கின்றோம்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# அய்யப்பன் இந்தியனா? மலையாளியா?

அய்யப்பனை நம்பி, விரதம் இருந்து இருமுடி தரித்து சபரிமலைக்குப் பயணம் போன பக்தர்கள், அய்யப்பனை தரிசிக்க முடியவில்லை.

கேரளத்துக்காரர்கள் தமிழக அய்யப்ப பக்தர்களை விரட்டி விரட்டி அடிக்கிறார்கள். 'அய்யப்பன்' மலையாளிகளுக்கான கடவுள் என்கிறார்கள். இங்கே தமிழனுக்கு என்னடா, வேலை என்று கேட்கிறார்கள்.

அய்யப்பன், இந்தியனா? மலையாளியா? என்பதே தெரியவில்லை. ஆக, 'எல்லாம் வல்ல' 'சர்வசக்தி'யுள்ள கடவுள்களுக்கும் எல்லைப் பிரச்சினை வந்து விட்டது. அந்தந்த மாநில எல்லைக்குள்ளேதான் இனி "பகவான் சக்தி" செல்லுபடியாகும் போலும்!

'அய்யப்பன்' மலையாளிகளுக்கே என்ற முழக்கம் வெடிக்கும்போது - நான் மனிதகுலத்துக்கே கடவுள் என்று, அய்யப்பன் எதிர்த்துப் பேசப் போவதில்லை. அப்படி ஒரு சக்தி இருந்தால்தானே பேசுவான்? ஒன்று மட்டும் உண்மை. இந்திய எல்லைப் பரப்புக்குள் அடங்கிக் கிடக்கும் கடவுள்கள் நாடுகளின் எல்லைகளை விட பார்ப்பனர்களின் மந்திரத்துக்கு மட்டுமே அடங்கிக் கிடக்கிறார்கள். பார்ப்பன மந்திரங்கள்தான் கற்சிலைகளையே "கடவுளா"க்குகின்றன.

கல்லை கடவுளாக்கும் அபார சக்தி கொண்ட பார்ப்பனர்கள் அந்த சக்தியைக் காட்டி மிரட்டியே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களையும் 'சூத்திரர்', 'பஞ்சமர்'களாக்கி வருகின்றனர். இந்த பிறப்பு வழி வந்த பார்ப்பன அதிகாரம் அரசியலிலும் பொருளாதாரத்திலும் விரிவடைந்து இந்தியாவையும் பார்ப்பன காலடிக்கு கொண்டு வந்து சேர்ந்துவிட்டது.

அடேய் பார்ப்பனர்களே, கல்லை கடவுளாக்கும் சக்திப் படைத்த உங்கள் மந்திரங்களைக் கொண்டு இந்த நாட்டின் ஒடுக்கப்பட்ட சாதி மக்களையும் உயர்ந்த சாதியாக்குங்களேன் என்று கேட்டார், பெரியார்; பார்ப்பானிடம் பதில் இல்லை.

'சூத்திர' மலையாளிகள் 'சூத்திர' அய்யப்பர்களை அடித்து விரட்டலாம். ஆனால், 'அய்யப்பன்' சன்னிதான அதிகாரத்தை தங்கள் பூணூலுக்குள் கட்டிப் போட்டு வைத்திருப்பவர்கள் கேரளத்து நம்பூதிரி பார்ப்பனர்கள் தான்! அய்யப்பன் மனதில் என்ன நினைக்கிறான் என்பது தங்களுக்கு மட்டுமே தெரியும் என்று தேவப் பிரசன்னம் பார்க்கும் உரிமையும் 'அவாளு'க்குத்தான்.

'சூத்திர' தமிழர்களை விரட்டி அடித்துவிட்டதாலேயே 'சூத்திர' மலையாளிகள் அய்யப்பனுக்கு முழு உரிமை கோரவும் முடியாது. அவர்களால் அய்யப்பனை நெருங்கிடவும் முடியாது. அங்கே நம்பூதிரிப் பார்ப்பான் 'சூத்திர' மலையாளிகளை மட்டுமல்ல, பெண்களையும் சேர்த்து கர்ப்பகிரகத்திலிருந்து வெளியே விரட்டி அடிக்கிறான். மொழி வழி மாநில எல்லைகளை உடைத்துக் கொண்டு இந்திய தேசியத்தில் மய்யம் கொண்டிருப்பவர்கள் பார்ப்பனர்கள் தான். இந்த மய்யமான பார்ப்பன பனியா அதிகாரத்தை காப்பதற்கே இந்தியா, நாடாளுமன்றம், ராணுவம், தேசியம் - எல்லாமுமே.

கேரளத்து அய்யப்பன் மட்டும் இதற்கு விதிவிலக்கு ஆகி விடுவானா?

கேரள-தமிழக 'சூத்திரர்'களுக்கிடையேதான் மோதல் நடக்கும். 'தேசிய' பார்ப்பான் ஒருமைப்பாடு - தேச பக்தி பேசிக் கொண்டு 'சட்டம் ஒழுங்கு கெட்டுடுத்தே' என்று புலம்புவான்! இதுதான்இந்திய தேசம்!

## வடசென்னையில் கழகக் கூட்டம்





தென்சென்னை – வடசென்னை மாவட்டங்களில் சிற்பி ராசன் நடத்தும் 'மந்திரமா தந்திரமா' தொடர் கூட்டங்கள் சிறப்புடன் நடந்து வருகின்றன. வடசென்னையில் கழகம் நடத்திய அம்பேத்கர் நினைவு நாள் கூட்டத்தில் சிற்பி ராசன் நிகழ்ச்சி நடத்தும் காட்சி. (டிசம்பர் 7)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 15th December 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | டிச. 22, 2011 | புரட்சி 10 | முழக்கம் 49 | விலை: ரூ.2.50


# இந்திய துரோகங்களை அம்பலப்படுத்துவோம்

*முல்லைப் பெரியாறு – கூடங்குளம் பிரச்சினைகள் தமிழகத்தில் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றன. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தமிழக மக்கள் தன்னெழுச்சியாகப் போராடி வருகிறார்கள். கேரளாவின் அடாவடித்தனத்தைத் தட்டிக் கேட்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்குத்தான். ஆனால், திருடனையும், பொருளைப் பறிகொடுத்தவனையும் 'சமமாக உட்கார்ந்து' சமரசம் பேசச் சொல்கிறது இந்திய அரசு!*

**முல்லைப் பெரியாறு துரோகம்**

முல்லைப் பெரியாறு நீர் மட்டத்தை 120 அடியாகக் குறைக்க வேண்டும் என்று சட்டமன்றத்திலேயே தீர்மானம் போடுகிறது - கேரள ஆட்சி. இது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான சட்டவிரோத நடவடிக்கை. தட்டிக் கேட்க கடமைப்பட்டுள்ள இந்திய அரசு, கண்டிக்கவில்லை. மாறாக, உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை தமிழக முதல்வர் வெளியிட்ட விளம்பரத்தில் எடுத்துக்காட்டியதை 'அரசியலாக்குவதாக' உச்சநீதிமன்றம் கண்டிக்கிறது. இது என்ன நியாயம்?

- முல்லைப் பெரியாறு அணையை உடைப்பதற்கு கேரளா தயாராகி வருகிறது. அதற்கான வெடி பொருள்கள் தயாராக இருப்பதாகவும் செய்திகள் வருகின்றன. அணையை உடைப்பதற்கு ரூ.40 கோடி நிதி ஒதுக்கி, அதற்கு அமெரிக்க தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் முயற்சிகள் நடப்பதாகவும் செய்திகள் வருகின்றன. இந்த நிலையில் அணையின் பாதுகாப்புக்கு கேரள போலீசாரையே நிறுத்தினால், எப்படி அவர்கள் பாதுகாப்பை வழங்குவார்கள்? எனவேதான் மத்திய பாதுகாப்புப் படையை அங்கே நிறுத்த வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்துகிறது. இந்திய அரசு, இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டாமா? இது இந்திய அரசின் இரண்டாவது துரோகம்.

  இதேகோரிக்கையை வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு தொடர்ந்த வழக்கையும் உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

  அணை உடைந்தால் - கேரளாவுக்கு ஆபத்து என்று கூக்குரலிடுவது உண்மையானால், கேரள அரசு அணையை உடைப்பதாலும் ஆபத்து ஏற்படும் தானே!

- அணையின் நீரைப் பயன்படுத்த 999 ஆண்டுகளுக்கான உரிமை, தமிழ்நாட்டுக்கு இருக்கும்போது, அணையை இடித்துவிட்டு புதிய அணை கட்டுவது உடன்பாட்டுக்கு எதிரான செயல் என்பதை சுட்டிக்காட்டி கேரள அரசின் அத்துமீறலைத் தடுக்க வேண்டிய பொறுப்பும் இந்திய அரசுக்குத்தான். ஆனால், வாய்மூடி மவுனம் சாதிக்கிறது; ஒரு கண்டனம்கூட வரவில்லை.

- சென்னையில் காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் பேசிய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், 'கேரள அரசுக்கு திடீரென அணை உடைந்துவிடும் என்று அச்சம் வந்துவிடவில்லை; அங்கே வரவிருக்கும் இடைத்தேர்தல் அச்சம் தான்' என்று பேசினார். முல்லைப் பெரியாறு அணை அடங்கியுள்ள பிரவம் - சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தல் விரைவில் வர இருக்கிறது; தேர்தல் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. மயிரிழையில் ஊசலாடும் கேரள காங்கிரஸ் ஆட்சிக்கு, இந்த இடைத் தேர்தல் வெற்றி மிகவும் முக்கியத்துவமானதாகும்.

ப. சிதம்பரத்தின் மனம்திறந்த இந்த பேச்சுக்கு கேரள முதல்வர் மற்றும் மத்திய மலையாள அமைச்சர் வயலார் ரவி ஆகியோரிடமிருந்து கண்டனங்கள் வரவே, தனது கருத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக ப.சிதம்பரம் அறிவித்துள்ளார். மத்திய அமைச்சரவையில் தமிழகத்தைச் சார்ந்த அமைச்சர் ஒருவரே தமிழ்நாட்டின் நியாயத்தைப் பேசவிடாமல், முடக்கிப் போடுகிறது, இந்திய அரசு!

கேரளாவில் தொழிலாளர்களாக கூலி வேலை பார்த்த தமிழர்களை அடித்து விரட்டுகின்றனர்மலையாளிகள். இதையும் தட்டிக் கேட்கவில்லை இந்திய அரசு. அதன் காரணமாகத்தான், தமிழ்நாட்டிலும் ஆங்காங்கே எதிர்வினைகள் நடக்கின்றன. ஆனால் தமிழர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். மலையாளிகளைத் தாக்குவதைவிட தமிழ்நாட்டிலிருந்து கேரளாவுக்கு செல்லும் 13 வழிப்பாதைகளை அடைத்து; அத்தியாவசியப் பொருள்களை முடக்குவதன் மூலம் கேரளாவுக்கு எச்சரிக்கைவிடுப்பதே சரியான எதிர்வினையாக இருக்க முடியும். மறுமலர்ச்சி தி.மு.க. முன்னெடுக்கும் இந்த நியாயமான போராட்டத்தில் பெரியார் திராவிடர் கழகமும் பங்கேற்கிறது. ஆனாலும் முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் தமிழ்நாட்டின் நியாயமான உரிமைகளைப் பெற்றுத் தர வேண்டிய கடமையை கைகழுவிவிட்டு,தமிழர்-கேரள மோதல்களை கூர்தீட்டிவிட்டு, ஆடுகள் மோதலில் ரத்தம் குடிக்கும் நரிகளைப் போல் 'ஒருமைப்பாடு', 'தேசபக்தி' பேசிக் கொண்டு உரிமைகளைத் தடுத்து நிறுத்தும் முதன்மை எதிரி இந்திய அரசு தான்.

**கூடங்குளத்தில் துரோகம்**

தமிழ்நாட்டு மக்கள் மீது மேற்கு வங்க மாநிலமும், கேரளாவும் ஏற்க மறுத்த அணுமின் திட்டத்தை உலக நாடுகள் பலவும் ஆபத்தானது என்று கருதும் ஒரு திட்டத்தை திணிக்கிறது இந்திய அரசு!

அணுகுண்டு தயாரிப்புக்கான மூலப் பொருள்களைப் பெறவும், பன்னாட்டு நிறுவனங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கவும் ஆபத்தான ஒரு திட்டத்தை தமிழர்கள் மீது திணிக்கிறது இந்திய அரசு. இந்திய தேசியத்தின் அதிகார மய்யத்தை ஆட்டிப் படைக்கும் பார்ப்பன பனியா, பன்னாட்டு கும்பலுக்கு தங்கள் வலிமையை வெளிக்காட்டுவதற்கு 'அணுகுண்டு'கள் தேவைப்படுகின்றன. அணுமின் ஆய்வுத் துறையில் "அவாள்கள்" தான் ஆதிக்கம் செலுத்துகின்றனர். ஆனால், அணுமின் திட்டங்களில் எந்தப் பார்ப்பானும் வேலைக்கு வரமாட்டான். எனவே தான் பார்ப்பன ஏடுகளும் இந்துத்துவ பார்ப்பன சக்திகளும் பூணூல்களை உருவிக் கொண்டு கூடங்குளம் திட்டத்தை வலிமையாக ஆதரிக்கின்றன. அமெரிக்காவிலிருந்து பணம் வாங்கிக் கொண்டு போராடுவதாகக் கொச்சைப்படுத்துகிறார்கள். கூடங்குளம் எதிர்ப்புப் போராட்டம் அமெரிக்கப் பின்னணியில் நடக்கிறது என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறுவாரா? அவரால் கூற முடியுமா? அமெரிக்காவிடம் இந்திய 'இறையாண்மை'யை அடகுவைத்து அணுசக்தி ஒப்பந்தம் போட்டவர், மன்மோகன் சிங் தானே?

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான அறிவிப்பை நாடாளுமன்றத்துக்கு அறிவிக்காமல், அமெரிக்காவிலிருந்தே அறிவித்த அதே மன்மோகன்சிங் தான்,இப்போது கூடங்குளம் மின் திட்டம் விரைவில் செயல்படத் தொடங்கும் என்று ரஷ்யாவிலிருந்து அறிவிக்கிறார்.

- தமிழக மக்கள் உயிர்வாழ்வுரிமையை அன்னிய தேசத்துக்கு அடகு வைப்பது யார் என்பதை மக்கள் புரிந்து கொள்ளட்டும்!

சோவியத் ரஷ்யாவில் செர்னோபில் அணுஉலை பாதுகாப்பானது என்றுதான் ரஷ்ய விஞ்ஞானிகள் கூறினார்கள். அமெரிக்காவின் 3 மைல் தீவு அணுஉலை பாதுகாப்பானது தான் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் கூறி வந்தார்கள். இந்த அணுஉலைகள் ஆபத்தானவை என்று இந்த விஞ்ஞானிகள் கூறியது உண்டா? அதேபோல்தான் கூடங்குளம் அணுமின் திட்டம் பாதுகாப்பானது என்று இங்கே விஞ்ஞானிகள் சிலர் பேசி வருகிறார்கள்; எதிர்ப்பாளர்கள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லாமல் ஓடுகிறார்கள்.

"தேவையில்லாத கேள்விகள்", "நாட்டின் பாதுகாப்பு ரகசியங்கள்" என்ற போர்வைக்குள் பதுங்கும்போது, மக்களின் அச்சமும் சந்தேகங்களும் மேலும் வலிமை பெற்று வருகின்றனவே! இவைதான் மக்களின் அச்சத்தைப் போக்கும் வழிமுறைகளா? தமிழக சட்டமன்றத் தீர்மானத்துக்கு தரப்படும் மரியாதையா? - கூடங்குளம் பார்வையில் தமிழர்களுக்கு நேரடியாகவே பகைவனாக நிற்கிறது - இந்திய அரசு.

**ஈழத் தமிழர் பிரச்சினையில் துரோகம்**

இது தவிர ஈழத்தில் தமிழர்கள் மீதான இனப் படுகொலைக்கு சிங்களத்துக்கு ஆதரவுக் கரம் நீட்டியது இந்திய அரசு தான். "கூடிப் பேசினால் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்" என்று 'உபதேசம்' செய்யும் இதே மன்மோகன்-சோனியா ஆட்சிதான் ஈழத்தில் நார்வே மேற்கொண்ட சமரச முயற்சிகளை எதிர்த்தது. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே தீர்வுகள் ஏற்பட்டுவிடாமல் தடுப்பதற்கு அத்தனை சதிகளையும் செய்து குழி பறித்தது.

"சமாதான முயற்சிகள் சீர்குலைய இந்தியாவே முக்கிய காரணம்" என்று அண்மையில் நார்வே அரசாங்கமே வெளியிட்ட "அமைதியின் பகடைகள்" (Pawns of Peace) என்ற 208 பக்க அறிக்கை குற்றம்சாட்டுகிறது. சமாதான முயற்சியில் இந்தியாவின் ஒத்துழைப்பை நார்வே பலமுறை கோரியபோதும் அதை நிராகரித்துவிட்டு இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கி போரைத் தூண்டிவிட்டது, இந்திய அரசு.

- முள்ளி வாய்க்கால் இனப் படுகொலைக்குப் பிறகு அய்.நா.வில் இலங்கை போர்க் குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்று சுவிட்சர்லாந்து உள்ளிட்ட அய்ரோப்பிய நாடுகள் கொண்டுவந்த தீர்மானத்தை தோற்கடிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது, இந்திய அரசு.

- அய்.நா. பொதுச் செயலாளர் பான்கி மூன், நியமித்த குழு, இலங்கையின் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்திய பிறகும், அது பற்றி வாய் திறக்காமல், கண்டனம் தெரிவிக்காமல், மேலும் மேலும், இலங்கை அரசுக்கு உதவிகளை வாரி வழங்கிக் கொண்டிருப்பது இந்திய அரசு.

  - இலங்கையின் படுகொலைகளை நியாயப்படுத்தி

4 ஆம் பக்கம்

## கழகத் தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்

முல்லைப் பெரியாறு – கூடங்குளம் – ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் தமிழர் விரோதத்தையும் துரோகத்தையும் விளக்கி, கழகத் தோழர்கள் மத்திய அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் மற்றும் விளக்கக் கூட்டங்கள் தெருமுனைக் கூட்டங்களை நடத்தி, இந்திய துரோகத்தை அம்பலப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– கொளத்தூர் மணி,**
**தலைவர், பெ.தி.க.**

# மாவீரர் நாள்—கழக நிகழ்வுகள்

### திருப்பூரில் மாவீரர் நாள்

27.11.2011 அன்று மாலை 6 மணியளவில் திருப்பூரில் கழகம் சார்பாக மாவீரர் நாள் மற்றும்



சாதி ஒழிப்பு சட்ட எரிப்பு வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வு. வீரபாண்டி, பாரதி நகரிலுள்ள பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு 25 குழந்தைகள், பெண்கள் உள்பட ஏராள மானவர்கள் கலந்து கொண்டனர்.

பெரியார் திராவிடர் கழக மாவட்ட தலைவர் சு. துரைசாமி, மாநகர செயலாளர் முகில் இராசு, பாடகர் தியாகு, சண்முகம், பெரியார் முத்து உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர். கிளாகுளம் செந்தில், கார்த்திக், ராசி சிங்கம், தோழியர் சிவகாமி, கனல்மதி, வழக்கறிஞர்கள் உமர்கயான், கனகசபை, நீலவந்தன், நாம் தமிழர், செல்வம், அழகு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### புலியூரில் மாவீரர் நாள்

மேட்டூர் கொளத்தூரில் விடுதலைப் புலிகள் ராணுவப் பயிற்சி பெற்ற பகுதி புலியூர் என்று பெயர்



மாற்றம் செய்யப்பட்டு, தளபதி பொன்னம்மாள் நினைவு நிழற்கூடமும், பல ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்டுள்ளது. புலிகள் உலவிய புலியூர் மண்ணில் நவம்பர் 27 ஆம் தேதிமாலை 6 மணிக்கு மாவீரர் நாள் நிகழ்வு நடக்கிறது. மாவட்டத் தலைவர் கி. முல்லைவேந்தன் தலைமையில், மாவட்ட செய லாளர் குசூரியகுமார் முன்னிலையில் கவிஞர் அறிவு மதி, செந்தலை கவுதமன் உரையாற்றினார்கள். சமர்பா குமரன் எழுச்சி இசை நிகழ்ச்சியும் நடந்தது.

### சென்னையில் அம்பேத்கர் சிலைக்கு மாலையணிப்பு

6.12.2011 அன்று காலை 8.30 மணியளவில் நேரு விளையாட்டு அரங்கத்தின் அருகிலுள்ள புரட்சி யாளர் அம்பேத்கர் சிலைக்கு சேத்துப்பட்டிலுள்ள பெரியார், அம்பேத்கர் சிலைக்கும், கழக துணைத்



தலைவர் ஆனூர் செகதீசன் தலைமையில் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### மதுரையில் அம்பேத்கர் நினைவு நாள்

6.12.2011 மதுரை மாவட்ட நீதிமன்ற அருகிலிருந்து தோழர் வெண்மணி, மதுரை மாவட்ட அமைப்பாளர் மு.தமிழ்ப்பித்தன், மாவட்ட செயலாளர் விடுதலை சேகர், பா. ஸ்டாலின், வழக்கறிஞர்கள் பகத்சிங், பெரியார் வேந்தன், மு.இராசேந்திரன், தெய்வா, விஜய், மக்கள் சனநாயகக் குடியரசு கட்சி தோழர் தங்கப்பாண்டியன் மற்றும் தோழர்கள், வழக்கறிஞர்கள் ஊர்வலமாக கிளம்பி, சாதி ஒழிப்பு போராளிகளுக்கு வீரவணக்கம் முழக்கமிட்டும், பரமக்குடி துப்பாகி சூடு நடத்திய காவல் அதிகாரிகள் மீது கொலை வழக்குப் பதிவு செய்யக் கோரி முழக்கமிட்டும் புரட்சியாளர் அம்பேத்கர் சிலை அடைந்து மாலையிட்டு மரியாதை செய்தனர். தோழர் வெண்மணி, தெய்வா ஜான்சி ஆகிய பெண் தோழியர் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

### கள்ளக்குறிச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம்

26.11.2011 சனிக் கிழமை மாலை 4 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பரமக்குடியில் ஏழு தலித்துகளை




படுகொலை செய்த காவல்துறையைக் கண்டித்தும், சாதி ஒழிப்புப் போராளி இமானுவேல் சேகரன் நினைவு நாளை அரசு விழாவாக அறிவிக்கக்கோரி கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத் திற்கு தோழர் சகா. இளையராசா தலைமை வகித்தார். சி. ஆசைத்தம்பி, கல்லை சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ந. வெற்றிவேல், கோ. சாக்ரடீசு, டிஒய்எப்அய் ஒன்றிய செயலாளர் இரா. பூமாலை, வே. ஏழுமலை, மனித உரிமை அமைப்பைச் சார்ந்த இரவி, ந. அய்யனார் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

### கிருட்டிணராயபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்

கரூர் மாவட்டம் கிருட்டிணராயபுரத்தில் கேரள அரசைக் கண்டித்து மலையாளிகள் நடத்தும் முத்தூட் நிதி நிறுவனத்தின் முன் கழகத்தினர் டிசம்பர் 12 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தினர். கழகத் தோழர்கள் எதிர்ப்பால் நிதி நிறுவனம் மூடப்பட்டது. கழகத் தோழர்கள் கிரிகாந்த், மாணிக்கம், உழியன், சதீசுகுமார், மலைக் கொழுந்தன், முத்து உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

### பாலியல் வன்முறை செய்த காவல்துறையினரை கைது செய்யக் கோரி கழகம் ஆர்ப்பாட்டம்

இருளர் பழங்குடியைச் சேர்ந்த நான்கு பெண்களை பாலியல் வன்கொடுமை செய்த



திருக்கோவிலூர் காவல்துறையினர் நால்வரையும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யக்கோரி பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 7.12.2011 புதன் பகல் 11.30 மணியளவில் சென்னை பனகல் மாளிகை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பேராசிரியர் சரசுவதி, அன்பு தனசேகரன், மகேசு (காஞ்சி மக்கள் மன்றம்), வழக்கறிஞர் குமாரதேவன், வழக்கறிஞர் ரஜினிகாந்த், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், த. ஏழுமலை ஆகியோர் கண்டன உரையாற்றினர். கழகத் தோழர் ச. குமரன் நன்றி கூறினார்.

கழக ஆர்ப்பாட்டம் நடந்த அதே நாளில் வழக்கறிஞர் புகழேந்தி தொடர்ந்த பொது நலன் வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி எம்.ஒய். இக்பால் மற்றும் டி.எஸ். சிவஞானம் அமர்வுக்கு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது "பாலியல் வன்முறைக்கு உள்ளாகிய பெண்கள், இழந்து நிற்கும் கவுரவத்தை அரசு வழங்கும் நிதி உதவி, நேர் செய்து விடுமா? இது போன்ற குற்றச்சாட்டுகளில் சாதாரண மனிதர்களைக் கைது செய்யும் காவல் துறை, காவல்துறையினர் குற்றம் செய்யும்போது மட்டும் கைது செய்யாதது ஏன் என்று நீதிபதிகள் கேட்டனர். குற்றம் நிரூபிக்கப்பட்ட பிறகே கைது செய்வது வழக்கம் என்று அரசு வழக்கறிஞர் கூறிய சமாதானத்தை ஏற்க மறுத்தனர் நீதிபதிகள்.

### புதுவையில் மாவீரர் நாள்



**காஞ்சி மக்கள் மன்றத்தில் மாவீரர் தினத்தில் தோழர் செங்கொடி நினைவகம் திறப்பு**



# ஈழத்தில் ராஜீவ் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் (9)

*இலண்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வரும் 'ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்' என்ற சர்வதேச மனித உரிமை அமைப்பு, இலங்கையில் தமிழ் பகுதிக்கு ராஜீவ் காந்தி, 'இந்திய அமைதிப் படை' என்ற பெயரில் அனுப்பி வைத்த ராணுவம் நடத்திய அத்துமீறல்கள், போர்க் குற்றங்களை நேரில் சென்று ஆய்வு நடத்தி, 1989 ஆம் ஆண்டு மே மாதம் அறிக்கையாக வெளியிட்டது. அந்த அறிக்கையிலிருந்து சில பகுதிகள்:*

இந்திய அமைதிப்படையினரால் பல சமயங்களில் பல சாதாரண பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் இந்திய அமைதிப் படைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் மாட்டிக் கொண்டு இறந்துள்ளதாக இந்திய அமைதிப்படை விளக்கம் தருகிறது. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஏற்படும் மோதலில், இந்திய அமைதிப் படை வீரர்கள் பலியானால், அதற்குப் பழிவாங்க, சாதாரண பொது மக்களை அமைதிப் படையினர் கொல்வதாகப் பல தகவல்கள் வந்துள்ளன.

இத்தகைய பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஒன்று 1988 ஆகஸ்ட் 18 அன்று நடந்துள்ளது. ஜேம்ஸ் அந்தோனி ஜோசப் அருமநாதன் என்ற 49 வயது ஆசிரியர், அந்தோணிப்பிள்ளை புருனோ கிறிஸ்டி என்ற 32 வயது பொறியாளர், எஸ்.எஸ். பசுபதிப் பிள்ளை என்ற வயதான பெரியவர் ஆகிய மூவரும் யாழ்ப்பாணத்தில் உள்ள செவன்த் டே அட்வெண்டிஸ்ட் தேவாலயத்தின் முன் வைத்துக் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு 40 நிமிட நேரம் முன்பு, கச்சேரி - நல்லூர் சாலையிலுள்ள ஒரு கோவில் அருகே, இந்திய அமைதிப் படையினர் கையெறி குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். அதற்குப் பழி வாங்கவே மேற்காணும் கொலைகள் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. காலை சுமார் 9.50 மணி அளவில், யாழ்ப்பாண செயலகத்தில் இருந்து யாழ்ப்பாண மருத்துவமனைக்குச் செல்லும் சாலையில் சென்றுக் கொண்டிருந்த இந்திய அமைதிப்படை வாகனத்திலிருந்து, சிப்பாய்கள் எதிர்ப்பட்டவர்களையெல்லாம் கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொண்டே சென்றதாக நேரில் கண்ட சாட்சிகள் தெரிவிக்கின்றனர். அச்சமயத்தில் ஜேம்ஸ் அந்தோனியும், அந்தோனிப் பிள்ளை கிறிஸ்டியும் தேவாலயக் கதவு அருகில் பேசிக் கொண்டிருந்ததாகச் சாட்சிகள் கூறுகின்றனர். அவர்கள் இருவரும் அந்த இடத்திலேயே இறந்துவிட்டனர். அவர்கள் உதவிக்கு விரைந்த ஒருவர், அவர்கள் தலையில் சுடப்பட்டு உடனே இறந்துவிட்டதைக் கண்டார். என்.என்.பசுபதிப் பிள்ளை 25 அடிகள் தள்ளி இதே போன்ற நிலையில் சுடப்பட்டு இறந்துவிட்டார். அவர்களது உடல்கள் யாழ் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அன்றே பிரேதப் பரிசோதனையும் செய்யப்பட்டது.

அந்தோனிப்பிள்ளை, குண்டுக் காயத்தில் ஏற்பட்ட அதீத ரத்தப் போக்காலும், அதிர்ச்சியாலும் இறந்ததாகப் பிரேதப் பரிசோதனை அறிக்கை தெரிவிக்கிறது. இறந்துபோன மூவரும் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுடப்பட்டு இறந்துள்ளதைத் தாங்கள் ஒப்புக் கொள்வதாக அவர்களின் உறவினர்கள் கூறியுள்ளனர் என்று ஒரு ஆவணத்தை இந்திய அமைதிப்படையினர், பிரேதப் பரிசோதனை முடிந்தவுடன் வெளியிட்டதாக ஒரு உறவினர் கூறினார். அவர்கள் மூவரும், இந்திய அமைதிப் படைக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் நடுவே மாட்டிக்கொண்டு இறந்ததாக இந்திய அதிகாரிகள் கூறியதாகச் சாட்சிகளில் ஒருவர் கூறினார்.

1988 டிசம்பர் 18 தேதியிட்ட பம்பாய் பத்திரிகையான சண்டே அப்சர்வர் பத்திரிகை இவ்வாறு கூறுகிறது: "1987 நவம்பர் 21 அன்று இந்திய அமைதிப் படையைச் சார்ந்த ஒருவர், திருகோணமலையில், தெருவில் போய்க் கொண்டிருந்த 7 பேரைத் திடீரென்று கண்மண் தெரியாமல் சுட்டுக் கொன்றுள்ளார். மேலும் 4 பேருக்குப் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. அவரது மைத்துனர் அதற்கு முந்தைய நாள் தேடுதல் வேட்டையின்போது கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவர் இப்பாதகச் செயலைப் புரிந்துள்ளார். இதற்காக அவர் மீது இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்தப்பட்டது."

1983-க்கும், 1987 ஜூலைக்கும் இடையே சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பிறகு "மாயமாய்" மறைந்தவர்களின் எண்ணிக்கை 685 என்று அம்னஸ்டி இன்டர்நேஷனல் கணக்கிட்டுள்ளது. இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்திற்குப் பிறகு 84 பேர் "மாயமாய்" மறைந்துள்ளனர்.

1988 ஜூனுக்கு பின்னர் 72 பேர் "மாயமாய்" மறைந்துள்ளனர். இதில் 31 பேர் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது அவர்களின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் இந்திய அமைதிப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள். இது தவிர சிறீலங்கா இராணுவத்தால் 19 பேரும், போலீசாரால் 12 பேரும், எஸ்.டி.எப். ஆல் 4 பேரும், போலீஸ் என்று சந்தேகிக்கப்படுகிற, ஆனால் சாதாரண உடையில் வந்தவர்களால் ஒருவரும் தூக்கிச் செல்லப்பட்டு பின்னர் 'மாயமாய்' மறைந்துள்ளனர். மேலும் 5 பேரை சிறீலங்கா போலீசும் மற்றும் இராணுவமும் கூட்டாகக் கைது செய்து அழைத்துச் சென்றதாக நேரில் கண்ட சாட்சிகள் தெரிவிக்கின்றனர்.

அம்னஸ்டி இன்டர்நேஷனல் தனது சொந்த முயற்சியால், 1987 இல் 'மாயமாய்' மறைந்துபோன 4 பேரையும், 1988 இல் 'மாயமாய்' மறைந்துபோன 2 பேரையும் தேடிக் கண்டுபிடித்துள்ளது. இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். ஒப்பந்தத்திற்கு முன்பு 5 பேரும் பின்னர் ஒருவரும் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

சிறீலங்காவின் அனைத்துப் பகுதியிலும் "மாயமாய்" மறைந்துபோன பலர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளதற்கும், அதன் விளைவாக சிலர் இறந்துள்ளதற்கும், சிலரது உடல்கள் இரகசியமாக அப்புறப்படுத்தப்பட்டதற்கும் சான்றுகள் உள்ளன.

தெற்கில் இவ்வாறு "மாயமாய்" மறைந்து போனவர்களைப் பற்றித் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று அங்கு முகாமிட்டிருக்கும் சிறீலங்கா இராணுவம் சாதித்து வருகிறது. இதில் சிலர் பற்றி சிறீலங்கா செய்திப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டு உள்ளன. ஒரு உதாரணம் பார்ப்போம்:

1988 மே 22 ஆம் தேதி கணேமுல்ல போலீசால் கைது செய்யப்பட்ட கே.டி.சிறிபாலா ரணசிங்கயும், டபிள்யு.எ.கருணாரத்னேயும் "மாயமாய்" மறைந்துவிட்டனர் என்று 1988 ஜூன் 11 தேதியிட்ட கொழும்புப் பத்திரிகையான 'ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது. அது மேலும் கூறுகிறது: அவர்களின் உறவினர்கள் போலீஸ் நிலையம் சென்று விசாரித்ததற்கு, கைதிகளைப் பார்க்க அனுமதிக்காத போலீஸ், அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுவார்கள் என்று கூறியது. உறவினர் நீதிமன்றம் சென்று விசாரித்தனர். அக் கைதிகள் ஜாமீனில் விடப்பட்டதாக நீதிமன்ற ஆவணங்கள் தெரிவித்தன. ஆனால், அதில் ஜாமீன் கொடுத்ததாகக் கூறப்பட்டவர் அந்த முகவரியில் வசிக்கவே இல்லை. இது குறித்து கணேமுல்ல போலீஸ் நிலையத்தில் அவர்கள் புகார் செய்துள்ளனர். அதை விசாரிப்பதாகக் கூறியதைத் தவிர வேறு நடவடிக்கை எதுவும் அவர்கள் எடுத்ததாகத் தெரியவில்லை.

அதேபோல யாழ்ப்பாண மாவட்டத்தில் "மாயமாய்" மறைந்து போனவர்களைப் பற்றிக் கேட்டால், அங்கு இருக்கும் இந்திய அமைதிப்படை தனக்கு எதுவும் தெரியாது என்று கைவிரித்து வருகிறது. இதற்கும் ஒரு உதாரணம் பார்ப்போம்:

1987 டிசம்பர் 31 அன்று மாலை சுமார் 4.30 அளவில் உள்ளூர் நூலகத்திற்குச் சென்றுக் கொண்டிருந்த, 23 வயதான, சுன்னாகத்தைச் சார்ந்த துரையப்பா ஜெயராஜசிங்கம் என்ற தொழிலாளி கைது செய்யப்பட்டார். அவரது நெருங்கிய உறவினர் நடந்த சம்பவத்தை இவ்வாறு விவரிக்கிறார்:

"15 நிமிடத்திற்குள்ளாகவே எனக்குத் தகவல் வந்தது. துரையப்பா 'மூன்று நட்சத்திரக் குழுவைச் சர்ந்தவர்கள். இந்திய அமைதிப் படையினர் ஆகியோரால் கைது செய்யப்பட்டு, ஒரு அமைதிப்படை வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டுவிட்டதாகத் தகவல் வந்தது. உடனே நான் சுன்னாகம் அமைதிப் படை முகாமிற்கு விரைந்து சென்று விசாரித்தேன். துரையப்பா அங்கு அழைத்துவரப்பட வில்லையென்றும், ஊரடங்கு நேரம் நெருங்கிவிட்டதால் (ஆறு மணிக்கு ஊரடங்கு - அப்பொழுது 5.15) மறுநாள் வருமாறு கூறிவிட்டனர்.

நான் வீடு வந்து சேர்ந்த பிறகு, சுமார் ஆறரை மணி அளவில் இரு இந்திய அமைதிப்படை வாகனங்கள் என் வீட்டுக்கே வந்து நின்ற.ன 'மூன்று நட்சத்திரக்' குழுவைச் சேர்ந்த நால்வரும் (சாதாரண உடையில்) சில அமைதிப் படையினரும் என் வீட்டிற்குள் வேகமாக நுழைந்து வீட்டைச் சோதனையிடப் போவதாகக் கூறினார்கள். நானும் அனுமதித்தேன். குற்றம்சாட்டும்படியான எந்தப் பொருளும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. வீட்டைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டதுதான் மிச்சம்... பின்னர் அவர்கள் துரையப்பாவை, ஒரு வாகனத்திலிருந்து அழைத்து வந்தனர். அவரது கைகள் பின்னால் கட்டப்பட்டு இருந்தன. மேல் சட்டை இல்லை. அவரது பின்புறத்தில் சப்பாத்துக்களின் அடையாளம் காணப்பட்டதை நான் கவனித்தேன்.

கட்டிலில் இருந்த ஒரு பலகையை உருவி, துரையப்பாவை என் கண் முன்னாலேயே அடிக்க ஆரம்பித்தனர். இரத்தம் சொட்டி அவர் கீழே விழுந்தார். இந்தப் பூசைகள் ஒரு மணி நேரம் தொடர்ந்தது. துரையப்பா, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவரா என்று சில அமைதிப் படை சிப்பாய்கள் அக்கம்பக்கம் விசாரித்தனர். அவர்கள் துரையப்பா எந்த இயக்கத்தையும் சார்ந்தவர் அல்ல என்று கூறினர். நான் முழு நேரமும் அமைதிப்படை அதிகாரிகளிடம் அழுது கொண்டும் கெஞ்சிக் கொண்டும் இருந்தேன்.

சுமார் மூன்றரை மணி அளவில் இந்திய அமைதிப் படையினர் அவரை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டனர்.

1988 ஜனவரி 2 அன்று அவரது உறவினர்கள் சுன்னாகம், மருதனாமடம், கொக்குவில் அமைதிப் படை முகாம்களில் விசாரித்தனர். கொக்குவில் முகாமில் இருந்த ஒரு அமைதிப் படை அதிகாரி, இந்தியில் ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்து துரையப்பாவை அவர்கள் சுன்னாகம் முகாமில் சந்திக்கலாம் என்று கூறினார். சுன்னாகத்தில் என்ன நடந்தது என்பதை அவர்கள் இவ்வாறு விவரிக்கின்றனர்.

"அக்கடிதத்தை கொடுத்தவுடன் துரையப்பா அன்று மதியம் 3 மணி அல்லது மறுநாள் காலை விடுவிக்கப்படுவார் என்று ஒரு அதிகாரி கூறினார். துரையப்பாவின் உதடுகளிலும், வாயிலும் காயங்கள் இருந்ததைக் கண்டேன்; குதிகாலிலும் சில வெட்டுகள் இருந்தன."

துரையப்பாவை அவர்கள் கடைசியாக உயிருடன் பார்த்தது அப்பொழுதுதான், சுன்னாகம் முகாமில், துரையப்பாவுடன் அடைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்ட கைதி ஒருவர் துரையப்பாவிற்கு என்ன நேர்ந்தது என்பதை அவரது உறவினரிடம் கூறினார். சாப்பிடுவதற்குக்கூடக் கைகளை அசைக்க முடியாத நிலையில் இருந்த துரையப்பாவை, ஜனவரி 2 ஆம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில், சில 'மூன்று நட்சத்திர'க் குழுவினரும், 4 அமைதிப் படையினரும் ஒரு ஜீப்பில் எடுத்துச் சென்றதாகவும், அவர் பின்னர் முகாமிற்குத் திரும்பவில்லை என்றும் அந்தச் சக கைதி கூறினார்.

துரையப்பாவைக் கண்டுபிடிக்கும் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. ஜனவரி 2 காலையில் கூறியபடி, துரையப்பா விடுவிக்கப்படலாம் என்ற நம்பிக்கையில் சுன்னாகம் முகாமிற்கு மாலை மூன்றரை மணியளவில் சென்ற, அவரது உறவினர்கள் அதுபற்றி இவ்வாறு கூறுகின்றனர்:

"சில அதிகாரிகள் காலையில் இருந்து வராததால், மறுநாள் காலை வரும்படி அங்கு கூறப்பட்டது. மறுநாள் காலை 9 மணிக்கு நான் அங்குச் சென்றேன். உள்ளே சென்ற சென்ட்ரி 10 நிமிடம் கழித்து வந்து, துரையப்பா இரவில் தப்பி ஓடி விட்டதாகவும், அமைதிப் படை முகாமிற்கு 10 நாட்களுக்குள் அவன் வந்துவிட வேண்டும் என்று அவனிடம் கூறுமாறும் கூறினார். நான் அவனது கூற்றை நம்பவில்லை என்று கூறிவிட்டு, அழுது கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்...... அன்றே... ஈமச் சடங்குகளையும் செய்தேன்....

என் வீட்டருகே வசிக்கும் ஒருவர் மல்லாகம் முகாமிற்கு, எனது வீட்டில் நடக்கும் ஈமச் செய்தி பற்றி தெரிவித்தார். உடனே மல்லாகம் முகாம் அதிகாரிகள் சுன்னாகம் முகாமிற்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு, துரையப்பா உயிருடன் வேறு ஏதோ ஒரு முகாமில் இருப்பதாகவும், நான் அனைத்து ஆவணங்களுடன் ஜனவரி 4 அன்று காலை 9 மணிக்கு சுன்னாகம் முகாமிற்கு வந்து, சேர வேண்டும் என்று எனக்கு தெரிவிக்குமாறு கூறியுள்ளனர். அச்செய்தியுடன் என் அண்டை வீட்டுக்காரர் வந்தார். என்னைத் தேற்றிய உறவினர்கள், ஈமச் சடங்கை நிறுத்தி விடுமாறு

4 ஆம் பக்கம்

# அன்னா அசாரேவுக்கு கறுப்புக் கொடி

அன்னா அசாரேவின் கூட்டத்துக்கு சென்னையில் பார்ப்பனர்கள் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். 18 ஆம் தேதி சென்னை பச்சையப்பன் கல்லூரி மைதானத்தில் நடக்கும் கூட்டத்தில் பங்கேற்க அன்னா அசாரே காலை 10.30 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்து சேர்ந்த போது, தமிழின இளைஞர்கள் கருப்புக்கொடி காட்டி, தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். "இடஒதுக்கீடு கொள்கையை எதிர்க்கும் இந்துத்துவவாதி எங்கள் பெரியார் தேசத்துக்கு தேவையில்லை" என்று அவர்கள் முழக்கமிட்டனர். இனமான இளைஞர்கள் தயாளன், மாரிசாமி, ரமேஷ், அண்ணாத்துரை, பிரபாகரன் ஆகிய 5 பேரையும் கறுப்புக் கொடியுடன் போலீசார் கைது செய்தனர்.

### நன்கொடை

கவுந்தபாடி கழக ஆதரவாளர் தோழர் அண்ணாதுரை-திலகவதி ஆகியோர் புதல்வன் அ.இளஞ்சூரியன் பத்தாவது பிறந்த நாளை (4.12.2011) முன்னிட்டு புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

கூறினர்.

"மறுநாள் சென்றேன். எல்லா ஆவணங்களையும் நான் பிரதி எடுத்து வைத்திருந்தேன். மூல ஆவணங்கள் அனைத்தையும் பிடுங்கிக் கொண்ட அவர்கள், துரையப்பா வந்தால் இங்கு கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும் என்று கூறி என்னைப் போகச் சொல்லிவிட்டனர். நான் அழுது கொண்டே திரும்பினேன். ஆவணங்களைப் பிடுங்க இவ்வாறு அவர்கள் நாடகமாடியுள்ளனர்."

துரையப்பா ஒரு போதும் திரும்பவில்லை. "மாயமாய்" மறைந்துவிட்டார்.

குற்றம் சுமத்தப்படாமலும், வழக்குத் தொடரப்படாமலும் ஒருவரைக் காவலில் வைக்க அதிகாரம் வழங்கிய அவசரகால விதிமுறைகள், சிறிலங்காவில் 1983 மே 18 முதல், 1989 ஜனவரி 11 வரை அமுலில் இருந்தது. பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தாமல் உடல்களை அப்புறப்படுத்தும் அதிகாரத்தை, கீழ்நிலையிலுள்ள அதிகாரிகளுக்கும் விரிவுபடுத்தும் சட்ட விதிமுறை, 1988 நவம்பரில் அமுலுக்கு வந்தது. ஜே.வி.பி.யால் விடுவிக்கப்பட்ட வேலை நிறுத்த அழைப்புகளை (வேலை நிறுத்தத்தில் ஈடுபடாவிடில் கொன்றுவிடுவோம் என ஜே.வி.பி. மிரட்டி இருந்தது) எதிர்கொள்ள, இத்தகைய மிரட்டல்கள் செய்தால் அதற்கு மரணதண்டனை என்று அரசு அறிவித்தது.

1989 ஜனவரியில் அவசரநிலை விலக்கப்பட்டது. இதை அம்னஸ்டி, இன்டர் நேஷனல் வரவேற்றது. ஆனால் 1988 டிசம்பரில், இராணுவத்தின் கடந்தகால மீறல்களுக்கு விலக்கு அளிக்கும் சட்ட மசோதா ஒன்றை நிறைவேற்றியது. மனித உரிமை மீறல்கள் செய்தாலும் தாங்கள் பாதுகாக்கப்படுவோம் என்ற நம்பிக்கையை இராணுவத்திற்கு அளிக்கும் இந்த மசோதா. மேலும் மனித உரிமை மீறல்களுக்கு வழிசெய்யும் என்று அம்னஸ்டி இன்டர்நேஷனல் நம்புகிறது.

இராணுவ அமைச்சகத்தின் அனுமதியின்பேரில், போலீஸ் ஐ.ஜி. அல்லது டி.ஐ.ஜி.யின் உத்தரவின்பேரில் உடல்களைப் பிரேதப் பரிசோதனை செய்யாமல் அப்புறப்படுத்தும் சட்ட விதிமுறையை 1988 ஜூலையில் அரசு கொண்டு வந்தது. 1988 நவம்பரில் உதவி சூப்பிரின்ட்டன்ட் அளவிற்கு இந்த அதிகாரம் கொடுக்கப் பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களையும், ஊரடங்கு உத்தரவை மீறுபவர்களையும் கண்டவுடன் சுட ஆணை பிறப்பித்தது. 1971 இல் இதே போன்ற அதிகாரத்தை, சிறீமாவோ பண்டாரநாயகாவின் அரசு இராணுவத்திற்கு அளித்திருந்தது. இரண்டு முறையும் அம்னஸ்டி இன்டர்நேஷனல் இதற்கு தனது கவலையைத் தெரிவித்திருக்கிறது. மனித உரிமைகளை மீறினாலும் தப்பித்துவிடலாம் என்ற நம்பிக்கையை இராணுவத்திற்கு ஊட்டுவது, சட்டத்திற்குப் புறம்பான கொலைகளை அதிகப்படுத்தும் என்று அம்னஸ்டி அஞ்சுகிறது.

**நிறைவு**

முதல் பக்கத் தொடர்ச்சி

- நார்வே சமரச முயற்சிகளுக்கு குழி பறித்து
- அய்.நா.வில் சிங்களத்தின் 'இனப் படுகொலை'யை மறைக்க தீவிரம் காட்டி

தமிழர்களின் உணர்வுகளை அழித்து, துரோகம் செய்தது இந்திய அரசு.

இந்திய துரோகங்களை அம்பலப்படுத்துவோம்; இந்திய தேசிய ஆட்சி, பார்ப்பன-பனியா-பன்னாட்டு ஆதிக்க நலன் காக்கும் ஆட்சியே என்பதை மக்களிடம் கொண்டு செல்வோம்.

பெரியார் கூறுகிறார்:

**"நாம் எதற்காக – ஏன் இன்னொரு நாட்டுக்குள் இருக்க வேண்டும்? கூட்டாட்சி இது என்று சொல்லப்படுகிறது. கூட்டாட்சியினால், என்ன சவுகரியம் நமக்கு? கூட்டு என்றால் அதன் தத்துவமே இரு பங்காளிகளுக்கும் சம பங்கு என்று அர்த்தம். அப்படியா நாம் இன்று டெல்லிக்காரனிடம் இருக்கிறோம். நாம் பங்காளியாக இருக்கிறோமா? அடிமையாக இருக்கிறோமா?"**

**(விடுதலை, 20.1.1959)**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# 8 தொடர் கூட்டங்கள்: சென்னையில் எழுச்சி



சென்னையில் பெரியார் கொள்கை விளக்க தெருமுனைக் கூட்டங்கள் எழுச்சியுடன் நடை பெற்றன. அனைத்துக் கூட்டங்களி லும் சிற்பி. ராசன், 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சிகள் வழியாக, கடவுள், மத, புராண புரட்டுகளை விளக்கிப் பேசினார். கழகத் தோழர் டிங்கர் குமரன், கழக ஆதரவாளர் அன்பரசு ஆகியோர் சிறப்புரையாற் றினர். டிசம்பர் 9 ஆம் தேதி காஞ்சி புரம் மாவட்டம் சிங்கபெருமாள் கோயில் பேருந்து நிலையம் அருகி லும், டிசம்பர் 11 அன்று செங்கல் பட்டு பழைய பேருந்து நிலையம் அருகிலும், டிசம்பர் 12 ஆம் தேதி திருவல்லிக்கேணி இருசப்ப தெருவிலும், டிசம்பர் 13 ஆம் தேதி இராயப்பேட்டை மாவடி விநாயகர் கோயிலில் அருகிலும், 14 ஆம் தேதி புதுப்பேட்டை சந்தை வேலாயுதம் வீதியிலும், 15 ஆம் தேதி இராசா அண்ணாமலைபுரம் காமராசர் வீதியிலும், 16 ஆம் தேதி மந்தைவெளிப்பாக்கத்திலும், 17 ஆம் தேதி மயிலாப்பூர் பல்லக்கு மாநகரிலும் பரப்புரைக் கூட்டங்கள் எழுச்சியுடன் நடைபெற்றன.

மந்தைவெளி கூட்டத்தில் வழக்கறிஞர் குமாரதேவனும், செங்கல்பட்டு கூட்டத்தில் உடுமலை தமிழ்ச் செல்வனும், புதுப்பேட்டை கூட்டத்தில் அய்யனாரும் பங்கேற்றுப் பேசினர். தென்சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, மாவட்ட தலைவர் தபசி குமரன், அன்பு. தனசேகர், செங்கல்பட்டு தோழர்கள் பிரதாப், அ.செங்கட்டுவன், முருகன், சத்யா, சீனிவாசன், சரவணன், தினேஷ்குமார், தென் சென்னை தோழர்கள் க.இரமேசு, சு.கோபி, த. இராமு, இரா.குமார், இரா. பொற்செல்வம், அ.பார்த்திபன், தீபா, மாஸ்டர் பிரகாஷ், ஜா. உமாபதி, மனோகரன் உள்ளிட்ட தோழர்கள் கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை செய்தனர். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுகுமார், அனைத்துக் கூட்டங்களையும் ஒருங்கிணைத்தார்.

புராண ஆபாசங்கள், பார்ப்பனர் மற்றும் இந்திய தேசியப் புரட்டுகள், பார்ப்பன ஆதிக்கம், பெரியார்-அம்பேத்கர் தன்னலமற்ற தொண்டுகளை விளக்கி கூட்டங்களில் பேசப்பட்ட கருத்துகளை ஏராளமான பொது மக்கள் ஆர்வத்துடன் கேட்டனர். உரை கேட்டு சில இளைஞர்கள் கைகளில் கட்டிய கயிறுகளை அறுத்து எறிந்தனர். சில கூட்டங்களில் அய்யப்ப பக்தர்களே கருத்துகளைப் பாராட்டி நன்கொடை வழங்கினர். ஒவ்வொரு கூட்டத்திலும் துண்டேந்தி தோழர்கள் நிதி திரட்டினர். பொது மக்கள் ஆர்வத்தோடு நிதி வழங்கினர். கழகத்துக்கே சொந்தமான ஒலிபெருக்கி, மின்விளக்கு, நாற்காலிகள், மேடைகளை வாகனங்களில் ஏற்றி ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, தோழர்கள் கூட்டங்களை நடத்தினர். சென்னை நகரில் ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்கள் வாழும் பகுதிகளைத் தேர்வு செய்து கூட்டங்கள் நடத்தப்பட்டன. இளைஞர்களிடையே பகுத்தறிவு பார்ப்பன எதிர்ப்பு கருத்துகளை கொண்டு சென்ற எட்டுதொடர் கூட்டங்களும் பெரும் தாக்கத்தை உருவாக்கின.

**– நமது செய்தியாளர்**

### வந்த கடிதம்

புரட்சிப் பெரியார் முழக்கம் 1.12.2011 இதழில் வெளியான "கூடங்குளம் எதிர்ப்பில் அன்னிய சக்திகளா? இயற்பியல் விஞ்ஞானிகள் மறுக்கிறார்கள்" என்னும் முகப்பில் வெளியான எழுத்தோவியம் மிகவும் அருமை. "பன்னாட்டு நிறுவனங்களுக்காகவே அணுமின் நிலையம்; மக்களுக்காக அல்ல" என்னும் பொன். ஏழுமலையின் கட்டுரை அதி அற்புதம். இந்தியாவில் நடந்த அணுமின் விபத்துகள் கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. "அணுகுண்டு தயாரிப்பதே நோக்கம்" என்னும் தலைப்பில் வெளியான படைப்பு சிந்தைக்கு விருந்தூட்டுவதாக இருந்தது. நெய்வேலி மின்சாரம் தமிழகத்துக்கு மட்டும் கிடைத்தாலே போதும்; கூடங்குளம் தேவை இல்லை. பழ. நெடுமாறனின் கருத்து சரியானதே!


ஈழத்தில் ராஜீவ் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் (7) ராஜீவின் உண்மை உருவத்தைப் படம் பிடித்துக் காட்டியது. மொத்தத்தில் கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதற்கிணங்க 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏடு சிறிய ஏடாக இருந்தாலும் பெரிய பெரிய கருத்துகளைத் தாங்கி வருவது பாராட்டத்தக்கதாகும்.

**தங்க. சங்கரபாண்டியன், சென்னை–103.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 22nd December 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | டிச. 29, 2011 | புரட்சி 10 | முழக்கம் 50 | விலை: ரூ.2.50

# 2011 இல் கழகத்தின் அயராத களப்பணிகள்

*சாதி – தீண்டாமை ஒழிப்பு; ஈழத் தமிழர் உரிமை; கூடங்குளம் எதிர்ப்பு; முல்லைப் பெரியாறு; மூன்று தமிழர் தூக்குக்கு எதிர்ப்பு என்று பல்வேறு தமிழர் உரிமைப் பிரச்சினைகளில் வழமைபோல் 2011 ஆம் ஆண்டில் களப்பணியாற்றி முடித்துள்ளது பெரியார் திராவிடர் கழகம்.*

*குருக்கிளையான்பாளையம் கிராமத்தில் தலித் மக்களுக்கு தண்ணீர் பிடிக்கும் உரிமை மீட்பு; காவல் நிலையங்களில் ஆயுத பூசைகள் போடுவதை நிறுத்தியது; தமிழகத்தில் பயிற்சிப் பெற வந்த சிங்கள ராணுவத்தை திருப்பி அனுப்பியது போன்ற வெற்றிகளும் கழகத்தின் போராட்டத்துக்கு கிடைத்தன.*

*தன்னெழுச்சியாக தோழர்கள் தமிழகம் முழுதும் சுழன்று ஆற்றிய முக்கிய களப்பணிகளின் தொகுப்புகள்:*

### ஜனவரி

தமிழக மீனவர்கள் தொடர்ந்து சிங்கள கப்பல் படையால் தாக்கப்படுவதும், சுடப்படுவதும், நீடிப்பதும் ஒவ்வொரு முறை பிரதமருக்கு தமிழக அரசு, கடிதம் எழுதுவதும் சடங்குகளாக மாறிப் போன நிலையில் சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் ஒரு அதிரடி செயல்பாட்டில் இறங்கினர். சென்னை எழும்பூரில் உள்ள சிங்கள புத்த மடம் மீது ஜனவரி 24 அன்று தாக்குதல் நடத்தியதாக (ஜனவரி 24) கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். தாக்குதலுக்கு உள்ளான ஒருவர், இலங்கை அரசின் உளவுப் பிரிவைச் சார்ந்தவர் என்றும், அவர் தாக்கப்பட்ட செய்தியை மறைத்து வெளியே தெரியாமல், கொழும்புக்கு அனுப்பப்பட்டதாகவும் பின்னர் தெரிய வந்தது. சிங்களர்கள் மீது மட்டுமே எதிர்வினையாக தாக்குதல் நடத்தப்பட்டது என்பதாலும், மிகவும் நெருக்கடி மிகுந்த அந்த வணிகப் பகுதியில் வேறு எந்த ஒரு சிறு வன்முறையும் இடம் பெறவில்லை என்பதாலும் இலக்கு நோக்கி செயல்படக் கூடியவர்கள் பெரியார் திராவிடர் கழகத்தினர்தான் என்று காவல்துறை முடிவுக்கு வந்து, கழகத் தோழர்களை தேடத் தொடங்கியபோது 7 கழகத் தோழர்கள் தாமாகவே முன் வந்து கைதானார்கள்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்குப் பிறகுதான் இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் முதன்முதலாக வாய் திறந்து பேசினார். ‘இனிமேல் தமிழக மீனவர்களை சுட மாட்டோம்’ என்று அறிவித்ததோடு, தமிழக தலைமைச் செயலகத்துக்கு வந்து அதிகாரிகளை சந்தித்துப் பேசினார். ‘தினமணி’ நாளேடு தனது தலையங்கத்தில் இந்த தாக்குதல்தான் இலங்கை தூதரகத்தை அசைக்க வைத்தது என்று எழுதியது.

இந்திய பாதுகாப்புத் துறையின் கீழ் உடுமலைப் பேட்டை அருகே இயங்கும் சைனிக் பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மாத நாட்காட்டியில் இனப் படுகொலையாளன் ராஜபக்சேயின் படம் இடம் பெற்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து உடுமலையில் கழகத் தோழர்கள் அந்த நாட்காட்டியை எரிக்கும் போராட்டத்தை நடத்தினர். (ஜன.19)

கேரளாவில் தமிழர்கள் அதிகம் வாழும் பாலக்காடு, இடுக்கி, பத்தனம் திட்டை, திருவனந்தபுரம் பகுதிகளில் தமிழர் திருநாளான பொங்கலுக்கு உள்ளூர் விடுமுறை அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை கேரள அரசு மறுத்த நிலையில் இப்பிரச்சினையை முன் வைத்து கோவை மாவட்ட திராவிடர் கழகம் நடத்திய ஆர்ப்பாட்டத்தால் தமிழக முதல்வர் கலைஞர் கவனத்துக்கு இப்பிரச்சினை போனது. அவர் கேரள முதல்வருக்கு கடிதம் எழுதினார். அதன் பிறகு கேரள அரசு இப்பகுதிகளுக்கு உள்ளூர் விடுமுறை அறிவித்தது. இதற்காக கோவையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, பொதுக் கருத்து உருவாக்கி, கோவையில் ஆர்ப்பாட்டம் நடத்தியது பெரியார் திராவிடர் கழகம். (ஜனவரி 8)

திருப்பூர் மாவட்டத்திலுள்ள டாக்டர் நல்லினி பொறியியல் கல்லூரி மாணவர்களிடம் அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வாங்கியதோடு, தனியார் ஆயுள் காப்பீட்டு முகவராக மாறி மாணவர்கள் மீது பாலிசிகளைக் கட்டாயப் படுத்தித் திணித்தது. இதை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகத்தின் மாணவர் அணியான தமிழ்நாடு மாணவர் கழகம் தாராபுரம், பழனிசாலையில் சாலை மறியல் போராட்டம் நடத்தியது. கோவை அண்ணா பல்கலை துணை வேந்தர் இதில் தலையிட்டு, பொறியியல் கல்லூரியின் முறைகேடுகளை நிறுத்தினார்.

சூடானில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு தெற்கு சூடான் சுதந்திர நாடு உருவானது. நாடு கடந்த தமிழீழ அரசு பிரதிநிதிகளுக்கு தெற்கு சூடான் புதிய அரசு விடுதலை விழாவில் பங்கேற்க அழைப்பு விடுத்தது.

### பிப்ரவரி

தமிழ் ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தாயார் பார்வதியம்மாள் ஈழத்தில் முடிவெய்தினார். கடுமையாக உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த அவரை தமிழ்நாட்டுக்கு சிகிச்சைக்கு விமானத்தில் அழைத்து வரப்பட்டபோது இந்தியப் பார்ப்பன ஆட்சி மனிதாபிமானமின்றி விமானநிலையத்திலிருந்தே திருப்பி அனுப்பியது. அவர் மரணமடைந்த செய்தி வந்த அதே நாளிலேயே சென்னை எம்.ஜி.ஆர். நகரில் கழகத்தின் முயற்சியால் இரங்கல் ஊர்வலம் நடத்தப்பட்டது. (பிப்.20) தமிழக மீனவர்கள் 136 பேர் சிங்கள கடற்படையால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பொள்ளாச்சியில் நகர ஒன்றிய பெரியார் திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. கிருட்டிணகிரியிலும் ஆர்ப்பாட்டம் நடந்தது. கழக தலைமை செயற்குழுக் கூட்டம் கோவையில் கூடியது. (பிப்.26, 27)

சபரிமலையில் அய்யப்பன் சக்தியால் மலை உச்சியில் ஒவ்வொரு ஆண்டும் ‘மகர ஜோதி’ தெரிவதாக கேரள தேவஸ்வம் போர்டே அறிவித்து, மக்களை நம்ப வைத்தது. உண்மையில் அது மனிதர்களால் ஏற்றப்படும் ஒளிதான் என்ற உண்மையை கேரள தேவஸ்வம் போர்டு முதன்முறையாக ஒப்புக் கொண்டது. (பிப்.1)

நாடு கடந்த தமிழீழ அரசு தோழமை மய்யம் சென்னையில் கழக ஆதரவுடன் உருவானது. நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திர குமாரன், அமெரிக்காவிலிருந்து தொலை அலை வரிசை வழியாக வாழ்த்துக் கூறி தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கும் கண்டனம் தெரிவித்தார்.

### மார்ச்

பன்னாட்டு நிறுவனங்களுக்கு தடையில்லாமல் மின்சாரம் வழங்கும் தமிழக அரசு தேர்வுகளுக்கு படிக்கும் மாணவர்களுக்கு மின்வெட்டு வழங்கியதைக் கண்டித்து, சென்னை, கோவை, சேலம், தூத்துக்குடி, கிருட்டிணகிரி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. (மார்ச் 8)

கோயில்களில் பிரசாதம் தயாரிப்பு; அபிஷேகம் செய்தல் போன்ற பணிகளைச் செய்யும் உரிமைகளை யாவது அர்ச்சகர் பயிற்சிப் பெற்ற பார்ப்பனரல்லாத இளைஞர்களுக்கு வழங்க வேண்டும் என்று பயிற்சி பெற்ற ஒரு மாணவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதை மாற்ற முடியாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. இதனால் பிரசாதம், அபிஷேகம் செய்யும் உரிமை பார்ப்பனர்களுக்கு மட்டுமே உண்டு; ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’களுக்கு கிடையாது என்ற இழிவு மீண்டும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

யோகா மய்யங்களை நடத்திவரும் பெரும் தொழிலதிபரும், காவியுடை சாமியாருமான ராம்தேவ், ‘பசுவதை’ தடுக்கப்பட வேண்டும் என்றும், பசு மாட்டை வெட்டினால் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்றும் பார்ப்பனியத்தை வலியுறுத்திப் பேசி வருவதற்கு கடும் கண்டனம் தெரிவித்து சென்னை-சேலம்-கோவையில் மாட்டிறைச்சியுடன் பாபாவின் ‘யோகா’ பயிற்சி நடத்தும் இடங்கள் முன் போராட்டம் நடத்தி கழகத் தோழர்கள் கைதானார்கள்.

சென்னையில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்கள்கூடி கழக ஆலோசனைக்குழு ஒன்றை உருவாக்கினர். (மார்ச் 20) சங்கரராமன் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியான காஞ்சி சங்கராச் சாரியைக் காப்பாற்ற தி.மு.க. ஆட்சியில் காவல்துறை செயல்படுவதை எதிர்த்து, சங்கராச்சாரியைக் கைது செய்து உரிய நடவடிக்கையை எடுத்த ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரி சக்திவேலு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். தமிழின எதிரி பார்ப்பன சங்கராச்சாரியைக் காப்பாற்ற தி.மு.க. ஆட்சியின் காவல்துறையே துணை போன அதிர்ச்சியான தகவல்கள் அம்பலமாயின.

### ஏப்ரல்

கழகத்தின் மாவட்ட கலந்துரையாடல் கூட்டங்கள் எழுச்சியுடன் பல்வேறு ஊர்களில் நடந்தன. கழகத் தலைவர், பொதுச் செயலாளர்கள் பங்கேற்ற கலந்துரையாடல் கூட்டங்கள் கோவை, திருப்பூர், சென்னை, ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், மயிலாடுதுறை உள்ளிட்ட பல ஊர்களில் நடத்தப்பட்டன. இக்கூட்டங்களில் கழகத்தின் எதிர்கால செயல் திட்டங்கள், கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு கூடுதல் சந்தாக்கள் சேர்ப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் தீண்டாமையின் வடிவங்களாக நடைமுறைப்படுத்தப்படும் ‘இரட்டைக் குவளை’ முறைக்கு எதிராக உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் நகல், அரசு அலுவலகங்களில் கடவுள் படங்கள் மாட்டவோ, பூசை சடங்குகள் நடத்தவோ கூடாது என்று அரசு பிறப்பித்த ஆணைகளின் நகல்களை கழகப் பொறுப்பாளர்களுக்கு கழகத் தலைவர் வழங்கினார். காவல் நிலைய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளுக்கு இந்த ஆணைகளை தோழர்கள் காவல்துறையிடம் அளித்தனர்.

அய்.நா. பொதுச் செயலாளர் நியமித்த குழுவினரின் அறிக்கை ராஜபக்சே இலங்கையில் நிகழ்த்திய போர்க் குற்றங்களை உறுதிப்படுத்தியது. இந்த அறிக்கையின் அடிப்படையில் ராஜபக்சே மீது அய்.நா. உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும், இனப் படுகொலைக்கு துணை போன இந்திய அரசு தமிழர்களிடம் மன்னிப்புக் கேட்கக் கோரியும் கழக சார்பில் சென்னை, தூத்துக்குடி, கரூர், சேலம், மதுரை, கோவை, மயிலாடுதுறை, பொள்ளாச்சி, ஈரோடு, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. (ஏப்.21) அய்.நா. ராஜபக்சே மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், ஈழத் தமிழர் பிரச்சினையில் அவர்களின் தேசிய சுய நிர்ணய உரிமைக்கான நடவடிக்கைகளில் அய்.நா.

3 ஆம் பக்கம்

# பகவத் கீதையை தூக்கிப் பிடிக்கும் இந்தியப் பார்ப்பன ஆட்சி!

ரஷ்யாவில் உள்ள சைபிரியா மாநிலத்தில் டாம்ங்க் நகர நீதிமன்றத்தில் ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட பகவத் கீதையை தடை செய்யக் கோரி அப்பகுதியைச் சார்ந்த சிலர் வழக்கு தொடர்ந்துள்ளனர். கீதையில் கூறப்பட்டுள்ள கருத்துகள் "வன்முறையையும், பயங்கரவாதத்தையும் நியாயப்படுத்துகின்றன" என்ற அடிப்படையில் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. சர்வதேச கிருஷ்ண பக்தி அமைப்பைச் சார்ந்த ஏசி. பக்தி வேதாந்தசுவாமி பிரபுதாதா என்ற - பெயர் மாற்றம் செய்து கொண்ட ஒரு ரஷ்யர், இந்த மொழிப் பெயர்ப்பை செய்துள்ளார்.

இந்தியாவின் நாடாளுமன்றத்தில் பா.ஜ.க., சிவசேனா போன்ற இந்துத்துவ கட்சிகளும், சமாஜ்வாடி, காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதாதளம் போன்ற கட்சி களும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன. அம்பேத்கர் பெயரைப் பயன்படுத்தும் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி உறுப்பினர்களும் நாடாளு மன்றத்தில் பகவத் கீதைக்கு ஆதரவாகப் பேசி யுள்ளார். வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணா - இந்துக்களின் புனித நூல் கீதை என்றும், அதைத் தடை செய்யக்கூடாது என்றும், இந்தியா, ரஷ்ய அரசிடம் வலியுறுத்தும் என்றும் கூறியுள்ளார்.

இந்துக்களின் புனித நூல் பகவத் கீதை என்று எப்படி கூற முடியும்? அனைத்து இந்துக்களும் பகவத் கீதையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா? அரசியல் நிர்ணய சபைத் தலைவர் அம்பேத்கர், 'வர்ணா ஸ்ரமத்தை' வலியுறுத்தும் பகவத் கீதையை 'முட்டாளின் உளறல்' என்று கடுமையாக விமர்சித் துள்ளார். விவேகானந்தரும், பகவத் கீதையை ஏற்கவில்லை. காந்தியை கொலை செய்த பார்ப்பன கோட்சே தர்மத்தைக் காப்பதற்கு அதர்மத்தைக் கையில் எடுக்கலாம் என்ற பகவத்கீதையின் கருத்தை ஏற்றே தாம் காந்தியை கொலை செய்ததாக நீதிமன்றத்தில் வாக்கு மூலம் அளித்தான்.

மனிதர்களை மட்டுமல்ல, வர்ண பேதங்களையும் ஏற்றத் தாழ்வுகளையும் பகவானே படைத்ததாகவே பகவத் கீதை கூறுகிறது. பார்ப்பன தர்மத்தைக் காக்க அதர்மங்களை நடத்துவதை நியாயப்படுத்துகிறது பகவத் கீதை. பார்ப்பன பயங்கரவாதத்தை நியாயப் படுத்தும் நூல் எப்படி, புனித நூலாக முடியும்? ஆக, பா.ஜ.க. ஆட்சியானாலும் காங்கிரஸ் ஆட்சி யானாலும், 'பகவத் கீதை'யை ஆதரிக்கும் பார்ப்பன ஆட்சியே இந்தியாவில் நடக்கிறது. உலக நாடுகளில் பைபிள், குர்ரான் அவமதிப்புக்குள்ளானதாக எதிர்ப்புகள் வந்த போது, அது பற்றி எல்லாம் நாடாளுமன்றத்தில் பேசாத இந்திய அரசு, பகவத் கீதைக்கு மட்டும் 'சர்வதேச அளவில்' கண்டனங் களைத் தெரிவிப்பது ஏன்? நடப்பது இந்துமத ஆட்சியா?

ஈழத்திலே தமிழினப் படுகொலை நடத்திய சிறீலங்கா அரசைக் கண்டித்து வாய் திறக்காத இந்திய ஆட்சி, பகவத் கீதைக்காக ரஷ்யாவுக்கு வேண்டு கோள் வைப்பது ஏன்? பச்சை பார்ப்பன ஆதரவுப் போக்கு தானே!

பகவத் கீதை கக்கும் வர்ணாஸ்ரம நஞ்சுகளில் உதாரணத்துக்கு சிலவற்றை குறிப்பிடுகிறோம்.

> "உலகில் உள்ள மதங்களெல்லாம், 'இறைவன் உலகைப் படைத்தான். இறைவன் மக்களைப் படைத்தான்' என்று கூறும். ஆனால் இந்து மதம் மட்டும் தான் 'இறைவன் நான்கு சாதிகளைக் கொண்ட மனிதர்களைப் படைத்தான்' என்று கூறுகிறது. மக்களிடையே நிலவும் சாதி வேற்றுமை மனிதன் படைத்ததல்ல. அது இறைவனின் ஏற்பாடு என்று பகவத் கீதை கூறுகிறது.
>
> 'சதுர்வர்ணயம் மயா சிருஷ்டம்' (ப.கீ. IV 13)
>
> 'நான்கு சாதிகள் என்னால் படைக்கப் பட்டன' என்று பகவானே கூறுவதாகக் கீதை நூலாசிரியன் காட்டியுள்ளான். நான்கு வித வர்ணங்களை (சாதிகளை) படைத்ததோடல் லாமல் நான்குவித வர்ணத்தாரும் (சாதிகளும்) செய்ய வேண்டிய தொழில்களையும் 'கிருஷ்ணன்' பட்டியலிட்டுக் காட்டுகிறான்.
>
> 'மனவடக்கம், புலனடக்கம், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை, அறிவு, அனுபவ அறிவு, இறை நம்பிக்கை இவையனைத்தும் இயற்கை யில் உண்டாகிய 'பிராமண' கருமங்கள் (செயல்கள், தொழில்கள்)' (பகவத்கீதை, பக். XVII 42)
>
> 'வீரம், துணிவு, உறுதி, திறமை, போரில் புறங்காட்டாமை, கொடை, தலைமை இவை யனைத்தும் இயற்கையிலுண்டாகிய **க்ஷத்திரிய** கருமங்கள்.' (ப.கீ. XVIII 43)
>
> 'உழவும் கால்நடை காத்தலும், வாணிகமும் இயற்கையிலுண்டாகிய **வைசிய** கருமங்கள் மற்றவர்களுக்கு (பார்ப்பன, க்ஷத்திரிய, வைசிய சாதியர்களுக்கு) குற்றேவல் செய்தல் இயற்கையிலுண்டாகிய **சூத்திர** கருமங்கள்) (ப.கீ. XVIII 44)
>
> ஒவ்வொருவனும் தான் எந்த வர்ணத்தில் (சாதியில்) பிறந்திருக்கிறானோ அவன் தன் சாதிக்குரிய தொழில்களாக சாத்திரங்களில் (மனுநீதி) எவை எவை விதிக்கப்பட்டிருக் கின்றனவோ அவைகளைத் தான் செய்ய வேண்டும் என்று இந்து மதம் கட்டளை யிடுவதோடு மட்டுமல்லாமல் ஒரு வர்ணத்தான் (சாதியான்) மற்றொரு வர்ணத்தானுக்கு விதிக்கப்பட்ட தொழில்களைச் செய்யக் கூடாது என்றும் எச்சரிக்கிறது. பிற மூன்று வர்ணத்தாருக்கும் பலன் எதிர்பாராமல் ஊழியம் செய்ய வேண்டுமென்பது ஒன்றை மட்டுமே கருமமாகக் (தொழிலாகக்) கொண்டுள்ள சூத்திரன், பார்ப்பன வர்ணத்தாருக்குரிய கல்வி, கேள்வி, தவம் போன்றவற்றில் ஈடுபடக் கூடாது என்பதுதான் மனுநீதி. தன் சாதிக்குரிய தொழில்களைச் செய்வதில் ஆற்றலும், திறமையும் இல்லாத போதும் கூட ஒருவன் தான் சாதிக்குரிய கருமங்களைச் செய்தே ஆக வேண்டும் என்றும் பிற வருணத்தார்க்குரிய தொழில்களைச் செய்வதற்கு ஆற்றலும், அறிவும், திறமையும் பெற்றிருந்தாலும் ஒருவன் பிற வருணத்தார்க்குரிய கருமங்களைச் செய்யக் கூடாது என்பதுதான் 'கர்மயோகம்'.
>
> 'தத்தம் வருணத்திற்குரிய தொழில்களைச் செய்வதில் மகிழ்ச்சியுறுபவன் நல்ல நிலையை அடைகிறான்.' (ப.கீ. XVIII 45)
>
> 'மற்ற வருணத்தார்க்குரிய கருமத்தை குற்றமின்றி செய்வதைக் காட்டிலும் தன்னுடைய வருணத்துக்குரிய கருமத்தை (தொழிலை)க் குறையோடு செய்வதும் நன்று.' (ப.கீ. XVIII 47)
>
> 'கேடுடையதெனினும் (தீயவையென் றாலும்) தன்னுடைய வருணத்துக்குரிய (சாதிக்குரிய) கருமத்தை விட்டுவிடக் கூடாது.' (ப.கீ. XVIII 48)
>
> 'பிற வருணத்தார்க்குரிய கருமங்களைச் செய்து மேன்மையுறுவதைக் காட்டிலும் தன் வருணத்திற்குரிய தொழிலைச் செய்து இறப்பதே மேலானது.' (ப.கீ. XVIII 35)

இப்படி பிறப்பின் அடிப்படையில் சமூகத்தைக் கூறு போடும் பகவத் கீதை, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அரசியல் சட்டத்துக்கே சவால் விடுகிறது; "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற தமிழர் மறையான திருக்குறளுக்கு, அதை ஏற்றுக் கொண்ட தமிழர் மரபுக்கு எதிரானது.

தமிழர் மரபுக்கு எதிரான பார்ப்பன மரபை 'இந்து' மரபாக்கி, அதையே இந்தியாவின் மரபாக்கும் இந்தியப் பார்ப்பன ஆட்சிகள் எப்படி தமிழருக்கான ஆட்சியாக இருக்க முடியும்?

நாம் இந்தியர்களாக, இழிமக்களாக, அடிமை களாக இனியும், வாழ வேண்டுமா?

நாம் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 29.12.2011

## 'சனிப் பெயர்ச்சி' எனும் மடமை

பெயர்ச்சி என்றால் என்னவென்று பார்ப்போம். பொதுவாக சோதிடத்தில் குருப் பெயர்ச்சியும், சனிப் பெயர்ச்சியுமே மிகவும் பிரபலமானதாகவும் முக்கியமானதாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. சனி, குரு மட்டுமல்லாமல் எல்லா கிரகங்களுக்கும் பெயர்ச்சி உள்ளது. அந்தந்த கிரகங்கள் பூமியை / சூரியனை சுற்றி வரும் காலத்திற்கு ஏற்ப ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசிக்கு இடம் பெயர காலம் எடுத்துக் கொள்ளும்.

சனிக் கோள் சூரியனை சுற்றி வர 30 ஆண்டுகள் ஆகும். 12 ராசிகள் உள்ள சூரிய வீதியில் சனி ஒவ்வொரு ராசியிலும் சுமார் இரண்டரை ஆண்டுகள் காணப்படும். இதனைத் தான் அந்த ராசியை சனி பிடித் துள்ளதாக கூறுகிறார்கள். இரண்டரை ஆண்டுகள் கழித்து சனி அந்த ராசியில் இருந்து விலகி அடுத்த ராசிக்கு இடம் பெயரும். இதனைத் தான் சனிப் பெயர்ச்சி என்று கூறுகிறார்கள்.

ஏழரை நாட்டுச் சனி என்பத சனிக் கோளானது ராசிக்கும் அந்த ராசியின் முன் வீடு ராசியின் அடுத்த வீடு ஆகிய மூன்றிலும் உள்ளதைக் குறிக்கும். சனி கிரகமானது ஒரு ராசியிலிருந்து அடுத்த ராசிக்கு செல்வதற்கு இரண்டரை ஆண்டுகள் ஆகும் என்பதை முன்னரே கண்டோம். ராசிக்கு முன் ராசியில் இரண்டரை ஆண்டுகள், பிறந்த ராசியில் இரண்டரை ஆண்டுகள், அடுத்த ராசியில் இரண்டரை ஆண்டுகள் ஆக ஏழரை ஆண்டுகளைத்தான் ஏழரை நாட்டுச் சனி என்பர்.

உதாரணமாக தற்போது சனி கன்னி ராசியிலிருந்து துலாம் ராசிக்கு இடம் பெயர்ந்துள்ளது. அடுத்து இரண்டரை ஆண்டுகள் கழித்து விருச்சிக ராசிக்கு செல்லவிருக்கிறது. சோதிடத்தின்படி துலாம் ராசிக்காரருக்கு இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னரே ஏழரை சனி ஆரம்பித்துவிட்டது. இன்னும் ஐந்து ஆண்டுகள் கழிததே அவரை அது விடும். ஒருவரின் முப்பது ஆண்டுகால வாழ்க்கையில் ஏழரை ஆண்டுகள் சனியின் தொல்லையில் கொடுமைக்கு ஆளாக வேண்டும் என்பது அவரின் விதி என்பதே சோதிடத்தின் நியதி ஆகும்.

நீண்ட கால வாழ்விற்கும், மரணத்திற்கும் காரணமாக இருப்பது சனி என்று சோதிடம் கூறுகிறது. வறுமை, கலகம், நோய், அவ மரியாதை ஆகியவற்றின் காரணி சனியாகவே வருணிக்கப்படுகிறது. லக்னத்திற்கு 3, 6, 9, 10, 11 இடங்களில் சனி இருந்தால் குவியல் குவியலாக பணமும் பொருளும், வேலையாட் களுடன் கூடிய வாழ்வு அமையுமாம். லக்னத்திற்கு 2, 4, 8, 12 இடத்தில் இருந்தால் துன்பமும், துயரமும், கஷ்ட நஷ்டங்களும் தொடர்கதையாய்த் தொடரும் எனக் கதை விடுகிறார்கள்.

இந்தியாவில் வறுமைக் கோட்டின் கீழ் 40 சதவீதத்திற்கு மேல் இருக்கிறார்கள். இவர்களின் வாழ்க்கை லக்னத்திற்கு 3, 6, 9, 10, 11 இடங்களில் சனி வராமல் இல்லை. ஆனால், நாளுக்கு நாள் வறுமைக் கோட் டிற்கு கீழ் வாழ்பவர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டுதான் இருக்கிறது.

மறுபுறம் பெரு முதலாளிகளின் சொத்தும் பெருகிக் கொண்டுதான் இருக்கிறது. இதற்கு காரணம் சனி தான் என்று சொல்லி அதுதான் விதி. விதிப்படித்தான் நடக்கும் எனக் கூறி மக்களை ஏமாற்றி அவர்களின் போராட்டக் குணங்களை மழுங்கடிக்கச் செய்கிறது ஒரு கூட்டம். அதற்கு தூபம் போட ஏற்பட்டதே சோதிடக் குவியல்கள்.

– அன்பு. தனசேகரன்

# காவல் நிலையங்களில் ஆயுத பூசைகளை நிறுத்தியது கழகம்

முதல் பக்கத் தொடர்ச்சி

தலையிட வேண்டும் என வலியுறுத்தியும், தமிழ்நாடு முழுதும் பொது மக்களிடையே கையெழுத்து இயக்கங்களை கழகம் நடத்தியது. கோவையில் கழகத்தின் முன்முயற்சியால், இதே கோரிக்கையை முன் வைத்து பல்வேறு அமைப்புகள் பங்கேற்ற மனித சங்கிலி போராட்டம் நடத்தியது.

கோவை மேட்டுப் பாளையம் கூட்டுறவு காலனியில் உள்ள அம்மன் கோயிலில் வழிபடச் சென்ற தலித் மாணவனை தாக்கிய பார்ப்பன அர்ச்சகர் மீது தீண்டாமை தடுப்புச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கும் முயற்சிகளில் கழகத்தினர் இறங்கினர். பார்ப்பன அர்ச்சகர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

### மே

ஆனைமலை அருகே கள்ளிமேட்டுப் பகுதி மலைவாழ் மக்களின் சுடுகாட்டுக்குரிய இடத்தை ஆக்கிரமித்தவர்களிடமிருந்து மீட்டு, அம்மக்களுக்கு வழங்கக் கோரி, கழகத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். சென்னையில் எம்.ஜி.ஆர். நகரில் முள்ளி வாய்க்கால் படுகொலையில் உயிர்நீத்தவர்களுக்கு வீரவணக்கம் மற்றும் படுகொலை கண்டனப் பொதுக் கூட்டம் நடந்தது. கழகத் தலைவர், பொதுச் செயலாளர்கள், வைகோ பங்கேற்று உரை நிகழ்த்தினர்.

சுவரெழுத்துகளில் பெரியார் கொள்கைகளைப் பரப்புவதையே தனது வாழ்நாள் லட்சியமாகக் கொண்டு உழைத்து, உயிர்நீத்த கருப்பு மெழுகுவர்த்தி சுவரெழுத்து சுப்பையா கைப்பட எழுதிய பகுத்தறிவு நாட்குறிப்பை கோவை மாவட்டக் கழகம் நூலாக வெளிக் கொண்டு வந்தது. நூல் அறிமுக விழாக்கள் கோவை, சென்னையில் நடந்தன. திரைப்படத் துறையைச் சார்ந்த நடிகர் சத்தியராஜ், இயக்குனர் மணிவண்ணன் மற்றும் கழகப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

சாதி - தீண்டாமைக்கு எதிராக அவினாசி ஒன்றியத்தில் கழகத் தோழர்கள் கழக சார்பில் 5 நாள் பரப்புரைப் பயணம் நடத்தினர். உடுமலையில் நாத்திகர் விழா நடந்தது. கருநாடக மாநிலம் ஹுப்ளியில் ராஜபக்சேவுக்கு எதிராக தமிழர்கள் நடத்திய பேரணியில் (மே 22) கழகத் தலைவர் பங்கேற்றுப் பேசினார். திருச்சி மாவட்டம் இடையாற்று மங்கலத்தில் ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடந்தது.

### ஜூன்

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் கச்சத் தீவை மீட்கக் கோரியும் தமிழக சட்டமன்றத்தில் சிறப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவை பாராட்டி கழக சார்பில் சென்னையில் பாராட்டு நடத்தப்பட்டது.

அன்னூர் ஒன்றியம் குறுக்கிளையான்பாளையம் கிராமத்தில் பொதுக் குழாயில் தண்ணீர் பிடிக்க அருந்ததி மக்களுக்கு சாதி ஆதிக்கவாதிகள் தடை போட்டதை எதிர்த்து கழகம் குடிநீர் பானைகளுடன் தண்ணீர் பிடிக்கும் ஆர்ப்பாட்டம் நடத்தியது. மாவட்ட நிர்வாகமும் காவல்துறையும் அதற்குப் பிறகு நடவடிக்கைகள் எடுக்க முன் வந்தன. கழகத்தின் போராட்டம் வெற்றிப் பெற்றது. பொதுக் குழாயில் தண்ணீர் எடுக்கும் உரிமை அந்த கிராமத்தில் அருந்ததி மக்களுக்குக் கிடைத்தது.

### ஜூலை

சேலம் இளம்பிள்ளையில் கழகத் தோழர்கள் நாத்திகர் பேரணியை எழுச்சியுடன் நடத்தினர். (ஜூலை 11)

சூலூரில் இரண்டு நாள் கழகப் பயிற்சி முகாம் சிறப்புடன் நடந்தது. (ஜூலை 2, 3) குன்னூருக்கு பயிற்சிப் பெற வந்த சிங்கள ராணுவத்தினருக்கு பயிற்சி தரக் கூடாது என்று கோவை மாவட்டக் கழகம் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தால் பயிற்சி ரத்து செய்யப்பட்டது. பயிற்சி பெற வந்த சிங்கள ராணுவத்தினர் மைசூருக்கு திருப்பி அனுப்பப் பட்டனர்.

கழக மாணவரணியான தமிழ்நாடு மாணவர் கழகம், நுழைவுத் தேர்வை எதிர்த்தும் சமச்சீர் கல்வியை வலியுறுத்தியும் ஜூலை 18 இல் தொடங்கி ஆகஸ்ட் 5 ஆம் தேதி வரை தமிழகம் முழுதும் பள்ளி, கல்லூரிகள் வாயிலில் பரப்புரைக் கூட்டங்களை எழுச்சியுடன் நடத்தியது. நிறைவாக ஆக.6 ஆம் தேதி சேலத்தில் கல்வி உரிமை மீட்பு மாநாடு சிறப்புடன் நடைபெற்றது. சேலம் மாவட்டம் நங்கவள்ளியில் உள்ள கே.வி.ஆர். நூற்பு ஆலையில் பெரியார் தொழிலாளர் கழகம் உருவானது. கோவை வானொலி நிலையத்தின் பெயர்ப் பலகையில் தமிழ் இடம் பெறாததை கழகம் சுட்டிக் காட்டியதால், தமிழ் இடம் பெற்றது.

ராஜீவ் வழக்கில் சிறையில் 23 ஆண்டு காலம் அடைபட்டுள்ள மூன்று தமிழர்களின் கருணை மனுக்களை திடீரென நிராகரித்து தூக்குத் தண்டனையை மத்திய அரசு உறுதி செய்ததைத் தொடர்ந்து கழகம் தீவிர களப்பணியில் இறங்கியது. சென்னையிலிருந்து வேலூர் சிறை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் அணி வகுப்பில் கழகத் தோழர்கள் பெருமளவில் பங்கேற்றனர். காஞ்சி மக்கள் மன்றத்தைச் சார்ந்த இளம் தோழியர் செங்கொடி மூன்று தமிழர் உயிர்காக்க தன்னைத் தானே தீயிட்டுக் கொண்டார். இது நாடு முழுதும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியது. தமிழகமே கொந்தளித்தது. பெரியார் திராவிடர் கழகம் தமிழகம் முழுதும் களத்தில் இறங்கிப் போராடியது. கழகத்தின் மாணவரணி போராட்டம் கோவையை முடங்க வைத்தது. செங்கொடி வீரமரணத்தைக் கொச்சைப் படுத்திய 'தினமலர்' பார்ப்பன நாளேட்டை சென்னையில் அந்நாளேட்டின் அலுவலகம் முன் கழகத் தோழர்கள் தீயிட்டுக் கொளுத்தி கைதானார்கள்.

### செப்டம்பர்

ஈரோடு மாவட்டம் குருவாரெட்டியூரில் கழக சார்பில் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் பெரியார் படிப்பகம் திறக்கப்பட்டது. மேட்டூர் அருகே கழகத்தின் கோட்டையான காவலாண்டியூரில் பெரியார் படிப்பகம் திறப்பு விழா மக்கள் விழாவாக நடைபெற்றது. ஈரோட்டில் நாத்திகர் பேரணி நடந்தது.

மூன்று தமிழர்களை தூக்குத் தண்டனையிலிருந்து விடுவிக்கக் கோரி, கழக சார்பில் பரப்புரைப் பயணம் சென்னையில் தொடங்கியது (செப்.20). சென்னை, உடுமலை, சேலம், ஈரோடு, கரூர், விழுப்புரம், மதுரை, தூத்துக்குடி மற்றும் ஜோலார்பேட்டையில் நடந்த பரப்புரைக் கூட்டங்களில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர்கள் பங்கேற்றனர். புதுவையில் (செப்.23) காலை முதல் இரவு வரை ஒரு நாள் முழுதும் எழுச்சியுடன் பரப்புரைக் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சேலம் அரசு கலைக் கல்லூரிக்கு வந்த ஜக்கிவாசுதேவை எதிர்த்து அவரது கிரிமினல் பின்னணியை விளக்கிடும் துண்டறிக்கைகளை கல்லூரி வளாகத்தின் முன் கழகத்தினர் வழங்கி எதிர்ப்பை தெரிவித்தனர். விழுப்புரம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் இரண்டு நாள் சாதி தீண்டாமை எதிர்ப்பு பரப்புரைப் பயணம் நடத்தப்பட்டது. (ஆக.13,14)

### அக்டோபர்

அரசு அலுவலகங்களில் காவல் நிலையங்களில் ஆயுத பூசைகளை நிறுத்தக் கோரி, கழகம் மேற்கொண்ட முயற்சிகள் பெரும் வெற்றியை ஈட்டித் தந்தது. கழகத் தலைவர் அரசாணைகளை சுட்டிக் காட்டி, உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் உயர்நீதிமன்றம் அரசாணைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று உத்தரவிட்டது. தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக பெரியார் திராவிடர் கழகம் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளால் 90 சதவீதத்துக்கும் மேற்பட்ட காவல் நிலையங்களில் அரசு அலுவலகங்களில் ஆயுத பூசை நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயுத பூசைக்கு எதிராக கழகம் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிப் பெற்றதால், நிலைகுலைந்த இந்து மக்கள் கட்சியினர் கழகக் கோட்டையான மேட்டூருக்கு வந்து காவல்நிலையத்தில் பூசை போடப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து மேட்டூர் தோழர்கள் களத்தில் இறங்கினர். கழகத்தினர் மதவெறி சக்திகளுக்கு எதிராக போராட்டத்தில் இறங்கியதைத் தொடர்ந்து மேட்டூர் ஊர் எல்லையிலேயே இந்து மக்கள் கட்சியினரை காவல்துறையினர் தடுத்து நிறுத்தி கைது செய்தனர். குமரி மாவட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம் உதயமானது. (அக்.2) சென்னையில் நடுநாயகமான மயிலைப் பகுதியில் கழகத்தின் புதிய தலைமையகம் செயல்படத் தொடங்கியது.


முல்லைப் பெரியாறு அணையைக் காக்கவும், நீர் மட்டத்தை உயர்த்தவும், கூடங்குளம் அணுமின் திட்டத்துக்கு எதிராகவும், கழகத்தினர் பல்வேறு செயல்பாடுகளில் களமிறங்கினர். ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், பரப்புரைகள் என்று கழகத்தினர் தீவிர களப்பணியாற்றினர். சென்னையில் டிசம்பரில் சிற்பி ராசன் பங்கேற்ற எட்டு தெருமுனைக் கூட்டங்கள் டிசம்பரில் நடந்தன. 3 தமிழர் உயிர்காக்க சென்னை கோயம்பேடு பகுதியில் கழக ஆதரவாளர் திருச்சி சவுந்தர்ராசனுக்கு உரிமையான வளாகத்தில் 45 நாட்கள் தொடர்ந்து நடந்த 'உண்ணாவிரதம்' பரப்புரை இயக்கத்தில் கழகத் தோழர்கள் பெருமளவில் உழைப்பை வழங்கினர். முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பு குறித்து ஆராய உச்சநீதிமன்றமே ஒரு குழுவை அமைத்துள்ள நிலையில் தேசிய பேரிடர் ஆணையத்தின் குழுவை அணைப் பாதுகாப்பு குறித்து ஆராய பிரதமர் மன்மோகன்சிங் நியமித்தது. தமிழக உரிமைக்கு எதிரான சூழ்ச்சி என்று கண்டித்து அந்த குழுவை நியமித்து மன்மோகன் சிங் பிறப்பித்த ஆணையை கோவையில் கழகம் தீயிட்டுக் கொளுத்தியது. தோழர்கள் கைதானார்கள். மலையாள நகை நிறுவனம் ஒன்றுக்காக இசையமைப்பாளர் இளையராசா நடத்தவுள்ள சிறப்பு இசை நிகழ்ச்சியை நிறுத்தக் கோரி இளையராசா வீட்டின் முன் சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் ஆர்ப் பாட்டம் நடத்தினர்.

இடைவிடாத களப்பணி, போராட்டம், அறிவிக்கப்பட்ட போராட்டம், அறிவிக்கப்படாத போராட்டம், பரப்புரை என்று 2011 ஆம் ஆண்டு பெரியார் திராவிடர் கழகம் தனது களப்பணியைத் தொடர்ந்தது.

**– நமது செய்தியாளர்**

## இசையமைப்பாளர் இளையராசாவுக்கு சென்னை மாவட்டக் கழகம் வேண்டுகோள்

கேரளத்தில் வாழும் தமிழர்கள் மீது மலையாளிகள் தாக்குதல் நடத்தி, தமிழர்களை அகதிகளாக தமிழகத்துக்கு விரட்டி வரும் சூழ்நிலையில், இசையமைப்பாளர் இளையராஜா, 'மலபார் கோல்டு' எனும் மலையாளி நகை நிறுவனத்துக்கு சென்னையில் சிறப்பு இசை நிகழ்ச்சியை நடத்துகிறார். ஜெயலலிதா நடத்தும் 'ஜெயா' தொலைக்காட்சியும் இதில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது. சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் இதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் தபசி குமரன், உமாபதி, அன்பு தனசேகர், அய்யனார் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கடந்த 25 ஆம் தேதி தியாகராயர் நகரிலுள்ள இளையராசா இல்லத்துக்குச் சென்று, இந்த இசை நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கடிதத்தை அளித்தனர். அப்போது இளையராசா இல்லத்தில் இல்லை. வீட்டில் உள்ளவர்களிடம் கடிதம் வழங்கப்பட்டது.



PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# பெரியார் முழக்கத்துக்கு 1500 சந்தாக்கள்: சேலம் மேற்கு மாவட்டம் தீவிரம்

சேலம் மேற்கு மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் 24.11.2011 மாலை 4 மணிக்கு கொளத்தூர் பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், மாவட்ட தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட செயலாளர் சூரியகுமார் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட கழகப் பொறுப்பாளர்களும் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த தோழர்களும் கலந்து கொண்டு இயக்க வளர்ச்சிக் குறித்தும், பெரியார் முழக்க சந்தா, தெருமுனை பிரச்சாரம் நடத்துதல் ஆகியவைக் குறித்தும் விரிவாக கலந்துரையாடினர். கூட்டத்தில் இவ்வாண்டு பெரியார் முழக்கம் இதழுக்கு சேலம் மேற்கு மாவட்டம் சார்பில் 1500 சந்தாக்கள் சேர்க்க முடிவு செய்யப்பட்டது.

முல்லைப் பெரியாறு நீரில் தமிழக மக்களின் வாழ்வுரிமைகளை முடக்குகின்ற கேரள அரசும், உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு பிறகும் அதை செயல்படுத்தாமல் மௌனம் காத்து தமிழக மக்களின் வாழ்வுரிமைக்கு எதிராக எப்பொழுதும் நிலைப் பாடுகளை எடுக்கும் மத்திய அரசை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. வளர்ந்த உலகநாடுகளில் அணுமின் உலைகளை கைவிடும் நிலையில் இந்தியா உலக நாடுகளின் அணுஉலையின் கழிவுகளை கொட்டும் இடமாக தமிழகத்தை மாற்று வதோடு கூடங்குளம் மக்களின் உணர்வுகளை மதிக்காமல் தொடர்ந்து கூடங்குளம் அணு உலை திட்டத்தை கைவிட மறுப்பதை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. சேலம் மேற்கு மாவட்ட பிரச்சாரக் குழு பொறுப்பாளர்களாக கோவிந்தராசு, காவை இளவரசன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் நன்றி கூற மாலை 6 மணிக்கு கூட்டம் நிறைவுற்றது.

## மேட்டூர் சமத்துவபுரத்தில் பெரியார் நினைவு நாள்

23.12.2011 சேலம் மேற்கு மாவட்டம் சார்பாக மேட்டூர் சமத்துவபுரத்திலுள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, இளைஞரணி மாவட்ட பொறுப்பாளர் கிருட்டிணன், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சக்திவேல் உட்பட பல பகுதிகளைச் சார்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட தலைவர் கி.முல்லைவேந்தன் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார். மாவட்டத் தில் பல்வேறு பகுதிகளில் பெரியார் படம் வைத்து நினைவு நாள் அனுசரிக்கப் பட்டது. கொளத்தூரில் பெரியார் நினைவு நாளில் மாவட்ட கழக செயலாளர் சூரியகுமார் தலைமையில் பல்வேறு இடங்களில் தெருமுனை கூட்டங்கள் முல்லைப் பெரியாறு, கூடங்குளம் அணுமின் நிலையம் ஆகிய பிரச்னைகளை விளக்கி நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் உரை நிகழ்த்தினார்.

## மேட்டூரில் மலையாளிகளின் வர்த்தக நிறுவனங்கள் மூடல்

மேட்டூர், மேட்டூர் ஆர்.எஸ். ஆகிய பகுதிகளில் உள்ள கேரள மாநிலத்தவர் களுக்கு சொந்தமான முத்தூர் பைனான்சு, மணப்புரம் பைனான்சு போன்ற நிதி நிறுவனங்கள், பல்வேறு தேநீர் கடைகள், பேக்கரி, துணிக் கடைகள் போன்றவைகள் மூலம் வியாபாரம் செய்து வருகின்றனர்.

முல்லை பெரியாறு நீரில் தமிழக உரிமைகளை மறுக்கின்ற வகையில் கேரள அரசு நடந்து கொள்வதும் கேரளாவிலுள்ள தமிழர்களை கொடுமைப்படுத்து வதோடு, கேரளா செல்லும் அய்யப்ப பக்தர்கள் தாக்கப்படுவது ஆகியவைகளை கண்டித்து மலையாளிகளின் எந்த நிறுவனங்களும் இயங்கக் கூடாது என வலியுறுத்தி 23.12.2011 அன்று மலையாளிகளின் கடைகள் அடைக்கப்பட்டன. இதற்கான முயற்சிகளில் மாவட்ட தலைவர் முல்லை வேந்தன், மாவட்ட பொருளாளர் ஆசைத்தம்பி, முன்னாள் மாவட்ட தலைவர் மார்டின், மேட்டூர் நகர தலைவர் பாஸ்கர், மேட்டூர் நகர செயலாளர் சம்பத்குமார், முத்துக்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் குமரப்பா ஆகியோர் ஈடுபட்டு மலையாளிகளின் கடைகளை அடைக்கச் செய்தனர்.

## செயல்வீரர் தோழர் இளஞ்செழியன் முதலாம் ஆண்டு நினைவு நாள் பிரச்சார பொதுக் கூட்டம்

24.11.2011 மாலை 7 மணிக்கு கொளத்தூர் பெரியார் திடலில் மறைந்த செயல்வீரர் இளஞ்செழியன் முதலாம் ஆண்டு நினைவு நாளில் கொள்கை விளக்கப் பிரச்சார பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் தலைமை வகித்து உரையாற்றினார். த.செ. பழனிச்சாமி, மருத்துவர் உதயகுமார் முன்னிலை வகித்தனர். மாவட்ட தலைவர் முல்லைவேந்தன், காவை இளவரசன், காவை ஈசுவரன், ஈரோடு மாவட்ட தலைவர் நாத்திகசோதி ஆகியோர் உரைக்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

முன்னதாக மேட்டூரில் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சியும், சமர்பா குமரன் இன எழுச்சிப் பாடல்களைப் பாடினார். நிகழ்ச்சிக்கான முழு செலவுகளையும் மறைந்த தோழர் இளஞ்செழியனின் குடும்பத்தார் ஏற்றுக் கொண்டதோடு இயக்க வளர்ச்சி நிதியாக ரூபாய் இருபதா யிரம் கழகத் தலைவரிடம் இளஞ்செழியனின் தந்தையார் பெருமாள் வழங்கினார். கூட்டத்தில் கிருட்டிணகிரி மாவட்ட அமைப்பாளர் பழனி பல்வேறு பகுதிகளைச் சார்ந்த தோழர்களும், பொறுப்பாளர்களும், மகளிரணி தோழர்களும் திரளாக கலந்து கொண்டனர். கொளத்தூர் நகர செயலாளர் இராமமூர்த்தி நன்றி கூறினார்.

## சென்னையில் 38 ஆவது பெரியார் நினைவு நாள்

24.12.2011 அன்று அண்ணாசாலையிலுள்ள பெரியார் சிலைக்கும் சேத்துப்பட்டு பெரியார், அம்பேத்கர் சிலைக்கும் மாலை அணிவிக்கப்பட்டது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாவட்ட பொருளாளர் அன்பு தனசேகரன், தபசி குமரன், வழக்கறிஞர் குமாரதேவன், இரா. உமாபதி, ச. குமரன், அய்யனார் மற்றும் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

# மும்பையில் பெரியார் பிறந்த நாள் விழா




மும்பையில் கழகம் சார்பாக பெரியார் பிறந்த நாள் விழா, தாராவி கிராஸ் ரோடு, டாக்டர் அம்பேத்கர் பள்ளியில் மும்பை கழக பொறுப்பாளர் மா.கதிரவன் தலைமையில் நடை பெற்றது. தமிழகத்திலிருந்து தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் வழக்கறிஞர் பன்னீர்செல்வம், கோவை வடக்கு மாவட்ட செயலாளர் நாகராசு, கோவை மாவட்டமாணவர் கழக அமைப்பாளர் சிலம்பரசன், ஈரோடு பவானி சாகர் அமைப்பாளர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் தமிழர் நட்புறவுக் கழக அறங்காவலர் நாடோடி தமிழன் முன்னிலை வகித்தார்.

## வடசென்னையில் பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம்




பெரியாரின் 38 ஆவது நினைவு நாளையொட்டி 23.12.11 வெள்ளிக் கிழமை வடசென்னை பெர வள்ளூர் சதுக்கம், காமராசர் சிலையருகில் வட சென்னை மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் குமாரதேவன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் ஜனார்த்தனன் வரவேற்புரையாற்ற தொடர்ந்து மாவட்ட இணைச் செயலாளர் சி.பாஸ்கர் உரையாற்றினார். ம.தி.மு.க. கொள்கைப் பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத் “பறி போகும் தமிழர் உரிமைகள்” என்ற தலைப்பில் பேசினார்.

“கூடங்குளத்தில் நடப்பது என்ன?” தலைப்பில் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் பேசினார். “பெரியாரின் இன்றைய தேவை” என்ற தலைப்பில் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் பேசினார். நிகழ்வு தொடங்கும் முன் சம்பூகன் குழுவின் இன எழுச்சிப் பாடல்கள் நடைபெற்றது. திலீபன் நன்றியுரை ஆற்றினார்.

## புதுவையில் முரசொலி முகிலன் கலை நிகழ்ச்சி




புதுவை மாநிலம் அரியாங்குப்பம் கோட்டைமேட்டில் பெரியார் திராவிடர் கழக கோட்டை மேடு கிளை சார்பாக 24.12.11 அன்று பெரியாரின் 38 ஆவது நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. முரசொலி முகிலனின் ஈரோட்டு பூகம்பம் எனும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. பெருந் திரளாக மக்கள் கலந்து கொண்டு இரவு 11 மணி வரையிலும் பகுத்தறிவு நிகழ்ச்சியை கேட்டனர்.

## சிற்பிராசன் பிறந்த நாள் நன்கொடை

கழக பரப்புரையாளர் தோழர் சிற்பிராசன் தமது 58வது பிறந்த நாளையொட்டி (டிசம்பர் 25) வழக்கம் போல இவ்வாண்டும் கழக ஏட்டுக்கு ரூ.5000 நன்கொடை வழங்கி யுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 29th December 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.